# பொருளியல் நோக்கு

ஏப்ரல் 1995

வரவு செலவுத்திட்டம்

வுத்திட்டம்

செலவுத்திட்டம்

வரவு செலவுத்திட்டம்

வரவு செலவுத்திட்டம்

வரவு செலவுத்திட்டம்


வரவு செலவுத்திட்டம்

வரவு செலவுத்திட்டம்


## வரவு செலவுத்திட்டமும் பொருளாதார கொள்கையும்

மக்கள் வங்கி வெளியீடு


அரசாங்க வருவாய், செலவு மற்றும் பற்றாக்குறை, 1990-1995




வெளிநாட்டுக் கடன்களும் கொடைகளும்





பற்றாக்குறை நிதிப்படுத்தல்




உள்நாட்டுச் சந்தை கடன்படல்கள்

(வங்கியல்லாத மற்றும் வங்கி)





# வரவு செலவுத்திட்டமும் பற்றாக்குறை நிதிப்படுத்தலும்

## வ.செ.திட்ட அமைப்பு 1995-1997

பற்றாக்குறை நிதிப்படுத்தல்


(மொ.உ.உ. யின் % ஆக) 1995-1997




அரசாங்க வருமானம்

(மொ.உ.உ யின் % ஆக)


1995-1997




அரசாங்க செலவினம்

(மொ.உ.உ யின் % ஆக)

1995-1997




மூலம்: ஆண்டறிக்கைகள், இலங்கை மத்தியவங்கி, வரவு செலவுத்திட்ட உரை, 1995.

## பொருளியல் நோக்கு

மலர் 21    இதழ் 1    ஏப்ரல் 1995

330.5
1995

உள்ளே

### சிறப்புக் கட்டுரை / நிரல்

| | | |
|---|---|---|
| லால் ஜயவர்தன | 36 | சந்தை நோக்கிலான கொள்கைகள் : ஒரு மதிப்பீடு |

### விஷேச அறிக்கை

#### வரவு செலவுத்திட்டமும் பொருளாதாரக் கொள்கைகளும்

| | | |
|---|---|---|
| ஜே.பீ.கலேகம | 2 | வரவு செலவுத்திட்டமும் பொருளாதார கொள்கையும் |
| சுமனசிரி லியனகே | 12 | வ.செ.திட்டம் 1995: புதிய அரசாங்கத்தின் உபாயங்கள் |
| எச்.நிக்கலஸ் | 20 | பணவீக்கத் தடுப்பு உத்தி குறித்த ஒரு மதிப்பீடு |
| ஏ.வை.எஸ்.ஞானம் | 28 | வ.செ.திட்டமும் இலங்கையின் ஆடைக் கைத்தொழிலும் |
| ஹர்ஷ டி சில்வா | 30 | தனியார் முதலீடும் வ.செ.திட்டமும் |
| நரேசா துரைஸ்வாமி<br>சஜீ மெண்டிஸ் | 34 | சர்வதேச வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு : இலங்கை மீதான தாக்கங்கள் |

### அடுத்த இதழில்:


- ஊழியம், தொழில் வாய்ப்பு மற்றும் குடியகல்வு
- திறந்த பொருளாதாரமும் சிறு விவசாயிகளும்
- ஊழியச் சந்தைகள் குறித்த பொருளாதார கோட்பாடுகள்

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு ௨.
இலங்கை.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் ஒரு சமூகப்பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமல்ல. இக்கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.




# வரவு செலவுத்திட்டமும் பொருளாதார கொள்கையும்

கலாநிதி ஜே.பீ.கலேகம

1995ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டமானது வெறுமனே வருமானம், செலவு என்பவற்றுக் கிடையே சமநிலையை ஏற்படுத்துகின்ற ஒரு நிதியியல் நடைமுறை என்ற வகையில் ஆராயப்படுவதாக மட்டுமன்றி, நாட்டின் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு, பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி என்பவற்றுக்கு இதன் பங்களிப்பு எவ்வாறு உள்ளது என்பது பற்றியும் ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்டம் ஒரு வருட காலத்தைக் கொண்ட செயற்பாடாக இருப்பதனால், நீண்ட கால அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டிய பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய திறன் அதற்கில்லை என வாதிடப்படுகிறது. இதனால் வரவு செலவுத்திட்டம் முழு இங்கையினதும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குக் குறைந்தளவு தீர்வினையே வழங்க முடியும் என

எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், அரசாங்கத்தின். அடிப்படை அபிவிருத்தித் தத்துவம் வரவு செலவுத் திட்டத்தினூடாகப் பிரதிபலிக்கின்றது. வரவு செலவுத்திட்டத்தின் கொள்கைகளும், வழிமுறைகளும் நாட்டின் முதன்மைப் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன. இத் தீர்வு முயற்சிகளுக்கு வரவு செலவுத்திட்டம் எந்தளவில் பங்களிப்புச் செய்யமுடியும் என்பன போன்ற தகவல்களை வழங்குகின்றது.

## வரவு செலவுத்திட்ட அமைப்பு

1995 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டமானது மூலதனச் செலவினங்கள் மீது தாராளக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் அதே வேளையில் மீளவரும் செலவினங்கள் மீது கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. 1993, 1994 ஆம் ஆண்டுகளில் முறையே 14%, 27% அதிகரிப்பினைக் கொண்டிருந்த மீளவரும் செலவினங்கள், 1995 இல் 5% மட்டுமே அதிகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. மூலதனச் செலவினம் 1992, 93, 1994ஆம் ஆண்டுகளில் முறையே 17%, 10%, 2% ஆக அதிகரித்துச் செல்ல, 1995 இல் 48% மாக அதிகரித்துள்ளது. கடந்த ஆறு வருட காலத்தில், ஏற்பட்ட மிகக்கூடிய அதிகரிப்பு இவ்வாண்டு ஏற்பட்டுள்ளது. மூலதனச் செலவு மீதான பாரிய ஒதுக்கீடு பொது முதலீட்டை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, 1995 இல் பொது முதலீடு மொ.உ. உற்பத்தியில் 8.1% ஆக உயர்வடையும் 1989 ஆம் ஆண்டிலிருந்து நோக்கும் போது இவ்வாண்டே மிகக்கூடிய விகிதத்தை கொண்டுள்ளது. கடந்த காலங்களில்– குறிப்பாக, 1989-1994 வரையுள்ள ஒவ்வோர் ஆண்டிலும் – மொ.உ.உற்பத்தியில் பொது முதலீட்டின் பங்கு முறையே 8.2%, 6.1%, 6.8%, 5.9%, 6.8%, 5.7% என வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. மூலதனச் செலவு அதிகரிப்பின் விளைவாக 1995 இற்கான மொத்த பாதிடப்பட்ட செலவினம் 242,605 மிலியன் ரூபாவாக – 1994 ஐக் காட்டிலும் 20% – அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு வீதமானது 1992, 1993, 1994ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட முறையே 7%, 13%, 17% அதிகரிப்புடன் ஒப்பிடும் போது உயர்வானதாகும்.

1995ஆம் ஆண்டிற்கான அரசாங்க வருவாயாக 149,045 மில்லியன் ரூபா எதிர்பார்க்கப் படுகிறது. இது, 1994ஆம் ஆண்டைக் காட்டிலும் 26% அதிகரிப்பைக் காட்டுகிறது. கடந்த ஐந்து ஆண்டுக் காலத்துடன் ஒப்பிடும் போது – அதாவது 1990-94 வரையுள்ள ஒவ்வோர் ஆண்டிலும் முறையே 25%, 13%, 17%, 12%, 14% அதிகரிப்புடன் ஒப்பிடும் போது– 1995 இல் அதிகரிப்பு வீதம் உயர்வானதாகும். மேலும், அரசாங்க வருவாயை மொ.உ. உற்பத்தியின் வீதாசாரமாகக் கூறுவதாயின் 1992, 1993, 1994ஆம் ஆண்டுகளில் முறையே 20.2%, 19.8, 20.6% ஆகவும் 1995 இல் 20.9% ஆகவும் இருந்து வந்துள்ளதனை காண முடிகிறது. மீள்வரும் செலவினம் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் அரச வருவாயில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பு என்பவற்றின் விளைவாக இந் நிதி ஆண்டில் 3,526 மில்லியன் ரூபா நடைமுறைக் கணக்கு மிகை ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இத்தொகை மொ.உ.உற்பத்தியின் 0.5% ஆகும்.

1995ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 84,630 மில்லியன் ரூபா ஆகும். இத்தொகை 1994ஆம் ஆண்டிற்கான திருத்திய பற்றாக் குறையைக் (83,501 மில்லியன் ரூபா ) காட்டிலும் 1% உயர்வானதாகும். இது நாட்டின் மிக உயர் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையாகப் பதியப்பட் டிருப்பினும் மொ.உ.உற்பத்தியின் விகிதாசாரமாக நோக்குமிடத்து இது 7.5% மாகவே எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விகிதாசாரமானது 1993, 1994ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுமிடத்து (8.1%, 10.2%) குறைவானதாகவும், 1992ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து (7.3%) சற்று உயர்வானதாகவும் காணப்படுகின்றது. பற்றாக்குறையில் 38% வெளிநாட்டுக் கடன் பெறுகைகளாலும், 62% உள்நாட்டுக் கடன் பெறுகைகளாலும் நிதியீட்டம் செய்யப்படுகின்றது. இந்நிதியீட்டம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது பெருமளவு வேறு பாட்டினைக் கொண்டிருக்கவில்லை. அதாவது, 1994ஆம் ஆண்டில் பற்றாக்குறையில் 33% வெளிநாட்டுப் பெறுவனவுகள், நன்கொடைகள் என்பவற்றினாலும், 67% உள்நாட்டுக் கடன் பெறுவனவு மூலமும் நிதியீட்டம் செய்யப்பட்டது. எவ்வாறெனினும், இது 1993ஆம் ஆண்டிலிருந்து வேறுபட்டதாகும். அப்போது பற்றாக்குறையில் 55% உள்நாட்டுக் கடன் பெறுவனவு மூலமும் 45% வெளிநாட்டு நிதியிடல் மூலமும் நிதியிடப்பட்டது.

வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை பாரிய அளவில் இருந்து வருவதனால் அதனைக் குறைப்பதற்கு அரசாங்கம் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும் எனவும் ஒருவர் கருதலாம். அவ்வாறு குறைப்பதற்கான தேவை உணரப்பட்டும் கூட, அதனை நடைமுறைப் படுத்துவதில் சில இடையூறுகளை அரசாங்கம் எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம். உதாரணமாக, கடந்த அரசாங்கத்தின் வாக்குறுதிகளின் கடப்பாடுகள், மற்றும் வாக்குகளைப் பெறுவதற்காக தேர்தல் விஞ்ஞாபனங்களில் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு என்பவற்றின் காரணமாக செலவினைக் குறைக்க முடியாதுள்ளது. 1995 இற்கான மீளவரும் செலவினத்தைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், ஓய்வூதியங்களுக்காக 37% மும், பயணம், பொது நிர்வாகச் செலவினங்களுக்காக 25% மும் பொதுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவிற்காக 29% மும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, மொத்த மீளவரும் செலவினத்தில் 91% மேற்கூறிய செலவுகளுக்காகவும், மீதி 9% சேம நலச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் சம்பளங்கள், ஓய்வூதியம், வட்டிக் கொடுப்பனவுகள் தவிர்க்கப்பட முடியாதவையாகும். பயணம், பொது நிர்வாகச் செலவுகளில் சிக்கனத்தை ஏற்படுத்துவதும் சாத்திய மாகலாம். எனவே, மீளவரும் செலவின் பெரும்பகுதி (66%) தவிர்க்கப்பட முடியாததாகும். பெரும்பாலும் கோதுமை மா மீதான மானியம் 500 கோடி ரூபா சேமிக்கப்படக்கூடிய சாத்தியம் உள்ளது. மூலதனச் செலவைப் பொறுத்தவரையில் 35%

அரசாங்க கடனின் மீள் கொடுப்பனவிற்காகவும், மீதி பொருளாதார, சமூக, நிர்வாக உள் கட்டமைப்புக்களில் முன் னேற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் ஒதுக்கப் படுகின்றது. இவ்வகை மூலதனச் செலவினங்களை பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி என்பவற்றின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாத வகையில் குறைத்துக் கொள்வது கடினமான தாகும்.

செலவு குறைக்கப்பட முடியா விடில், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான ஒரே வழியாக வருமான அதிகரித்தலையே கொள்ளவேண்டும். உண்மையில் நேரில் வரிகளான விற்பனைப் புரள்வு வரி, கலால் வரி, தபாற்கட்டணம், டீசல் பாவனையுடைய மோட்டார் கார் என்பவற்றின் மூலம் 26% வரி வருமானத்தைத் திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இறுக்கமான நிதிநிலைமையிலும் கூட, தனியார்துறை ஊழியர்களில் மாதாந்த வருமான மட்டமாக 12,000 ரூபா வரை பெறுபவர்களுக்கு அரசாங்கம் இன்னமும் ஏன் வரிவிலக்கினை அளிக்கின்றது என்பது புரியாத புதிராகவே உள்ளது. வீட்டுத்துறையி னருள் 30% தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற நாடுகளில் மாதாந்தம் 5000 ரூபாவுக்கும் கூடுதலாக உழைக்கின்றவர்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிப்பதன் மூலம் சிறு அளவு நிதித்தன்மையே பேணப்படுகின்றது. சம்பளங்கள் திருத்தியமைக்கப்பட்டதன் பின்னர் அரசாங்கத்துறை ஊழியர்கள் கணிசமான அளவு வருமான அதிகரிப்பைப் பெற்றுள்ளனர். 1996 ஜனவரியிலிருந்து இவர்களுக்கு மேலும் சம்பள அதிகரிப்பு ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாதாந்தம் 1750 ரூபாவிலிருந்து, 19,500 ரூபாவரை வேறுபடுகின்ற சம்பள அளவைக் கொண்ட அரசாங்கத் துறையில் 94 வகையான சம்பள வகுப்பினர் உள்ளனர். இவற்றில் 43 வகுப்பினர் ஆகக் குறைந்தது மாதாந்தம் 5000 ரூபாவிற்கும் கூடுதலாகச் சம்பளத்தைப் பெறுகின்றனர். உதாரணமாக, அமைச்சின் செயலாளருக்கு 16000-17000 ரூபா வரை சம்பளமாக கிடைக்கின்றது. இவ்வகைச் சம்பளங்கள் நாட்டின் வருமான மட்டத்துடன் ஒப்பிடும் போது குறைவானவையல்ல. அத்துடன் அரச ஊழியர்கள் வரி விடுதலையை அனுபவிப்பதற்குப் போதிய நியாயத்தினையும் காண முடியா துள்ளது. அரசாங்கத் துறையின் சம்பளங்கள், ஓய்வூதியங்கள் என்ற வகையில் ஒரு வருடத்திற்கு 5000 கோடி ரூபா செலவாகின்றது. ஆகக் குறைந்த வரிவீதம் என்ற அடிப் படையில் 5% வரியேனும் இவ் வருமானத்தின் மீது அறவிடப்படின் அதன்மூலம் 250 கோடி ரூபாவை வருவாயாகத் திரட்டிக் கொள்ள முடியும். எனவே, அரச ஊழியர்கள் மீதான வரி விலக்கை நீக்கிவிடின் மாதாந்தம் 12000 ரூபாவுக்கும் குறைவாகச் சம்பளம் பெறுபவருக்கான வரிவிலக்கிற்குக் குறைந்தளவு நியாயங்களே இருக்க முடியும். இது மேலதிகமாக 200 கோடி ரூபா வரி வருமானத்தை அளிக்கும்.

பொதுவாக, பொருளாதார தாராளமயமாக்கல் என்பது இலாபங்கள், வருமானங்கள் என்பவற்றின் மீதான வரிகளை (நேர் வரிகள்) குறைப்பதனூடாகவும், நேரில் வரிகளாகிய விற்பனைப் புரள்வுவரி, கலால் வரி என்பவற்றில் அதிகரிப்பினை ஏற்படுத்து வதனூடாகவும் செயற்படுத்தப் படுகின்றது. இதன்படி, மொத்த வரி வருமானத்தில், நேர்வரிகளின் விகிதாசாரம் 1984 இல் 18.3 வீதத்திலிருந்து 1993 இல் 15.6 வீதமாகக் குறைவடைந்துள்ளது. வரவு செலவுத்திட்டத்தில் வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இதன் விகிதாசாரம் மேலும் வீழ்ச்சியடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. படிப்படியாக உயர்ந்து செல்லும் வரி நீதித் தன்மையுடையது என்ற மரபு ரீதியான கோட்பாடு காலாவதியாகிய கோட்பாடாகக் கருதப்படலாம். (இதில் நீதித்தன்மை என்பது செலுத்தும் தகுதி விதிக்கேற்ப வரிச்சுமை விதிக்கப்பட வேண்டும் என்பதாகும்). வருமான உருவாக் கத்திற்காக நேரில் வரிகள் வருடா வருடம் அதிகரித்துச் செல்லும் புதிய போக்கினை மீளாய்வு செய்ய வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. இந்நேரில் வரிகளின் சுமையின் பெரும்பகுதியை வருமானம் குறைந்த வகுப்பினரே சுமக்கின்றனர்.

எவ்வாறெனினும், வரவு செல வுத்திட்டத்தில் எடுதததுக்காட்டப்பட்ட வாறு 1995 இன் இறுதியில் இறைக் கொள்கையின் மொத்த விளைவுகள் அமையும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. எதிர்வு கூறல்களுடன், விளைவுகள் ஒத்துச் செல்வதற்கு மிகக் குறைவான சந்தர்ப்பங்களே உள்ளன. உதார ணமாக, 1992, 1993 ஆகிய இரு ஆண்டு களிலும் மொத்தச் செலவினங்கள் எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் குறைவாகவே இருந்துள்ளன. அதே வேளையில், 1991, 1994 ஆகிய இரு ஆண்டுகளிலும் இதற்கு மாறாக இருந்துள்ளது. பொதுவாக மூலதனச் செலவு எப்போதும் ஒரு நிலையாக - அதாவது, எதிர்பார்க்கப்பட்டதிலும் குறைவாக - இருந்து வந்துள்ளதுடன், மீளவரும் செலவினங்கள் ஒவ்வொரு வருடமும் எதிர்பார்க்கப்பட்டதிலும் உயர்வாக இருந்து வந்துள்ளன. இதனடிப்படையில் 1991 ற்கும் 1994 ற்கும் இடைப்பட்ட நான்கு ஆண்டுகாலத்தில், உண்மையான மூலதனச் செலவு, ஆரம்ப எதிர்பார்ப்பிலிருந்து 15% குறைவான தாகவும், மீளவரும் செலவு 10% உயர்வாகவும் இருந்துள்ளது. குறை நிரப்பு பிரேரணைகளை நீக்கினால் மட்டுமே மீளவரும் செலவினங்களை ஆரம்ப எதிர்புகூறல்களுக்குச் சமனாக ஓரளவு வைத்துக்கொள்ள முடியும். ஆனால், இது இலகுவான செயற்பாடு அல்ல. 1996 ஜனவரியிலிருந்து அரசாங்கத்துறை ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படும் என்ற பிரேரணை வரவு செலவுத்திட்டத்தின் பின்னர் அறிவிக்கப்பட்டதும், பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்கள் தமது சம்பளத்தை மீளாய்வு செய்யுமாறு கோரியதும் மேலதிக செலவிற்கான ஏனைய பிரேரணைகளுக்கு முன்னோடியாக அமையக் கூடும்.

அரசாங்க வருவாய் தளம்ப லடைந்தருப்பதனையும் முக்கியமாக குறிப்பிட வேண்டியுள்ளது. உதா ரணமாக, 1991 இலும் 1992 இலும் பெற்ற வருமானங்கள் எதிர்பார்க்கப் பட்டதை விடவும் உயர்வானவையாகும்.

ஆனால் , 1993 இலும், 1994 இலும் இது சிறு அளவில் வீழ்ச்சியடைந் துள்ளது. 1993 இல் தேர்ந்தெடுக்கப் பட்ட விற்பனை வரிகளும் இறக்குமதித் தீர்வைகளும் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்திலும் குறைந்த வரு மானத்தையே வழங்கியுள்ளன. இதன் விளைவாக, எதிர்பார்க்கப்பட்ட நடைமுறைக் கணக்கு மிகை, பற்றாக் குறையாக மாறுவதும், எதிர்பார்க்கப் பட்ட வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை இலக்குகளிலிருந்து மாறுவதும் இலங்கையில் வழக்கமாகிவிட்டது. 1993, 1994 ஆகிய இரு ஆண்டுகளினதும் வரவு செலவுத் திட்டம் நடைமுறைக் கணக்கில் மிகையைக் கொண்டிருப் பதற்குத் திட்டமிடப்பட்டதாயினும், இறுதியில் அவை பற்றாக்குறையிலேயே முடிவடைந்தன; 1993 இல் எதிர்பார்க்கப்பட்ட 4540 மில்லியன் ரூபா மிகை, 2456 மில்லியன் ரூபா பற்றாக்குறையுடன்முடிவடைந்தது. இதே நேரம் 1994 இல் எதிர்பார்க்கப்பட்ட 6267 மில்லியன் ரூபா மிகை 12,203 மில்லியன் ரூபா பற்றாக்குறையாக மாறியது. இதேபோல 1992, 1993 ஆகிய ஆண்டுகளில் உண்மையான வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை எதிர்பார்க்கப்பட்ட பற்றாக்குறையிலும் குறைவாக இருந்தது. மாறாக, 1994 இல் உண்மையான பற்றாக்குறை (83,501 மில்லியன் ரூபா) எதிர்பார்க்கப்பட்ட பற்றாக்குறையிலும் (65,845 மில்லியன் ரூபா) உயர்வாக இருந்தது.

பற்றாக்குறையை நிரப்புவதற் கான நிதி ஆதாரங்களும் வரவு செலவுத் திட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டதிலிருந்து வேறுபட்டிருந்தது. 1991, 1992 காலப் பகுதியில் உள்நாட்டுக் கடன்கள் ஆரம்ப எதிர்வு கூறலை விட அதிகரித்திருந்தது. மாறாக 1993 இல் இவை மிகக் குறைவாக இருந்தன. மீண்டும் 1994 இல் ஆரம்ப எதிர்வு கூறலை விட இரு மடங்கு உயர்வாக இருந்தன. மறு புறம், வெளிநாட்டுக் கடன்களும், நன்கொடைகளும், 1991 ற்கும் 1994 ற்கும் இடைப்பட்ட நான்கு ஆண்டு காலப் பகுதியில் இலக்குகளை விடக் குறைவாகவே பெறப்பட்டுள்ளன.

மொத்த உள்நாட்டு உற்பத்தி யின் விகிதாசாரமாக வருமானம், செலவு, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை என்பனவும், மேற்கூறிய நிகழ்வுகள் காரணமாக மட்டுமன்றி, மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் மாற்றமடைந்துள்ளன. 1995 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியில் 7.5% என எதிர்பார்க்கப்பட்டது. இதற்கான எடுகோளாக மொ.உ.உற்பத்தி இவ்வாண்டில் 6% மாக வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் மொ.உ. உற்பத்தி, மேற்கூறப்பட்ட அளவிலும் குறைவடையுமாயின் – உதாரணமாக 5% எனில் - பற்றாக்குறையின் விகிதா சாரம் மேலும் உயர்வடைய முடியும்.

## பேரண்டப் பொருளாதார உறுதித் தன்மை

ஒரு வரவு செலவுத்திட்ட மானது, பணவீக்கத்தைக் குறைப்பதன் ஊடாகவும், நாட்டின் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் பற்றாக் குறையின் அளவினைக் குறைப்பதன் ஊடாகவும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை அடைய முற்படுகிறது. இந்நோக்கினை அடைவதற்காக இவ்வாண்டு வரவு செலவுத்திட்டத்தில் பணவீக்கத்தை 13% திலிருந்து 8% மாகவும், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் பற்றாக் குறையை மொ.உ.உற்பத்தியின் (1994 இன்) 7.3% இல் இருந்து 1995 இல் 6.4% ஆகக் குறைத்து குறிப்பிடக் கூடியளவு பேரண்டப் பொருளாதார உறுதித்தன்மையை ஏற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட உரையின்போது இது பின் வருமாறு குறித்துரைக்கப்பட்டது: "பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை அடைந்து கொள்வதற்கும், எமது பொருளா தாரத்தைக் கட்டியெழுப்புவதற்குமான திறவுகோல் சிறந்த இறைக்கொள்கை ஆகும். இடையறாது ஏற்படுகின்ற உயர்ந்தளவு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள், விலை மட்டத்தையும், வட்டி வீதத்தையும் உயர்த்தி, உள்நாட்டு சேமிப்பு ஆற்றலைக் குறைப்பதுடன், வளங்களை உற்பத்தி ரீதியான பொருளாதார செயற்பா டுகளிலிருந்து வெளியே தள்ளி விடுகின்றது". எவ்வாறெனினும், 1995 ற்கான வரவு செலவுத்திட்டப் பாற்றாக்குறையானது, 1994 ஆம் ஆண்டைக் காட்டிலும் உயர்வாக இருந்தபோதும் இந்த பாரியளவான பற்றாக்குறை (மொ.உ.உற்பத்தியில் 7.5%), எதிர்பார்க்கப்பட்டது போல பேரண்டப் பொருளாதார உறுதித்தன்மைக்குப் பங்களிப்புச் செய்யுமா என்பது சந்தேகமே. உதாரணமாக, 1992 இல் மொ.உ.உற்பத்தியில் 7.3% மாக பற்றாக்குறை வரவு செலவுத்திட்டம் இருந்த போது, அது விலை 11 சதவீதத்தால் அதிகரித்ததைத் தடுத்து நிறுத்தவில்லை. மேலும், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மட்டும பணவீக்கத்திற்குக் காரணம் அன்று என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறைக்குப் புறம்பாக, வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளும் அதனுடன் இணைந்த ஏனைய செயற்பாடுகளும் விலைமட்ட உயர்விற்குக் காரணமாயின. உதாரணமாக டீசல், பெற்றோல், மதுபான வகை, புகையிலை என்பவற்றில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு, விற்பனைப் புரள்வு வரி 5% திலிருந்து 6% மாக உயர் வடைந்தமை, நீண்ட கால நுகர்வுப் பொருட்கள் மீதான வரி அதிகரிப்பு, தபாற்கட்டண உயர்வு என்பவற்றைக் கூறலாம். இவற்றுக்குச் சமகால நிகழ்வாக கோதுமை மா, பருப்பு, சீனி, மண்ணெண்ணெய், உரவகை, ஆடைகள், துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், விவசாய இயந்திர உதிரிப்பாகங்கள், டயர், ரியூப் என்பவற்றின் விலைகள் இறக்குமதித் தீர்வைக் குறைப்பினூடாகக் குறைக்கப் பட்டன. இந்த விலைக் குறைப்பினால் விலை அதிகரிப்பு எந்தளவுக்கு தோற்கடிக்கப்படும் என்பது கேள்விக்குரிய விடயமாகும். 1996 இலிருந்து நடைமுறைக்கு வரவுள்ள அரச ஊழியரின் சம்பள உயர்வும் பொருளாதாரத்தின் பணவீக்க அமுக்கத்தை அதிகரிக்கச் செய்யும்.

மூலதன உட்பாய்ச்சல்கள், வங்கிக் கடன் விரிவாக்கம் என்பவற்றின் காரணமாக நாணயக் கூட்டுக்களில் ஏற்படும்அதிகரிப்பும்

பணவீக்க அழுத்தத்தை ஏற்படுத்தும் மற்றுமோர் காரணியாகும். 1990 இலிருந்து உயர்வட்டி வீதம் நிலவிய போதும், தனியார் துறைக்கான வங்கிக் கடன்கள் வருடாந்தம் 20% தினால் அதிகரித்துள்ளது. தற்போதுள்ள குறைவான வட்டி வீதத்தில் வங்கிக் கடனுக்கான கேள்வி மேலும் அதிகரிக்கப்படலாம். வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் மூலம் வங்கிக் கடன் விரிவாக்கம் மேலும் பலப்படுத்தப்படலாம். வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் 1994 இல் 11 மில்லியன் சிறப்பு எடுப்பனவு உரிமைகளாக இருந்தது. இது 1995 இல் 160 மில்லியன் சிறப்பு எடுப்பனவு உரிமைகளாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டுச் சேமிப்புக்கள் மூலம் பெருமளவில் முதலீடு ஏற்படும் என்பதற்கு மிகக் குறைந்தளவான ஆதாரங்களே உள்ளன. ஆனால், வேகமாக வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரங்களான கிழக்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்நாட்டுச் சேமிப்பு மொ.உ. உற்பத்தியின் 30% திற்கு மேலாக உள்ளதுடன், இது மொ.உ.உற்பத்தியில் 30% – 40% வரையான உயர்ந்தளவு முதலீட்டை ஏற்படுத்துவதற்குச் சாத்தியமானதாகவும் உள்ளது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். இந்நாடுகளில் சீனா தவிர்ந்த ஏனைய நாடுகளில், அண்மைய ஆண்டுகளில் குறைந்தளவு வேகத்திலேயே விலை மட்ட அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது; இந்நாடுகள் வரவு செலவுத்திட்ட மிகையை அல்லது குறைந்தளவு பற்றாக்குறையையே கொண்டுள்ளன; இப்பின்னணியில் இந்நாடுகள் உயர்ந்தளவு சேமிப்பு மட்டத்தைக் கொண்டிருப்பது நியாயமானதே. இலங்கையில் உள்நாட்டு சேமிப்பு குறைந்த மட்டத்திலேயே உள்ளது; 1989-91 காலத்தில் மொ.உ.உற்பத்தியில் 12% மாக தேக்கமடைந்திருந்த சேமிப்பு வீதமானது 1992-93 இல் 15% மாக அதிகரித்துள்ளது. இதன்படி, அடுத்துவரும் காலங்களில் முக்கியமாக கவனம் கொள்ளவேண்டிய விடயமாக உள்நாட்டுச் சேமிப்பை உச்சப்படுத்தல் அமையும்.

பணவீக்கம் தொடர்பாக மத்திய வங்கி இதுவரையில் இறுக்கமான நாணயக் கொள்கையையே பின்பற்றி வந்துள்ளது. இறுக்கமான நாணயக் கொள்கையானது உயர்வட்டி வீதங்களுக்கூடாக தனியார்துறை முதலீட்டைப் பாதிக்கக்கூடியதாகும். வரவு செலவுத்திட்டத்தின் பின்னர் கொடுகடனுக்கான வட்டி வீதத்தினை இரு அரச வங்கிகளும் குறைத்துள்ளதைத் தொடர்ந்து ஏனைய வங்கிகளும் குறைத்துக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச் சந்தர்ப்பத்தில் நாணயக் கொள்கை பற்றிய தெளிவு அவசியமானதாகும். அதாவது, அமுல்படுத்தப்படுகின்ற நாணயக் கொள்கையானது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினையா அல்லது பொருளாதார வளர்ச்சியையா நோக்காகக் கொண்டுள்ளது என்பது முக்கியமானது.

மேலும், சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு பற்றாக் குறையைக் குறைப்பது என்பதும் நடைமுறைச் சாத்தியமற்றதாகும். இதில் முக்கியமான கூறு வர்த்தகப் பற்றாக்குறையின் வரவுசெலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டது – அளவு 1070 மில். சி.எ.உ. களாக இருந்து வருவதாகும். இது 1994 இல் எதிர்வு கூறப்பட்ட 1062 மில். சி.எ.உ. உடன் ஒப்பிடும்போது சற்று உயர்வானதாகும். சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் அடிப்படையில் ஏற்றுமதிப் பெறுமதியின் அளவு 1995 இல் 13.3 % மாக அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்பட்டது. இது 1994 இல் 7.9% ஆக இருந்தது. கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகள் அதிகரித்து வருகின்ற இவ்வேளையில் இந்த இலக்கு யதார்த்தமானதாக தோன்றுகிறது. 1992, 1993 ஆகிய ஆண்டுகளில் முறையே 20.3%, 17.4% ஏற்றுமதிப் பெறுமதி அதிகரித்துள்ளது. எவ்வாறெனினும், தேயிலை விலையும் சிறு ஏற்றுமதிகளும் வீழ்ச்சியடைந்து செல்வது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். அதே வேளையில், இறக்குமதிகளின் பெறுமதி சிறப்பு எடுப்பனவு உரிமையின் அடிப்படையில் 9.3% மாக மட்டுமே அதிகரிக்கும் என வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதி தொடர்பான இவ்வெதிர்வு கூறல் யதார்த்த நிலைக்கு முரண் பட்டதாகும். குறிப்பாக, கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் (1990-1994) இறக்குமதிகள் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 13.5% அதிகரித்துள்ளன. எனவே, இறக்குமதி அளவு மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியங்களே உள்ளன. உள்நாட்டில் பணவீக்கநிலை தொடர்வதனாலும், பாண், கோதுமை என்பன மீது மானியம் அமுல் படுத்தப்படுவதாலும், இறக்குமதித் தீர்வைகளில் குறைப்புச் செய்யப் பட்டதாலும், இறக்குமதிகள் மேலும் அதிகரிக்க முடியும். கோதுமை மீதான மேலதிகச் செலவாக 90 மில். சி.எ.உ. எதிர்பார்க்கப்பட்டது. தொகையடிப் படையிலும், விலை அடிப்படையிலும் ஏற்பட்ட உயர்வே இச் செலவிற்குக் காரணமாகும்.

பொருளாதார வளர்ச்சி

1995 இற்கான பொருளாதார வளர்ச்சி 6% ஆக இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இது 1994 இல் எதிர்வு கூறப்பட்ட 5.5% வளர்ச்சியைக் காட்டிலும் உயர்வானதாகும்; ஆனால், 1993 இன் வளர்ச்சி வீதமாகிய 6.9% உடன் ஒப்பிடும் போது குறைவானதாகும். அதி கூடிய வளர்ச்சி வீதமாக 7.8% 1997 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வளர்ச்சி வீதங்கள் யாவும் விவசாயம், கைத்தொழில், சேவைகள் போன்ற பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் 1994ஆம் ஆண்டைக் காட்டிலும் மிக வேகமாக வளர்ச்சியடையும், மற்றும் முதலீட்டு விகிதாசாரம் உயர்வடையும் என்ற எடுகோள்களின் அடிப்படையிலேயே எதிர்வு கூறப்பட்டன. எதிர்காலப் போக்குகள் குறித்த தகுந்த ஆதாரங்களின்றி, இவ்வெடுகோள்கள் யதார்த்தமானவையா இல்லையா என்பதைக் கூறுவது கடினமாகும். ஆனால், 1989-94 காலப் பகுதி வளர்ச்சி மாதிரியின் முக்கிய அம்சம் கைத்தொழில்துறை, சேவைகள் துறை என்பவற்றின் பொதுவான வளர்ச்சிப் போக்கில் ஒவ்வொரு வருடமும அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளதாகும். ஆனால், முழுப் பொருளாதாரமும் உயர் வளர்ச்சி வீதத்தை அடைய வேண்டுமாயின், விவசாயத்துறையில் கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்படுவது அவசியமாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால்,

விவசாயத்துறையின் வளர்ச்சியின்றி முழுப் பொருளாதார வளர்ச்சி சாத்தியமற்றதாகும். இக்காலப் பிரிவில் இரு வருடங்களில் (1990, 1993) வளர்ச்சி வீதம் 6% தையும் விஞ்சியிருந்தது. 1990 இல் அரிசி உற்பத்தியில் 21% அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக விவசாய உற்பத்தி 8.5% மாக உயர்வடைந்தது. பொருளாதாரம் 1990 இல் 6.2% ஆக வளர்ச்சியடைவதற்கு இதுவே காரணமாகும். அடுத்து, 1993 இல் தேயிலை உற்பத்தி 30% ஆல் அதிகரித்ததால் விவசாய உற்பத்தியில் 5.0% வளர்ச்சி ஏற்பட்டது. இது 1993 இன் பொருளாதார வளர்ச்சியை 6.9% திற்கு உயர்த்தியுள்ளது. ஏனைய நான்கு வருட காலத்திலும், பொருளாதார வளர்ச்சி 6% திலும் குறைவாக இருந்தபோது, ஒன்றில் விவசாய உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்தது; அல்லது குறைவான வளர்ச்சி வீதத்தைக் கொண்டிருந்தது. உதாரணமாக, 1989, 1992 ஆகிய வருடங்களில் விவசாய உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்தது. அதேபோல 1991, 1994 ஆகிய வருடங்களில் விவசாயத்துறை 2% மட்டுமே வளர்ச்சி அடைந்துள்ளது. 1995 இல் விவசாயத்துறை 4% ஆக வளர்ச்சி, யடையும் என எதிர்வு கூறப்பட்டது. உண்மையில், விவசாயத்துறை வளர்ச்சி முதலீட்டில் மட்டும் தங்கியிருக்கவில்லை; எதிர்வு கூற முடியாத காலநிலையிலும் அது தங்கியுள்ளது.

உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயத்துறை ஒரு அத்தியாவசியமான முன்தேவையாக இருந்தபோதிலும், இத்துறை இன்னமும் தகுந்த அளவு கவனத்தினைப் பெறவில்லை. நாட்டில் விவசாயத் துறை ஒரு பின்னடைவு நிலைக்குத் தள்ளப்பட்டமைக்குச் சில காரணிகள் பங்களிப்புச் செய்திருந்தன. அவையாவன:

(அ) கடந்த தசாப்தம் முழுவதும் ஹெக்டயாருக்கான நெல் விளைச்சல் 3400 – 3500 கிகி ஆக நிலையாக இருந்துள்ளதுடன், 1985 தொடக்கம் நெல் உற்பத்தி தேக்கமடைந்துள்ளமை.

(ஆ) உப உணவுப் பயிர்களான மரவள்ளி, சீனிவத்தாளை, குரக்கன், வெங்காயம், உருளைக்கிழங்கு, சோயா அவரை, கௌபீ, எள்ளு, நிலக்கடலை என்பவற்றின் உற்பத்தி குறைவடைந்தமை;

(இ) கடந்த இருபது வருடங்களில் தெங்கு உற்பத்தி 12% இனாலும், இறப்பர் உற்பத்தி 27% இனாலும் வீழ்ச்சியடைந்துள்ளன. உள்ளூர் உற்பத்தியின் பற்றாக்குறை காரணமாக 1993இல் முதல் தடவையாக தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டமை;

(ஈ) தேயிலை விலைகள் சாதகமாக இல்லாமையினாலும் உற்பத்திச் செலவு உயர்வினாலும் 83 தனியார் தேயிலை ஆலைகள் மூடப்பட்டமை;

(உ) பழவகை, பாக்கு, எள், கோப்பி, சாதிக்காய், ஏலம், ஏனைய எண்ணெய் விதை வகைகள், கொக்கோ உற்பதி, பப்பாளி ஆகிய சிறு விவசாய ஏற்றுமதிகளின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளமை.

இவை தொடர்பான ஆய்வுகள், தேயிலை வர்த்தகம், கைத்தொழில் மீதான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையுடன் தொடர்புபடுத்தி மேற்கொள்வதுடன், அவற்றுக்கான செயற்படு திட்டங்களையும உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இந்நிலைமைகளின் கீழ் சிறப்பு வழிமுறை ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் மூலம் விவசாயத்துறை எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள் தீர்க்கப்பட வேண்டும்.

கோதுமை மாவினதும், பாணினதும் விலைக் குறைப்புக்கள் நடந்தேறியதைத் தொடர்ந்து (ஜூலை 1994, ஜனவரி 1995) விவசாயதத்துறை மேலும் பின்னடைவைச் சந்தித்தது. பதிலீடுகளாக உள்ள அரிசியினதும், கோதுமை மாவினதும் விலைகளிற் கிடையில் இக்காலத்தில் ஓர் இடைவெளி அவதானிக்கப்பட்டுள்ளது. விலைக் குறிப்பின் விளைவாக மாவிற்கான கேள்வி 36% தால் அதிகரித்துள்ளது. இந்தக் கேள்வி அதிகரிப்பானது அரிசியின் கேள்வியைக் குறைத்து, அதன் வழியாக விலைக்குறைப்பிற்கு வழி வகுத்துள்ளது. அரிசிக்கான விலை குறைவடைந்து வருகின்ற அதே நேரம், டிராக்டர் பாவனை, பசளை, விவசாய இரசாயனங்கள், வங்கிக் கடன் என்பவற்றுக்கு ஊடாக நெல் உற்பத்திச் செலவும் அதிகரித்து வருகின்றது. எனவே, அரிசி விலைக் குறைவும், நெல் உற்பத்திச் செலவு அதிகரிப்பும் சமகால நிகழ்வுகளாகையால் நெல் உற்பத்தியாளருக்கான தூண்டுதல் காரணிகள் இக்காலத்தில் குறைவாகவே செயற்பட்டுள்ளன எனலாம். நெல் உற்பத்தி வீழ்ச்சியடையின் கோதுமை இறக்குமதி அதிகரிக்கும். இது வெளிநாட்டுச் செலாவணியில் செலவினை ஏற்படுத்தும். இத்துடன் நெல் உற்பத்தியையே பிரதான செயற்பாடாகக் கொண்டுள்ள உழவர் விவசாயத்துறை, வறுமை நிலைக்குத் தள்ளப்படும். மேலும், நெல் உற்பத்திக்கான புனருத்தாரணம் அல்லது புத்துயிரூட்டல் என்பது, நெற்செய்கையுடன் தொடர்பான உற்பத்தியாளர் மானியத்தை வேண்டி நிற்பதாக அமையலாம். நெல் உற்பத்தியை அதிகரிப்பது என்பது, வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிப்பது, உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது, நெல் விவசாயி களது வருமானத்தை உயர்த்துவது என்பவற்றின் அடிப்படையில் அவசியமானதாகும். ஆனால், இச்கொள்கை, மாவிற்கான மானியத்தைத் தொடர்வது என்ற நீண்டகால பொருளாதார அக்கறைக்கு எதிரான செயற்பாடாக அமையலாம். எனினும், நெல் உற்பத்தி தொடர்பான புத்துயிரூட்டல் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படின், குறைந்த வருமான வகுப்பினருக்குப் பரிகாரம் வழங்கி அதன் மூலம் உணவு முத்திரைத்திட்டத்திலும், சமுர்த்தி செயற்றிட்டத்திலும் சில பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்ள முடியும்.

தாராள வர்த்தகக் கொள்கை உப உணவுப் பொருள் உற்பத்தி மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என்பதை உறுதிப் படுத்துவது அத்தியாவசியமாகும்.

மலிந்த விலையிலான கோதுமை மாவும், பாணும் வறியவர்களின் உணவுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவே அமையும். குறிப்பாக அது மரவள்ளி, சீனி வத்தாளை, என்பவற்றின் உற்பத்தியில் உடனடி வீழ்ச்சியை ஏற்படுத்தும். இதேபோல உணவுப் பண்டங்கள் மீதான குறைந்தளவு இறக்குமதித் தீர்வைகளும், உணவு, மரக்கறி மீதான தாராள இறக்குமதிக் கொள்கையும் உள்ளூர் உற்பத்திகள் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். உப உணவுப் பொருட்கள், மரக்கறிகள் என்பவற்றின் உள்நாட்டுப் பற்றாக்குறைக்கான பரிகாரம் இறக்குமதியல்ல; மாறாக, இத் துறைகளில் அரச தலையீட்டுடன் கூடிய சிறந்த சந்தைப்படுத்தல் வசதி, போக்குவரத்து வசதி, கடன் வசதிகள் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும்.

### பாதுகாப்பு எதிர், சுதந்திரமான வர்த்தகமும்

பொருளாதார அபிவிருத்திக்கான சுதந்திரமான சந்தை பற்றிய அணுகுமுறையானது, குறைந்த பட்ச அளவிலான அரச தலையீட்டுடன் கூடியதாக அமையவேண்டுமென சர்வதேச நிதி நிறுவனங்களினால் பலமாகச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தினை வரவு செலவுத்திட்ட உரையில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது: " எமது அரசாங்கத்தின் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாக்கலுக்கு தொடர்ந்து நிலவி வரும் உயர்ந்தளவிலான பாதுகாப்புகள் பெரும் அச்சுறுத்தலாக அமையும். பாதுகாப்புக் கொள்கை காரணமாக இழந்த தொழில் வாய்ப்புக்களின் அளவு, புதிதாக உருவாக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் அளவினை விட உயர்வாக உள்ளது".

மறுபுறம், பாதுகாப்புக் கொள்கை தொழில் வாய்ப்புக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அதே வேளையில், புதிதாக, தொழில் வாய்ப்புக்களைப் உருவாக்கி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கான ஆதாரங்களும் உள்ளன. அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சுதந்திரமான சந்தைப் பொருளாதாரங்கள் முரண்பட்டதாக இருப்பினும், உண்மையாகவே நல்ல ஆதாரங்களை வழங்கியுள்ளன. இந்நாடுகள் தமது விவசாயம், கைத்தொழில், வேலைவாய்ப்பு என்பன குறித்த ஒரு வகையான பாதுகாப்புக் கொள்கையை பல்வேறு வழிகளில் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் கடைப்பிடித்து வந்துள்ளன. இறக்குமதிக் கோட்டாக்கள் "தன்னிச்சையான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்" என விளக்கம் கொடுக்கப்பட்டு, குறிப்பாக யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மோட்டார் கார், உயர் ரக உதிரிப்பாகங்கள், குவார்ட்ஸ் மணிக்கூடுகள், உருக்கு மற்றும் கம்ப்யூட்டரால் இயக்கப்படும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றின் இறக்குமதி மீது ஒரு வகை எல்லையை அல்லது வரையறையை ஏற்படுத்தின. சில சுங்க நடைமுறைகளின் பிரகாரமும், சுகாதார, பாதுகாப்பு ஒழுங்கு விதிகளின் பிரகாரமும் தடைசெய்வதாகக் கூறிக்கொண்டு ஜேர்மனி பியர் என்ற குடிவகையின் இறக்குமதிக்கும், யப்பான் வர்ணம் தீட்டும் சாயங்கள், கெடாமல் பாதுகாக்கும் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிகளுக்கும் தடை விதித்துள்ளன.

இதே போல அமெரிக்காவில் ஏவுகணைகளுக்கும், ஏனைய ஆயுதங்களுக்கும் அரசாங்கத்தின் உதவிக் கொள்கை என்ற பெயரில் சில பேதப்படுத்தல்கள் நிலவி வருவதனை அவதானிக்க முடிகிறது. அத்துடன் அமெரிக்கா தனது உள்நாட்டு மோட்டார் சைக்கிள் உற்பத்திக் கம்பனியாகிய கார்லி டேவிட்சன்ஸ் கம்பனியின் உற்பத்திக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக யப்பானிலிருந்து இறக்குமதியாகும் மோட்டார் சைக்கிள் மீது உயர் இறக்குமதித் தீர்வையை விதித்துள்ளது. மேலும், அனைத்து வளர்ச்சியடைந்த நாடுகளும், பல்நார் ஒப்பந்தத்தின் கீழ் வளர்முக நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் உடுதுணிகள், தைத்த ஆடைகள் மீது இறக்குமதிக் கட்டுப்பாட்டை விதித்துள்ளன. இது தமது உள்நாட்டுக் கைத்தொழில் களைப் பாதுகாப்பதற்கான ஒரு தந்திரோபாயமாகும்.

ஆசியாவின் பல வளர்முக நாடுகள் - குறிப்பாக கிழக்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகள் - இறக்குமதிப் பதிலீடு, கைத்தொழிற் பாதுகாப்பு என்பவற்றின் மூலமே தமது கைத்தொழிலையும், ஏற்றுமதியையும் மேம்படுத்தின. உதாரணமாக, கொரியா 1950 களில் இறக்குமதிப் பதிலீடு மூலம் தனது கைதொழில் மயமாக்கல் கொள்கையை ஆரம்பித்தது. பின்னர் இரண்டும் கலந்த நிலையில், புதிய கைத் தொழில்களுக்காக இறக்குமதிப் பதிலீட்டையும், வளர்ச்சியில் முதிர்ச்சியை அண்மித்த கைத் தொழில்களுக்காக ஏற்றுமதி மேம்பாட டினையும் கொண்ட கைதொழில் அபிவிருத்திக் கொள்கைகளைக் கடைப்பிடித்தது. மேலும், அது 1980 களிலும் 1990 களிலும் மூலதனப் பொருட்களினதும் இடைத்தர மூலப் பொருட்களினதும் உள்ளூர் உற்பத்திகளைப் பாதுகாப்பதன் மூலம் ஏற்றுமதிகளின் இறக்குமதி உள்ளீடுகளை குறைதது்க் கொண்டது. 1989-91 காலப் பகுதியில், அமெரிக்காவின் நிர்ப்பந்தத்துக்கு இணங்க 268 (மீன்பிடி, கால்நடை) பண்ணை உற்பத்திகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டைத்தளர்த்த கொரியா தீர்மானித்தது. எவ்வாறெனினும் கொரியாவின் பாதுகாப்புவாதக் கொள்கைகளும் வழிமுறைகளும் அதன் உயர்ந்தளவான பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் பங்களிப்புச் செய்துள்ளன எனலாம்.

இலங்கையிலும் கூட, செயல் திறனுடன் இயங்கிவந்த தனியார் துறைசார்ந்த - உதாரணமாக, சவர்க்காரம், சிகரட், புகையிலை, பிஸ்கட், சொக்கலேட், ஆடைகள் போன்ற - சில கைத்தொழில்களும் அதேபோல சீமெந்து, கடதாசி போன்ற அரசதுறைக் கைத்தொழில்களும் தொடக்கத்தில் அரச பாதுகாப்புக் கொள்கையின் கீழ் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களாக ஆரம்பிக்கப்பட்டவையாகும். பின்னர் இவை ஏற்றுமதிகளை மேற்கொள்ளத் தொடங்கின. எனவே, குழந்தைப் பருவத்தில் உள்ள பல கைத் தொழில்கள் செயல் திறன் கொண்ட கைத்தொழில்களாக வளர்ச்சியடையும்

வரையில் அவற்றுக்குப் பாதுகாப்பு அவசியமாகும். மற்றும் சில கைத்தொழில்கள் சாத்தியமான தொழில்களாக வளர்ச்சியடையும் வரையில் மலிவான இறக்குமதிப் பொருட்களிலிருந்து அவற்றுக்கு பாதுகாப்பளிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. நாட்டின் முன்னணித் தனியார் துறைக் கைதத்ழில் அதிபர்கள் குறைந்த தீர்வைகளுடன் கூடிய சுதந்திரமான சந்தை முறையானது தயாரிப்புத் தொழில் துறைக்குச் சாதகமாக அமையமாட்டாது என்பதையும், இதனால் பொருளாதாரத்தின் ஏற்றுமதித் துறை பாதிப்படையும் எனவும் ஏற்கனவே வலியுறுத்தி யிருந்தனர். வரவு செலவுத்திட்ட உரையில் இதுபற்றி "உயர்ந்தளவு பாதுகாப்புக்கள் பொருளாதார வளர்ச்சியைக் குறைக்கும்; அத்துடன் உற்பத்தியிலும் பார்க்க வர்த்தக நடவடிக்கைகளை கவர்ச்சிகரமான வையாக உருவாக்கும் " எனக் கூறப்பட்டிருந்தது. இலங்கை கைத் தொழில் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் வரவு செலவுத் திட்டம் குறித்து கருத்து வெளியிடும் போது, ஒரு தொழில் முயற்சி ஏற்றுமதி களுக்காக உற்பத்தி செய்வதிலும் பார்க்க இறக்குமதி செய்வது அதிகளவு அலாபகரமானதாகும்" என்று கூறியுள்ளார். "தாராள பொருளா தாரக் கொள்கையினால் மனோபலங் குன்றிய நிலையில், புதிய கைத்தொழில்கள் தோன்ற முடியாது; அதேநேரம் இருக்கின்ற கைத் தொழில்கள் கூட தொடர்ந்து நிலைத்து நிற்பதற்கும் வாய்ப்பில்லை. இந்த நிலையில் தனியார் துறையில் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கு வதற்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன" என்றும் அவர் கூறியுள்ளார்.

அங்டாட் அறிக்கையில் (1993-94) சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஒரு விடயத்தினை இங்கு எடுத்துக்கூறுவது பொருத்தமானதாகும். உயர் வளர்ச்சியைக் கொண்ட குறை அபிவிருத்தி நாடுகளில் பல தாராள பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை. அதே வேளையில், சில குறைவிருத்தி நாடுகள், பரந்தளவில் வர்த்தக தாராளக் கொள்கையையும் நாணயப் பெறுமதி இறக்கத்தையும் மேற்கொண்டிருந்தன. எனினும், இந்நாடுகள் குறைந்தளவான மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதத்தினையே கொண்டிருக்கின்றன. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், உறுதியான சில நமபிக்கைகள் பற்றி மீள் பாிசோதனை செய்வதும், பொருளாதாரத்தில் தனியார்துறைத் தொழில் அதிபர்களுடன் கலந்தாலோசனை செய்து தாக்கமுள்ள கைத்தொழிற் கொள்கை ஒன்றை உருவாக்குவதுமே தற்போதைக்கான விவேகபூர்வமான செயலாக தென்படுகிறது.

## அரச துறை எதிர் தனியார் துறை

"சந்தையை நெறிப்படுத்துவதில் அரசாங்கத்தின் கட்புலனாகும் கரங்களை விட, சந்தையின் கட்புலனாகாக் கரங்களே சிறந்தவை" என்ற கருத்து தற்பொழுது நிலவி வருகின்றது. அரசாங்கத்தின் தோல்வி, திறந்த பொருளாதாரத்தின் நன்மைகள், உற்பத்திச் சாதன ஒதுக்கீட்டில் விலைப்பொறிமுறையின் செயல்திறன், தனியார்துறையின் ஆற்றல், தனியார்துறையை விதேசியக் கம்பனிகளுடன் இணைப்பதற்கான தேவை என்பன போன்ற விடயங்கள் இன்று முக்கியத்துவம் பெறுகின்றன. பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தக் கருத்துக்களுக்கு அடிப்படையாக அமைந்தவை இரண்டு காரணிகளாகும்: ஒன்று திட்டமிட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட பொருளாதாரம் மற்றும் சோவியத் மாதிரியிலான சோஷலிஷம் என்பவற்றின் தோல்வியாகும். மற்றையது, கடன் பளுவினால் அவதியுறும் வளர்முக நாடுகள் மீது சர்வதேச நிதி நிறுவனங்கள் கொண்டுள்ள செல்வாக்கு ஆகும். 1950 களிலும் 1960 களிலும் அபிவிருத்திப் பொருளியலில் அரசின் பங்கு நிர்ணயகரமானதாக கருதப்பட்டு வந்தது; ஆனால் இன்றைய கோட்பாடுகள், சமூக பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு அப்பால் பொருளாதார அபிவிருத்தியிலும் கைத்தொழில்மயமாக்கத்திலும் அரசாங்கத்தின் பங்கு குறைவாக இருக்க வேண்டும் என்பதனையே ஆதாிக்கின்றன. எவ்வாறெனிலும், இந்த அணுகுமுறையானது, அரசாங்க தலையீடு கூடுதலாகக் காணப்பட்டு அதனூடாக அபிவிருத்தியை முன்னெடுத்துச்சென்ற அல்லது முன்னெடுத்துச் செல்கின்ற ஜப்பான், கொரியா, தாய்வான் போன்ற நாடுகளின் வெற்றிகரமான பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறையை நிராகரிப்பதாக அல்லது குறைவாக மதிப்பிடுவதாக தோன்றுகிறது.

மேற்போந்த நாடுகள் உயர்ந்த வேலைவாய்ப்புடன் கூடிய பொருளாதார வளர்ச்சி வேகம், மற்றும் சிறந்த வருமானப் பகிர்வு என்பவற்றை சாதித்துக் கொள்வதில் ஈட்டிய வெற்றியானது சுதந்திரமான சந்தை, முறைமையினால் ஏற்பட்டது அல்ல; மாறாக, அரச தலையீட்டுடன் கூடிய நெறிப்படுத்தப்பட்ட சந்தை முறைமையினால் ஏற்பட்டதாகும். இந்நாடுகளில் அரசியல் தலையீடானது, தனிப்பட்ட நிறுவனங்களின் குறுகியகால நலன்களுக்காக மட்டுமன்றி, நீண்டகால நலன்களின் அடிப்படையில் சந்தைச் சக்திகள் செயற்படுவதை உறுதிப்படுத்துவதாக அமைந்தது. நீண்ட கால முதலீட்டைப் பொறுப்பேற்கும் தனியார்துறையின் விருப்பங்கள், கைத்தொழில் செய்முறைகளை நவீனமயமாக்குதல், கைத்தொழில் இயலளவு அதிகரிப்பு என்பவற்றுக்குத் தடையாக உள்ள காரணிகளை நீக்குவதற்கும், தலையிடாக் கொள்கையின் கீழ் முதலீட்டாளருக்குக் கவர்ச்சிகரமற்றதாக இருந்த துறைகளை இலாபமுடையதாக ஆக்குவதற்கும், வளங்கள் மீதான தனது அதிகாரத்தை விரிவுபடுத்துவதற்கும், நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும், பங்காளராக இணைந்து செயற்படுவதற்கும் அரசாங்கம் தலையிடுகின்றது. அரசாங்க தலையீடு பல்வேறு வடிவங்களில் இடம்பெறலாம். சில தெரிவு செய்யப்பட்ட கைததொழில் களுக்கு மானிய அடிப்படையில் கடன் கொடுத்தல், வைப்பு வீதங்களைக் குறைவாக வைத்திருத்தல், கடனுக்கான உச்சவரம்பை நிர்ணயித்தல், உள்நாட்டு இறக்குமதிப் பதிலீடுகளுக்கு பாதுகாப்பு அளித்தல், வீழ்ச்சி கண்டுவரும் தொழில்களுக்கு மானியம் வழங்குதல், அரசாங்க வங்கிகளைத் தாபித்தல்,

ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மீதான பொது முதலீட்டை ஏற்படுத்துதல், ஏற்றுமதிச் சந்தைப்படுத்தல் நிறுவனங்களை விருத்தி செய்தல், பொதுத்துறை / தனியார் துறைக்கிடையே தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல் போன்ற வகைகளில் அது தலையிட முடியும்.

1994ஆம் ஆண்டிற்கான அங்டாட் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி என்பன குறித்த அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுள்ளது:

"இந்த பொருளாதாரங்களில், பிரமாண்டமான பொருளாதார சாதனைகள் முழுவதும் சந்தை அற்புதத்தால் ஏற்பட்டவையல்ல. இலாப நோக்கமே தொழிலை முன்னெடுத்துச் சென்ற ஊக்கக் காரணி என்பதிலும், பொருளாதார அபிவிருத்தி முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு முதலாளித்துவ தொழில் முயற்சியாளர்களே பொறுப்பாக இருந்துள்ளனர் என்பதிலும் எவ்வித சந்தேகமும் இல்லை. இவ்வகையான முதலீட்டாளர் வர்க்கத்தின் இடையறாத இயங்கியல் செய்முறையின் அபிவிருத்தியை அரசாங்கத்தின் தலையீடின்றி அடைந்திருக்க முடியுமா என்பது கேள்விக்குரிய விடயமாகும். இந்நிலையில் சம்பந்தப்பட்ட நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகள் தலையிடாக் கொள்கை முதலாளித்துவத்திலிருந்து விலகிச் சென்றுள்ளவை என நோக்கப்படக் கூடாது. மேலும், இக்கொள்கைகள், கைத்தொழில் முதலாளித்துவம் என்ற இன்னுமொரு செயற்பாட்டுடனும் தொடர்புபடுகின்றது. எனவே, அரச ஆதரவுடனான கைத்தொழில் முதலாளித்துவம் என இதனைக் குறிப்பிட முடியும். கைத்தொழில்மயமாக்கலின் ஜப்பானிய மாதிரியானது இவ்விரு மாதிரிகளையும் பின்பற்றியதாக உள்ளதால் இப்பிராந்தியத்தின் ஏனைய பகுதிகளுக்கும் இக்கைத்தொழில் மயமாக்கல் கொள்கைகள் பிரயோகிக்கப்படக் கூடியதாகும்".

இங்கு சீனாவின் நிலை பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். 1994ஆம் ஆண்டின் தரவுகளின்படி உலகிலேயே ஆகக்கூடிய பொருளாதார வளர்ச்சியை (11%) அடைந்து கொண்ட நாடு சீனா ஆகும். இது சுதந்திரமான சந்தைப் பொருளாதாரத்தினால் அன்று ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை அமைப்பினால் அடையப்பட்டதாகும். மேலும், அரச முயற்சிகள் திறமையற்றவை என்றும் அவை தனியார்மயப்படுத்தப்பட வேண்டும் என்றும் மற்றுமோர் கருத்து பரந்தளவில் நிலவி வருகின்றது. பெரும் எண்ணிக்கையான அரச முயற்சிகள் செயல்திறனற்றவை என்பது உண்மைதான்; ஆனால், இவற்றின் திறமையின்மை பற்றி ஆழமாக ஆராயுமிடத்து, அரச உடமை என்பதனால் திறமையற்றதாக உள்ளது என்பதற்குரிய ஆதாரங்களை விட தவறான நிர்வாக முறைகளால் அவ்விதம் உள்ளன என்பதற்கான ஆதாரங்களே கூடுதலாக உள்ளன. நிர்வாகச் சீர்கேட்டிற்கு அரசியல் தலையீடுகளே காரணம் எனப்படுகின்றது. பல அரச முயற்சிகள், அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வெற்றிகரமாக வளர்ந்து வந்துள்ளன. உதாரணமாக, பிரான்சில் ஏறக்குறைய 2000 அரச உடைமை முயற்சிகள் இலாபத்தில் இயங்குகின்றன. சிங்கப்பூரில் அரச உடைமை, அரசுடன் இணைப்புச் செய்யப்பட்ட முயற்சிகளின் வெளியீட்டுப் பெறுமதி நாட்டின் மொ.உ. உற்பத்தியில் 20% ஆக உள்ளது. தாய்வானில் 10% அரசாங்க வருவாய், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் இலாபத்திலிருந்து திரட்டப்படுகின்றது. இந்தோனேசியாவில் முழுத் தேயிலைத் தோட்டங்களும் அரசுக்குச் சொந்தமானவையாகவே உள்ளன. அத்துடன், அவை கூடுதல் இலாபத்தையும் உழைக்கின்றன. சீனாவிலும் கூட 1.3 மிலியன் தொழில் முயற்சிகள் இலாபகரமான நிலையில் மிகத் திறமையாகச் செயலாற்றி வருகின்றன.

சோஷலிஷத்தின் போர்வையிலான கண்மூடித்தனமான தேசியமயமாக்கல் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கோ அல்லது சமுக நலன்களை நிறைவு செய்வதற்கோ எந்தவகையிலும் பங்களிப்புச் செய்ய முடியாது; அதேபோல சந்தையின் போர்வையிலான தனியார்மயமாக்கலும் இந்த மாற்றங்களை எடுத்து வர முடியாது. எவ்வாறெனினும், அரச உடைமை சமுகரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்று; உதாரணமாக அருமையானதும் புதுப்பிக்கப்பட முடியாததுமான வளங்களைப் பாதுகாப்பதற்கும், தனியார் தனியுரிமைகளைத் தடுப்பதற்கும், வறியவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கும் (அபாய ஏதுக்களை எதிர்நோக்குவதும், பாரிய நிதி முதலீடுகள் தேவைப்படுவதுமான) தனியாரால் பொறுப்பேற்கப்பட முடியாததுமான பாரிய தொழில் துறைகளைப் பொறுப்பேற்பதற்கும் அரச உடைமையை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. பொதுவான விதியாக, சமுகச் செலவினங்கள் எதுவும் ஏற்படாதவகையில் மிகத் திறனுடன் இயங்கும் முயற்சிகளை தனியாருக்குக் கையளிக்கவேண்டும் எனவும், வெளிவாரி விளைவுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவ்வகைத் தொழில் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபடவேண்டும் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தனியார் துறைக்குப் போட்டியாக அரச தொழில் முயற்சிகள் தாபிக்கப்பட வேண்டும் என்பதனையும், இது சமுக நலன் கருதிச் செய்யப்படவேண்டும் என்பதனையும் அனுபவங்களும் எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, உணவுப் பொருள் வர்த்தகத்தில் கூட்டுறவு மொத்த விற்பனவுஸ்தாபனத்தினையும், மருந்துப் பொருள் விற்பனையில் மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தினையும், காப்புறுதி தொடர்பாக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தையும், வங்கியியலில் இலங்கை வங்கி, மக்கள் வங்கியையும், எரிபொருள் தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் குறிப்பிட முடியும். அரசாங்கமானது தனியார் முயற்சிகளைக் கட்டுப்படுத்தக்கூடாது. மாறாக, சிறந்த தொழில்களை நடாத்திவரும் தனியாரை உற்சாகப்படுத்தியும், திறன் குறைந்த தொழில்களை ஊக்கமிழக்கச் செய்தும் ஒரு சிறந்த வழியில் முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக

அரச தலையீடு அமையவேண்டும்.

சமூக நீதி

வேலைவாய்ப்பு உருவாக்கம், சிறந்த வருமானப் பகிர்வு என்பவற்றினூடாக நீதித்தன்மையை உறுதிப்படுத்துவதில் தனியார்துறை முக்கிய பங்கு வகிக்கும் இடங்களில், வரவு செலவுத்திட்டம் சந்தைத் தோழமைக் கொள்கையினை (சுதந்திரமான திறந்த சந்தை) எதிர்பார்க்கிறது. "நாங்கள் வறுமைக்கும் வேலையின்மைக்கும் எதிரான போரைப் பிரகடனப் படுத்தியுள்ளோம். எனவே, மக்கள், பொருளாதார வளர்ச்சியின் பலாபலன்களை அனுபவிக்க முடியும். இப்பொருளாதார வளர்ச்சியை, சுதந்திரமான திறந்த பொருளாதாரக் கொள்கையூடாக மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் எங்களுக்கு பின்னால் நின்ற கிழக்காசிய பொருளாதாரங்கள், தற்போது வருமானம், வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றில் உயர் நிலையை அடைந்துள்ளதுடன், வறுமையையும் குறைத்துள்ளன. இதற்குக் காரணம் தனியார்துறை அபிவிருத்திக் கொள்கைகளும், சந்தைத் தோழமைக் கொள்கைகளும் பின்பற்றப் பட்டமையாகும். அவர்களின் வருமானம் சிறந்த முறையில் பங்கீடு செய்யப்பட்டிருப்பதுடன்,• வேலையின்மைப் பிரச்சினையும் நிஜமாகவே ஒழிக்கப்பட்டுவிட்டது." வரவு செலவுத்திட்ட எதிர்பார்ப்பின் படி, தனியார் துறை, ஏற்கனவே வேலையற்றிருக்கும் ஊழியர் படையில் 14% அல்லது 840,000 பேருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டும். அத்துடன், அரசாங்கத் துறை வேலைவாய்ப்பில் நிறை மட்டத்தை அடைந்தபடியால், தனியார் துறையே வருடாந்தம் அதிகரிக்கும் 120,000 பேருக்கும் வேலை வாய்ப்பினை வழங்கவேண்டும்.

தனியார் துறை பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கினை வகிக்க வேண்டியுள்ள அதே வேளையில், அத்துறையினால் எதனை சாதிக்க முடியும் எதனைச் சாதிக்க முடியாது என்பது குறித்து நாம் யதார்த்த ரீதியாகச் சிந்திக்க வேண்டும். உதாரணமாக, சுதந்திரமான சந்தை நிலைமையில், எமது நாட்டில் நிலவுகின்ற பாரிய அளவான வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை தனியார்துறை தீர்க்க முடியும் என எதிர்பார்ப்பது மிகையானதாகும். கடந்த 17 வருட காலத்தில் – அதாவது சுதந்திரமான சந்தைச்சக்திகள் செயற்பட்ட காலத்தில் இப்பிரச்சினையை தீர்த்து வைக்க முடியவில்லை. பதிலாக அடுத்து வந்த ஆட்சியாளர்களுக்கே 840,000 வேலையற்றோர் பிரச்சினையை அவர்கள் விட்டுச் சென்றுள்ளனர். மேலும், அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சுதந்திரமான சந்தைகள் கூட தற்போதுள்ள 3.5 கோடி வேலையற்றோரின் பிரச்சினையைத் தடுத்து நிறுத்த முடியாதளவுக்கே செயற்படுகின்றன. பிரான்ஸ், இத்தாலியில் வேலையின்மை அதிகரிப்பு வீதம் 12.3% திற்கும், இங்கிலாந்தில் 9% திற்கும், ஜேர்மனியில் 8% திற்கும் உயர்வடைந்துள்ளது.

சகல துறைகளும் இணைந்த ஒரு செயற்பாட்டின் மூலமே பாரிய அளவிலான வேலைவாய்ப்பினை உருவாக்க முடியும். அத்துடன் அரச, தனியார், உள்ளூர் அதிகாரசபைகள், மக்கள் கழகங்கள் ( கூட்டுறவு) சமுர்த்தி, சர்வோதயம் போன்ற மக்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் மூலமும் வேலைவாய்ப்பினை உருவாக்க முடியும். உதாரணமாக, கூட்டுறவுச் சங்கங்கள் மரக்கறி, பழவகை உற்பத்தி, பதனிடல், சந்தைப்படுத்தல் என்பவற்றிலும், பாற்பண்ணைத்தொழிலிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. சமுர்த்தி, சர்வோதயம் என்பன தெங்குநடுகை, மீள்நடுகை என்பவற்றுக்கு உழைப்பைத் திரட்ட வேண்டும். உள்ளூர் அதிகார சபைகள், உள்நாட்டில் கிடைக்கப் பெறுகின்ற மூலவளங்களைக் கொண்டு ஆக்கப்படும் தயாரிப்புத்துறையில் தனியார் துறையினருடன் பங்காளர்களாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டும். அரசாங்கமும், மத்திய வங்கியும் வங்கிக் கடன்களை மானிய அடிப்படையிலும், உத்தரவாத அடிப்படையிலும் வழங்குவதன் மூலம் அனைத்து செயற்பாடுகளுக்கும் ஆதரவு வழங்க வேண்டும்.

சுதந்திரமான சந்தைச் சக்திகளும் கூட, வருமானப் பகிர்வினை மேலும், ஏற்றத்தாழ்வான தாக்கும் வகையிலேயே செயற்பட்டுள்ளன. சுதந்திரமான சந்தைச் சக்திகள் செயற்பட்ட பல வளர்முக நாடுகளில் வருமானம் ஒரு சிலரின் கைகளில் குவிந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. உயர்ந்த வருமானம் பெறும் 10% தினர், மொத்த வருமானத்தில் 40% திற்கு மேலான வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இந்நிலைமையை பிரேசில், சிலி, மெக்சிக்கோ, குவாட்டமாலா, பனாமா, பொட்ஸ்வானா, கென்யா, சிம்பாவே, லெசோத்தோ போன்ற நாடுகளில் அவதானிக்க முடிகிறது. இலங்கையில் 1977/78 இல் தாராள பொருளாதாரக் கொள்கை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து வருமான ஏற்றத்தாழ்வு அதிகரித்து வந்துள்ளது; வருமானம் பெறுபவர்களில் ஆகக் குறைந்த 40% தினர் பெறுகின்ற வருமான விகிதாசாரம் 1973 இல் 15% மாக இருந்து 1985/86 இல் 7% மாகக் குறைவடைந்தது. அதே வேளையில் உயர்மட்ட வருமான வகுப்பினராகிய 10% தினர் பெற்ற வருமானம் இதே காலப் பகுதிகளில் 30% திலிருந்து 49% மாக அதிகரித்துள்ளது. கொள்கைகள் ஆய்வு நிறுவனம் வருமான ஏற்றத் தாழ்வினை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: "1970 களில் அனைத்து வருமானப் பிரிவினரிடையேயும் மெய்வருமானத்தில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும், 1978/79 லிருந்து கீழ்மட்ட 50% தினர் மெய்வருமான வீழ்ச்சியினால் கஷ்டப்படுகிறார்கள்."

தனியார் துறை முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் தலையிட்டாலேயொழிய, அதிகளவு சமத்துவத்துடன் கூடிய வருமானப் பகிர்வு, உயர் வேலைவாய்ப்பு என்பவற்றுடன் கூடிய உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை சுதந்திரமான சந்தைப் பொருளாதாரம் ஒன்றினால் மட்டும் ஏற்படுத்தி விட முடியாது. தனியார் துறை திறனற்றதாகச் செயற்படும் இடங்களிலும், உயர் சமூக

( 33 ஆம் பக்கம் பார்க்க)

# வரவு செலவுத்திட்டம் 1995 : புதிய அரசாங்கத்தின் உத்திகள்

சுமனசிரி லியனகே
(பொருளியல் துறை, பேராதனை பல்கலைக்கழகம்)

வரவு செலவுத்திட்டமானது எதிர்பார்க்கப்பட்ட செலவுகளை நிதியீட்டம் செய்வதற்கான வருமான உருவாக்கல் நடைமுறையை எடுத்துக் கூறுவது மட்டுமன்றி, அடுத்து வரும் ஆறு வருட காலப் பகுதியில் புதிய அரசாங்கம் இலங்கைப் பொருளாதாரத்தை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப் போகின்றது என்ற முக்கியமான அம்சத்தையும் எடுத்துக் கூறுவதாக உள்ளது. 1995 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் அரசாங்கம் முன்வைத்த கொள்கைகளை எவ்வாறு நடைமுறைப் படுத்தப் போகின்றது என்பதை எதிர்பார்க்கும் வகையில் அமைந்தது. எவ்வாறெனினும் பொதுசன முன்னணி அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்ட தெரிவுகளே உள்ளன. அத்துடன் செல்ல வேண்டிய பாதை ஒடுங்கியதாகவும், இடர் மிகுந்ததாகவுமே உள்ளது. வருடாந்தம் 5% வளர்ச்சியைப் பொருளாதாரம் அடைந்தபோதும், இன்னமும் பொருளாதாரத்தின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும் வருடாந்தம் ஊழியச் சந்தையில் 100,000 பேர் வரையில் புகுந்து கொள்கின்றனர். இவ்வருடத்திற்கான சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 100 கோடி சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கு (6700 கோடி ரூபா) மேலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1994 இன் முடிவில் மொத்தப் பொதுப்படு கடனின் அளவு 548,563 மில்லியன் ரூபாவாகும். வெளிநாட்டுச் சொத்துக்கள் ஆறு மாத கால இறக்குமதியைச் சமாளிப்பதற்குப் போதுமானதாகும் என பொதுஜன முன்னணி அரசாங்கம் கருதிக் கொண்டபோதும், சர்வதேச வர்த்தகத்தின் தளம்பல்களிலிருந்து பாதுகாப்பதற்கு இது போதாது என்பதை அமைச்சர் உணர்ந்துள்ளார். உலக பொருளாதாரத்தில் ஏற்படும் தளம்பல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத ஒரு பலவீனமான நிலையிலேயே இலங்கை உள்ளது என்பதையே இது காட்டுகின்றது. இவ்வாறு இலங்கைப் பொருளாதாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்பது பற்றி முதல் தடவையாக ஜனவரி 6ஆந் தேதி பாராளுமன்றத்தில் ஜனாதிபதியினால் எடுத்துக்கூறப்பட்டது. அதன் பின்னர் இவ்வரவு செலவுத்திட்டத்திலும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

இக்கட்டுரையில் வரவு செலவுத் திட்ட பெருளாதார உபாயத்தின் பொருத்தப்பாட்டினையும், அது அடுத்துவரும் ஆறு ஆண்டு காலத்தில் எவ்வாறு செயற்படுத்தப்படும் என்பது பற்றியும் நான் நுணுக்கமாக ஆராய உத்தேசித்துள்ளேன். இக்கட்டுரையின் முதலாவது பகுதி இலங்கைப் பொருளாதாரம் பற்றிய அறிமுகமாக அமையும். இரண்டாவது பகுதியில், புதிய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட உபாயங்களும், அதற்கான கோட்பாட்டு ரீதியான அடிப்படைகளும் ஆராயப்படும். இப்பகுதி வரவு செலவுத்திட்ட உரையின் முதல் மூன்று பகுதிகளையும் முக்கியத்துவப்படுத்துவதாக அமையும். மூன்றாவது பகுதியில், குறுங்கால உறுதிப்படுத்தல் கொள்கையில் வரவு செலவுத் திட்ட உபாயங்களின் தாக்கம் பற்றி ஆராயப்படும். நான்காவது பகுதியில், பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு என்பவற்றின் மீது வரவு செலவுத் திட்டத்தின் தாக்கங்கள் பற்றி பரிசீலிக்கப்படும்.

### 17 வருட சீராக்கங்களின் பின் இலங்கைப் பொருளாதாரம்

புதிதாக கைத்தொழில்மயமாகிய நாடுகளின் நிலையை அடைவதை நோக்காகக் கொண்டு தாராள பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றிய முதலாவது நாடுகளின் தொகுதியில் இலங்கையும் ஒன்றாகும். இக்கட்டுரையில் 'தாராளமயமாக்கற் கொள்கைகள்' என்ற குறுகிய விளக்கமுடைய சொற்பதத்திற்குப் பதிலாக 'திறந்த பொருளாதாரக் கொள்கைகள்', 'சுதந்திரமான சந்தைக் கொள்கைகள்', 'வெளிநோக்கிய கொள்கைகள்' என்ற பல பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சர்வதேச நிதி நிறுவனங்களின் நிர்ப்பந்தம் காரணமாகவே 1977 ஆம் ஆண்டில் பொருளாதாரக் கொள்கைகள் மாற்றமடைந்தன என்று அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. ஆனால், இக்கருத்து கட்டுப்பாடு அல்லது தடைகளுடன் கூடிய ஆட்சிக்

காலத்தில் (1960-77) ஏற்பட்ட உள்ளூர் அபிவிருத்திகளின் முக்கியத்துவத்தை நிராகரிக்கின்றது. 1960-77 காலப் பகுதியில் ஒரு புறம் உள்ளூர் மத்திய தர வர்க்கத்தின் அதிகாரம் பெற்ற வகுப்பினர் தமது செயற்பாடுகளின் விரிவாக்கத்திற்கு கட்டுப்பாடுகளுடன் கூடிய முறை இடையூறாக உள்ளது என்பதை எடுத்துக்காட்டி, கூடுதலான அளவுக்கு தாராளமயமான கொள்கையுடைய ஒரு முறையைப் பின்பற்றுமாறு அப்போதிருந்த அரசியல்வாதிகளை நெருக்கி வந்தனர். மறுபுறம், பொருளா தாரத்தில் தீர்க்கப்படாதிருந்த அமைப்பு ரீதியான பிரச்சினைகளுக்கு பொருளாதாரக் கொள்கைத்திட்டத்தில் ஒரு மாற்றம் தேவை என்பதில் மக்களிடையே அக்காலத்தில் ஒரு உடன்பாடு இருந்தது. கடந்த 17 வருடங்களாக கொள்கைத் திட்டமிடலின் அடிப்படைத் தன்மை மாற்றமடையாது நிலையாகவே இருந்த போதிலும், திட்டங்களை அமுல்படுத்துகின்ற பல்வேறு கட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அவர்கள் அனுபவித்தனர். கடந்த காலத்தின் பொருளாதார நிர்வாகத்தில் காணப்பட்ட கலப்புக் கொள்கை விளைவுகளை அட்டவணை 1 இன் பொருளாதாரக் குறிக்காட்டிகள் காட்டுகின்றன.

பதினேழு வருடகால அமைப்பு ரீதியான சீராக்கங்களின் பின்னரும் கூட தீர்த்துவைக்கப்படாத இலங்கைப் பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை அட்டவணை 1 காட்டுகின்றது. 1977-1983 காலத்தில் 7 % ஆக இருந்த மொ.உ.உற்பத்தியின் வருடாந்த வளர்ச்சி வீதம் 1983-1988 காலத்தித் 3.3% ஆகக் குறைவடைந்தது. எவ்வாறெனினும், 1990 ற்குப் பின்னர் இக்குறைந்த மட்ட வளர்ச்சியிலிருந்து பொருளாதாரத்தை மீளக் கட்டி யெழுப்புவதற்கு முயற்சி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. வரவு செலவுத்திட்ட உரையில் இது குறித்துப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: " 1978-1993 காலத்தில் இலங்கையின் விவசாயத் துறையின் வளர்ச்சிவீதம் குறைவாக இருந்துள்ளது. இக்காலத்தில் இலங்கையில் இந்த வளர்ச்சி 2.3% மாக இருக்க, இந்தோனேசியாவில் 3.5% மாகவும் தாய்லாந்தில் 4.4% மாகவும், மக்கள் சீனக் குடியரசில் 3.5% மாகவும் இருந்துள்ளது".

சார்பு ரீதியில் விவசாயத் துறையைக் காட்டிலும் கைத்தொழில் துறையின் செயலாற்றம் சிறந்ததாக இருந்தபோதிலும் இலங்கை இன்னமும் ஆசிய பிராந்தியத்தில் உள்ள பொருளாதாரங்களிலிருந்து பின்தள்ளியே நிற்கின்றது. 1988-94 ற்கிடையில் தாய்லாந்தின் வளர்ச்சி

அட்டவணை 1

இலங்கைப் பொருளாதாரம் குறித்த ஒரு புள்ளிவிவர தொகுப்பு

| முக்கிய விகிதங்கள் | 1978 | 1985 | 1993 |
|---|---|---|---|
| மொ.உ.முதலீடு / மொ.உ.உ. | 21.3 | 23.8 | 25.3 |
| ஏற்றுமதிகள் / மொ.உ.உ. | 33.9 | - | 22.6 |
| மொ.உ.சேமிப்பு / மொ.உ.உ. | 16.8 | 13.8 | - |
| வர்த்தக நிலுவை மொ.உ.உ. | -5.6 | -10.4 | -11.1 |
| வர்த்தக நிலுவை / ஏற்றுமதிகள் | -18.1 | -55.4 | - |
| மொத்தக் கடன் மொ.உ.உ. | 79.7 | 81.9 | 97.4 |
| கடன் சேவை / மொ.உ.உ. | 37.5 | 59.0 | 75.3 |
| நிதிப் பற்றாக்குறை | - | - | 4.8 |
| கடன் சேவை / ஏற்றுமதி சம்பாத்தியங்கள் | 15.5 | 21.0 | 13.7 |
| | 18.8 | 18.6 | 8.1 |
| நேரடி வெ.முதலீடு / மொ.உ.உ. | - | 0.5 | 1.8 |
| வளர்ச்சி விகிதங்கள் | | | |
| மொ.உ.உ. | 8.2 | 5.0 | 6.9 |
| விவசாயம் | 4.2 | 8.6 | 4.9 |
| தயாரிப்புத் துறை | 8.4 | 5.2 | 10.5 |
| ஏற்றுமதிகள் | 3.0 | -8.0 | 17.0 |
| இறக்குமதிகள் | 63.0 | 5.0 | 15.0 |
| நுகர்வோர் விலைகள் | 12.1 | 1.5 | 11.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கைகள்

வீதம் 13% மாக இருக்கையில், மலேசியா, சீனா என்பவற்றின் கைத்தொழில் உற்பத்தி 12% மாக இருந்துள்ளது. 1990-93 காலத்தில் இலங்கையின் வளர்ச்சிவீதம் 7.2% மாக மட்டுமே இருந்துள்ளது. ஏற்றுமதியில் ஒரு அதிகரிப்பை ஏற்படுத்துவதையே பொருளாதார உபாயங்கள் முழுமை நோக்கமாகக் கொண்ட போதிலும், இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சி கடந்த பத்து ஆண்டு காலத்தில் 8% மாகவே இருந்துள்ளது. "ஏற்றுமதியில் துரித வளர்ச்சியினூடாக கிழக்காசிய பொருளாதாரங்கள் அனைத்தும் உயர் வளர்ச்சிச் செயலாற்றத்தினை அடைந்துள்ளன. கடந்த பத்து ஆண்டு காலத்தில் தாய்லாந்தின் வருடாந்த ஏற்றுமதி வளர்ச்சி 21% ஆக இருந்துள்ளது. இதே நேரம் மலேசியா 12% தையும் சீனா 16% வளர்ச்சியையும் அடைந்து கொண்டன" (வ.செ.திட்ட உரை).

அமைப்பு ரீதியான சில அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாத அதே வேளையில், திறந்த பொருளாதாரக் கொள்கையின் நேரடி விளைவாக புதிய பிரச்சினைகள் உருவாகியுள்ளன. இது அட்டவணை 1 இல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. 1978 இல் மொ.உ.உற்பத்தியில் 5.6% ஆக இருந்த வர்த்தகப்பற்றாக்குறை 1993 இல் 11.1% ஆக அதிகரித்துள்ளது. உடனடியாக, பழைய நிலையை – அதாவது, 1978 ஆம் ஆண்டின் மட்டத்தை – எட்டுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. 1995 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இவ்விடைவெளி மொ.உ.உ.யின் 12% ஆக அமையுமென மதிப்பிடப் பட்டுள்ளது. 1978 இல் மொ.உ. உற்பத்தியில் 79.7% மாக இருந்த மொத்தப் பொதுப்படுகடன் 1993 இல் 97.4% மாக உயர்வடைந்துள்ளது. வெளிநாட்டுக் கடன் சேவை விகிதம், வெளிநாட்டுக் கடனை சமாளிக்கக் கூடியதாக இருந்தபோதும், மொ.உ. உற்பத்தி ரீதியாக நோக்கும் போது 37.5% திலிருந்து, 1993 இல் 75.3 ஆக அதிகரித்துள்ளது.

### வரவு செலவுத் திட்ட உபாயம்

பதவியில் உள்ள அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றிய விமர்சனமானது, அடுத்து அதிகாரத்துக்கு வரவுள்ள அரசியற் கட்சிகளுக்கு, அவர்கள் பதவி ஏற்கும் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள், உபாயங்கள் என்பவற்றை வகுப்பதற்கு வேண்டிய அடிப்படைகளை வழங்குகின்றது. எனவே, நடைமுறையில் உள்ள கொள்கைகள் பற்றிய கருததுக்கள்,திருத்தங்களைச் சுட்டிக்காட்டுவதுடன், புதிதாக என்ன கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் கூறுவனவாகவே உள்ளன. அமைச்சர் தனது வரவு செலவுத்திட்ட உரையின்

முதற்பகுதியில் 17 வருட ஐ.தே.கட்சி ஆட்சியைத்தொடர்ந்து பதவிக்கு வந்த அரசாங்கம் பற்றி விளக்கமளித்தார். எவ்வாறெனினும், புதிய அரசாங்கத்தின் பதவி ஏற்பு, பழைய அரசாங்கத்தின் தப்பான உபாயங்களின் விளைவாகும் என விளக்கம் கொடுக்கப்படவில்லை. இன்னொருவகையில் கூறின், ஐ.தே.கட்சியின் கொள்கைத் திட்டங்கள் அடிப்படையில் சரியானவையாகவே இருந்துள்ளன என்ற கருத்தையே அமைச்சர் முன்வைக்கிறார்.

"பொருளாதாரத்தில் கட்டுப்பாடுகளின் ஒழிப்பும் தாராளமயமாக்கமும்' 1977 இல் மெதுவாக ஆரம்பித்து, 1988 இன் பின்னர் துரிதமாகச் செயற்படுத்தப்பட்டன. இவை பொருளாதார' வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியை வழங்கிய அதே வேளையில், பழைய அரசாங்கமானது, இச்சந்தர்ப்பத்தை பொருளாதாரத்திற்குள் உள்வாங்கிக்கொள்வதற்குப் பதிலாக வீணடித்தது. ஆடம்பரமான, கவர்ச்சிகரமான கொண்டாட்டங்கள் மீது அரசாங்கம் தேவையற்ற வகையில் செலவுகளை மேற்கொண்டதன் மூலம் முன்னெப்பொழுதுமில்லாத அளவிற்கு பணவீக்கம் ஏற்பட்டது. எனவே, இவ்வாறு கிடைத்த சந்தர்ப்பம் திறமையற்ற செயற்றிட்டங்கள் மீது வீணடிக்கப்பட்டது" (வ.செ.திட்ட உரை, 1995). வரவு செலவுத்திட்ட உரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "மேலும், இவ்வகைச் செலவினங்களுக்கு, தோழமை முதலாளித்துவம் சிம்மாசனம் ஏறியமையும் சக்திகளின் அல்லது வளங்களின் வீண்விரயமும் தாராள பொருளாதாரக் கொள்கையின் அமுலாக்கல் முறைகளும் துணைபோவதாக அமைந்தன".

இக்கருத்துக்கள் பூடகமாக குறித்துக்காட்டும் விடயம் இதுதான்: வீண்விரயம், ஊழல், வேண்டியவருக்கு உதவுதல் என்பன இல்லாதிருப்பின், ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்கள் எதிர்பார்த்த பலாபலன்களை வழங்கியிருக்க முடியும். இவ்வகைத் துன்மார்க்கங்களை இயலுமான வரையில் ஐ.தே.கட்சி குறைத்திருக்குமாயின், அதன் கொள்கைகள் நாட்டிற்கு சிறந்த பலன்களை ஏற்படுத்தியிருக்கும்; எனவே, ஊழல், டாம்பீகமான கொண்டாட்டங்கள் அற்ற வகையில் அதே கொள்கைகளைப் பின்பற்றுவதே தற்போதைய தேவையாகும். தற்சார்புடைய பொருளாதார வளர்ச்சிப் பாதையின் மீது நாட்டை முன்னெடுத்துச் செல்வதில் ஐ.தே.கட்சி அரசாங்கம் அடைந்த தோல்விக்கான எளிமைப்படுத்தப்பட்ட விளக்கமாக இது இருப்பது போல தோன்றுகிறது.

வரவு செலவத்திட்ட உரையின் இரண்டாவது பகுதி புதிய அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாயத்திற்கு நீண்ட விளக்கம் கொடுப்பதாக உள்ளது. அமைச்சர் சுட்டிக்காட்டியது போல, " வரவு செலவுத்திட்டம், மூன்று வருடகால வரவு செலவுத்திட்ட வேலைத்திட்டங்களையும், ஆறு வருடகால பொருளாதார திட்டமிடல் வேலைத்திட்டங்களையும் சமர்ப்பித்துள்ளது; இதில் இறைக் கொள்கையை உறுதிப்படுத்துவதற்கும், பொருளாார சீரமைப்பிற்குமான இரண்டு வருடகாலமும் உள்ளடங்கியுள்ளது; இங்கு பொருளாதார சீர்திருத்தம் என்பது, இந்நூற்றாண்டு முடிவடையும் காலத்தில் வருமானம் இரு மடங்காக அதிகரிக்கக்கூடிய வகையில் தற்சார்பு வளர்ச்சிப் பாதை மீது பொருளாதாரத்தை இழுத்துச் செல்லுதலையே குறிப்பிடுகின்றது". அரசாங்க பொருளாதார உபாயத்தின் முக்கிய அம்சங்களாக, வேலையின்மை, வாழ்க்கைச் செலவு, வருமான வளர்ச்சி ஆகிய மூன்று அடிப்படை அம்சங்கள் கொள்ளப்படுகின்றன. அதே நேரம் மூன்று ஆண்டு வரவு செலவுத்திட்ட கொள்கை, பின்வரும் மூன்று பேரண்டப்பொருளாதார இலக்குகளைக் கொண்டுள்ளது:

(அ) 1995 இல் மதிப்பிட்ட 6% என்ற பொருளாதார வளர்ச்சி இலக்கிலிருந்து 1997 இல் 7-8% வரை படிப்படியாக அதிகரித்தல்.

(ஆ) 1995 இல் 7-8% ஆக உள்ள பணவீக்க வீதத்தை, 1997 இற்குள் 5-6% ஆகக் குறைத்தல்.

(இ) 1995இல் மொ.உ. உற்பத்தியின் 6.4% மாக உள்ள நாட்டின் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை 1997 இற்குள் 5% ஆகக் குறைத்தல்.

அமைச்சரின் கூற்றுப்படி, "தொடர்ந்து உயர்வடைந்து வரும் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டமானது விலைமட்டத்தை உயர்த்துவதாலும் வட்டி வீதங்களை உயர்த்துவதாலும் உள்நாட்டுச் சேமிப்பு ஆற்றலைக் குறைப்பதாலும், உற்பத்திக்கு அவசியமான பொருளாதார செயற்பாடுகளிலிருந்து வளங்களை வெளித்தள்ளுவதாலும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை அடைவதற்கும் எமது பொருளாதாரத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கும் விவேகம் நிறைந்த இறைக்கொள்கை அவசியமாகின்றது".

இந்த உபாயத்துடன், அரசாங்கம் பொருளாதாரத்தைத் தற்போதுள்ள குழப்ப நிலையிலிருந்து மீட்டு, 2000 ஆம் ஆண்டளவில் மாதாந்த தலா வருமானத்தை, தற்போதைய 2700 ரூபாவிலிருந்து 5800 ரூபா வரை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. சிறிய திறந்த பொருளாதாரமொன்றில் பேரண்டப் பொருளாதாரத்தின் அடிப்படை நோக்கங்களாக இரு விடயங்கள் அமைய முடியும்:

(i) சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு பற்றாக் குறையை குறைத்தல்.

(ii) பணவீக்கத்தைக் குறைத்தல்.

நடுத்தர, நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு, குறுங்கால உறுதிப்படுத்தற் கொள்கை அவசியம்; ஆனால், அது மட்டும் போதுமானது அன்று. எந்தவொரு பேரண்டப் பொருளாதார உபாயத்திற்கும் இறைக்கொள்கையை ஒழுங்குபடுத்தல் அத்தியாவசியமானதாகும். பற்றாக் குறையான இறைச் செயற்பாடுகளைக் குறைப்பதன் மூலம் பின்வரும் நான்கு முக்கிய பலாபலன்களைப் பெறலாம் என பொதுசன முன்னணி அரசாங்கம் கருதுகிறது. முதலாவதாக, அரசாங்கத்தின் மிகையான கடன்பெறுதல் மூலம் ஏற்படுகின்ற பணநிரம்பல் அதிகரிப்பினாலேயே பணவீக்கம் ஏற்படுகின்றது என்பதனால், அதனைக் குறைப்பதற்கு, பற்றாக்குறையைக் குறைக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது. இரண்டா

வதாக, கடன் நிதிக்கான அரசாங்கத்தின் கேள்வி குறைவாயிருந்தால், மூலதனச் சந்தையிலும் குறைந்த கேள்வி ஏற்படும். எனவே, இது வட்டி வீதத்தைக் குறைவடையச் செய்யும். குறைந்த வட்டிவீதம் அதிக முதலீட்டைத் தூண்டும். மூன்றாவதாக, பற்றாக்குறை வரவு செலவுத்திட்டம், அரசாங்கத்தின் கடன் சேவையையும், பொதுக் கடன் அளவையும் குறைக்கும். நான்காவதாக, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை வெளிநாட்டுச் சொத்துக்களின் சமமின்மைக்கு முதன்மைக் காரணியாக இருப்பதால், சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை இது குறைக்கும். இந்த விவாதங்களின் அடிப்படையில் இறைக் கொள்கைச் சமநிலையின்மையைச் சீர்செய்வதற்கு எந்தவொரு உறுதிப்படுத்தல் திட்டமும் ஏற்புடையதாகும் என்பதை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனினும், நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையைச் சீர்செய்வதற்கு வரவு செலவுத்திட்டம் எந்த வழிமுறைகளையும் குறிப்பிடவில்லை.

எனவே, இறைச் சமமின்மைகளின் சீராக்கங்களும், அதனால் எதிர்பார்க்கப்படும் விளைவுகளும் உயர்ந்தளவு வேலைவாய்ப்பு மட்டத்துடன் கூடிய நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் என்பதே அரசாங்கத்தின் கருத்தாகும் என்பது புலனாகின்றது. "குறுங்காலத்திற்கு பெரும் கஷ்டங்களை நாம் எதிர்கொள்ளத் தயாராயின், இக்கனவினை நாம் நனவாக்கிக் கொள்ளமுடியும்" என்பது அமைச்சரின் எண்ணமாகும். இக்கொள்கைத் திட்டங்கள் ஐ.தே.கட்சியின் கொள்கைத் திட்டங்களை ஒத்தவை என்பது வெளிப்படையானது. மேலும், இக்கொள்கைக் கட்டுக்கள் பல்பக்க நிதி நிறுவனங்களால் எடுத்துக்கூறப்பட்ட கொள்கைச் சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். கடந்த ஆட்சிக்காலத்தில் தொடக்கி வைக்கப் பட்ட அமைப்பு ரீதியான சீர்திருத்தத் திட்டங்களே, தற்போது ஊழல்களைத் தடுத்து, குறிப்பிட்டளவு பாதுகாப்புடன் இறைக் கொள்கையை ஒழுங்குபடுத்துவதன் ஊடாகப் பின்பற்றப்படும் என அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இச்சீர்திருத்த யோசனைகள், வரிச் சீர்திருத்தம், சுங்கச் சீர்திருத்தம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. இச்சீர்திருத்தங்களின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:

"அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள், (அ) வர்த்தகமல்லாப் பண்டங்களிலிருந்து வர்த்தகப் பண்டங்கள் மீது வளங்களை நகர்த்துவதையும் வர்த்தகப்பண்டம் மீதான வளங்களுக்குள்ளும் கூட, இறக்குமதிப் பதிலீட்டு முயற்சி நடவடிக்கைகளிலிருந்து ஏற்றுமதி நோக்கிய நடவடிக்கைகளுக்காக வளங்களை ஒதுக்குவதனையும், (ஆ) அரசாங்க துறையிலிருந்து தனியார் துறைக்கு வளங்களை மாற்றுவதனையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளன. வள ஒதுக்கீடு என்பதற்கும் மேலாக, வளப் பயன்பாட்டினை முன்னேற்றுவது பற்றியும் அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் சில கொள்கைகளைக் கொண்டுள்ளன:

(i) பொருளாதாரத்தின் திறந்த தன்மையின் தரத்தினை உயர்த்துதல்.

(ii) நிறுவனரீதியான செயற்பாடுகளில் அமைப்பு ரீதியான மாற்றங்களைக் கொண்டுவருதல். இதன் கீழ், தனியார் துறையில் கூடுதலாகத் தங்கியிருக்கக் கூடியதாக பொதுத்துறையின் செயற்பாடுகளைக் குறைத்தல், விலைகள் மீது தங்கியிருக்கக்கூடியதாக கட்டுப்பாடுகளை நீக்குதல், இறுதியாக சந்தை மீது சார்ந்திருக்கக்கூடியதாக அரச தலையீட்டைக் குறைத்தல் போன்ற மாற்றங்கள் ஏற்படும் (நாயர், 1993 : 641)

மேற்கூறிய அம்சங்கள் நடைமுறை உலக நிலைமைகளுடன் ஒத்துச் செல்லக்கூடிய சில நியாயமான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன. இது இக்கட்டுரையின் நான்காவது பகுதியில் ஆராயப்படும். எவ்வாறெனினும், இக்கொள்கைத்திட்டங்கள் கோட்பாட்டு ரீதியான, பிரத்தியேகமான பல பிரச்சினைகளை எழுப்புகின்றன.

அட்டவணை 2

| இலங்கையில் பணவீக்கம் | |
|---|---|
| 1951-60 | 0.7 |
| 1961-69 | 2.9 |
| 1970-79 | 8.2 |
| 1980-87 | 17.6 |
| 1988-94 | - |

மூலம் : இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கைகள்

## பணவீக்கமும் வர்த்தக நிலுவையும் : பேரண்டப் பொருளாதார உறுதிப்படுத்தலின் இரு நோக்கங்கள்

சர்வதேச நாணய நிதியம் உலகவங்கி என்பவற்றின் சித்தாந்த நிலைப்பாடுகள், எமது பொருளாதாரக் கொள்கைகளில் ஊடுருவியுள்ளன என்பதை அமைச்சர் விவரிக்கின்றார். பேராசிரியர் பிரபாட் பட்நாயக் இக்கருத்தினை "தனித்துவமான சந்தைத்தன்மை" எனப் பொருத்தமாகக் குறிப்பிடுகின்றார். வரவு செலவுத்திட்டத்தில் நாம் ஒரு நோக்கினை தனியே எடுப்பின் நிச்சயமாக பணவீக்கத்தைத் தடுத்தலே அதிகூடிய முக்கியத்துவம் வாய்த்தொன்றாக அமைய முடியும்.

"விவசாயம், கைத்தொழில், சேவைகள் ஆகிய துறைகளில் முழு அளவிலான வளர்ச்சியுடன் இணைந்ததாக சேமிப்பு – முதலீட்டினை அடைந்து கொள்ளும் நோக்கின் அடிப்படைத் தேவையானது விலை உறுதிப்பாட்டைப் பேணுவது அல்லது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது ஆகும்" (வ.செ.திட்ட உரை, 1995)

பணவீக்கத்தைக் குறைப்பது என்பதை குறுங்கால – நடுத்தரகால பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தின் நோக்காக எவரும் மறுக்க முடியாது. இலங்கையின் இன்றைய நிலையில், பணவீக்கம் 20% திலும் குறைவாக உள்ளபோதிலும் பேரண்டப் பொருளாதாரக்

அட்டவணை 3

| திட்டமிடப்பட்டுள்ள வளர்ச்சி வீதங்கள் | 1994 | 1995 |
|---|---|---|
| மொ.உ.உ. வளர்ச்சி வீதம் | 5.5 | 6.0 |
| முதலீடு / மொ.உ.உ. | 26 | 24 |
| தயாரிப்புத்துறை வளர்ச்சி வீதம் | 9.0 | 10.0 |
| இதில் தொழிற்சாலை உப துறை | 9.0 | 11.0 |
| வேளாண்மை வளர்ச்சி | 3.0 | 4.0 |
| தேயிலை (மில.கி) | 243 | 250 |
| இறப்பர் (மில.கி) | 108 | 110 |
| தெங்கு (மில்லியன்) | | 2750 |
| நெல் (மில் மெட.தொ) | 2.65 | 2.70 |
| கட்டடவாக்கம் | 6.0 | 7.0 |
| சுற்றுலாத்துறை | 2.4 | 2.5 |
| பணவீக்கம் | 10 | 8.0 |
| மொத்த ஏற்றுமதிகள் (மில.அ.டொ.) | 2207 | 2501 |
| மொத்த இறக்குமதி (மில.அ.டொ.) | 3269 | 3571 |
| வர்த்தக பற்றாக்குறை / மொ.உ.உ. | 13 | 12 |
| தேறிய தனியார் மாற்றல்கள் (மில.அ.டொ.) | 442 | 486 |
| அலுவல்சார் மாற்றல்கள் (மில.அ.டொ.) | 115 | 120 |
| நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை (மில.அ.டொ.) | 584 | 554 |
| அலுவல்சார் கடன்கள் (மில.அ.டொ.) | 138 | 260 |
| நேரடி முதலீடு (மில.அ.டொ.) | 131 | 160 |

மூலம்: இலங்கை பாராளுமன்றம், 1995

கொள்கைகளில் பணவீக்கம் முக்கியமானதாகும். நுண் பொருளாதார நடத்தைகளும், ஏனைய பேரண்டப் பொருளாதார மாறிகளும் பணவீக்கத்தினாலேயே தீர்மானிக்கப்படுவதால் இது நியாயமானதாகத் தென்படலாம். இந்த ஊகம் நியாயமானது என எடுத்துக் கொண்டால், பணவீக்கத் திற்கான காரணங்கள் யாவை ? அமைச்சரின் கருத்துப்படி, "கடந்த இரு தசாப்தங்களிலும், உயர் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை காரணமாக விலை உறுதித்தன்மையை ஏற்படுத்தத் தவறியமையே" இதற்குக் காரணமாகும். கண்டுபிடிக்கப்பட்ட இந்நோய்க்கான மருந்தாக வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையின் அளவைக் குறைப்பதனை அமைச்சர் சிபார்சு செய்கிறார். மேலும், இதன் மூலம் பணவீக்கத்தைக் குறைக்க முடியும் என்கிறார். இச்சிபார்சு கோட்பாட்டு ரீதியாகவும், நடைமுறை அனுபவ ரீதியாகவும் ஆராயப்படலாம். அட்டவணை -2 இலங்கையின் பணவீக்கத்தைக் காட்டுகின்றது.

நாணயவாதிகளின் விளக்கத்தின் படி, "எங்கும் பணவீக்கம் உள்ளது; எப்போதும் அது ஒரு நாணயத்துறை சார்ந்த நிகழ்வாகவே ஏற்படுகின்றது. அதிகரித்துவரும் பண நிரம்பலுக்கு அரசாங்கத்தின் கடன் பெறுகைகளும், இறைக் கொள்கைச் சமமின்மைகளும் முதன்மைக் காரணங்களாகக் கூறப்படுகின்றன. இக்கூற்று இலங்கை தொடர்பான புள்ளிவிபரங்களால் நிரூபிக்கப்படுகின்றதா ? 1971-87 காலப் பகுதில் இலங்கையின் பணவீக்கம் பற்றி ஆராய்ந்த ஹாவர்ட் நிக்கலஸ் என்பவரது காலத் தொடர் அடிப்படையிலான ஆய்வுகளின் படி, நாணயவாதிகளின் கருத்தை இலங்கையின் பணவீக்கத்திற்கு ஆதாரமாகக் கொள்ள முடியாது என்பதை நிரூபித்திருக்கின்றார். தற்போதைய ஆய்விலிருந்து நாட்டின் மொத்த விலைமட்ட அசைவிற்கு நாணயச் செயற்பாடுகளையும் விட, வெளியே நின்று செயற்பட்ட கேள்வி தூண்டல், செலவு தூண்டற் காரணிகளே பெருமளவிற்குப் பொறுப்பாக இருந்துள்ளன" என்றார். "1971-87 காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தின் மொத்த விலை மட்டத்திற்கும், பண இருப்பு மாற்றத் திற்குமிடையில் தொடர்புகள் இருப்பதற்கான ஆதாரங்கள் புள்ளி விபரங்களில் காணப்படவில்லை. மாறாக, இத் தரவுகளிலிருந்து, பண இருப்பின் பெரும் பகுதியும் பொதுத் துறையில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது என்ற முடிவையே பெறமுடிகிறது. இன்னொரு வகையிற் கூறின், அதிகரித்த பண நிரம்பலானது கடனாக்கம் செய்யப்படவில்லை. எனவே, பணவீக்க நெருக்குதல் பொதுத் துறையின் மிகையான கடன் பெறுவனவாலேயே ஏற்பட்டிருக்க வேண்டும்." என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவற்றுக்கிடையில் எப்பொழுதாவது காரணகாரியத் தொடர்பு ஏற்பட்டிருப்பின், அது விலைமட்டத்தி லிருந்து பண நிரம்பலுக்கு ஏற்பட்ட தாக்கமேயொழிய, பண நிரம்பலி லிருந்து விலைமட்டத்துக்கு ஏற்பட்டதல்ல என்பதையும் நிக்கலஸ் எடுத்துக் கூறுகிறார். பல்வேறு கோட்பாட்டு நிலைகளின் கீழ், பலரால் முன்வைக்கப்பட்ட முடிவுரையை ஒத்ததாக இவரது கருத்தும் உள்ளது. உதாரணமாக, டீபக்லால் (1985) என்ற பிரபல்யமான, நவபழம் பொருளியல் வாதியும் கூட மேற்போந்த கருத்தை ஒத்த கருத்தையே வெளியிட்டுள்ளார். அதாவது, "1977 லிருந்து இலங்கை எதிர்நோக்கும் பணவீக்கத்தின் பெரும்பகுதியும் இரண்டு வெளிநாட்டுக் காரணிகளினாலேயே ஏற்பட்டுள்ளது. முதலாவது, இலங்கை ரூபாவின் வெளிநாட்டு விலைகள், இரண்டாவது அதன் பெறுமதி இறக்கம்". கடந்த 17 வருடங்களாக நுகர்பொருட்களிலும், உற்பத்திப் பொருட்களிலும் இறக்குமதியின் உள்ளடக்கம் அதிகரித்து வந்துள்ளது. எனவே, இலங்கையின் உள்நாட்டு விலைமட்டம் மீது இறக்குமதி செய்யப்பட்ட மூலதன, இடைத்தர, நுகர்வுப் பொருட்களின் வெளிநாட்டு விலைகள் செல்வாக்குச் செலுத்தியதனால், இது பணவீக் கத்திற்கு முக்கியமான ஓர் காரணியாகச் செயற்பட்டுள்ளது. இது முக்கிய வர்த்தகப் பங்காளி நாடுகளின் நாணயத்துடனான இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கத்தை மேலும் தூண்டியிருக்க வேண்டும். மேலும், உள்நாட்டு விலைகளில் ஏற்பட்டுவரும் நிலையான அதிகரிப்பானது எமது ஏற்றுமதிப் பொருட்களுக்கான போட்டித் தன்மையைத் தொடர்ந்தும் பாதுகாப்பதற்கு அல்லது நிலைநிறுத்துவதற்கு மேலதிக பெறுமதி இறக்கம் செய்வதை அவசியமாக்குகின்றது. எனவே, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மீதான, யதார்த்த பூர்வமற்ற, நியாய மற்ற அழுத்தங்கள் எதிர்பார்த்த பலன்களை அளிக்காது விடலாம். இது கூட ஒரு பாதகமான தாக்கத்தையே உண்டுபண்ணும்.

பணவீக்கத்திற்கு இன்னொரு வகையிலும் விளக்கம் கொடுக்கப் படலாம். அனைத்துப் பொருளாதார பிரச்சினைகளுக்கும் பணவீக்கக் குறைப்பு ஒரு சர்வரோக நிவாரணியாக விவரிக்கப்படுகிறது. விலை உறுதிப்பாடு உயர்ந்தளவு சேமிப்பு முதலீட்டினை உறுதிப்படுத்துவதாலும்,

இந்த இலக்கிலிருந்து ஏதாவது நகர்வு ஏற்படின் அது திரண்ட விலகலுக்கு வழிவகுக்கும் என்பதாலும் பணவீக்கப் பிரச்சினை கவனமாகக் கையாளப்பட வேண்டும். கணிசமான அளவு வளங்கள் பயன்படுத்தப்படாத. அல்லது குறைந்தளவு பயன்பாட்டையுடைய பொருளாதாரங்களில் பணவீக்கத்திற்கெதிரான கொள்கைகள் மிகப் பாரதூரமான விளைவுகள் ஏற்படுத்த முடியும்.

அடுத்து எந்த ஒரு பேரண்டப் பொருளாதார நிகழ்ச்சித்திட்டத்தினதும் இரண்டாவது குறிக்கோளாகிய வெளிநாட்டு நிலுவை பற்றிக் கவனத்திற் கொள்ளவேண்டும். இது விடயத்தில் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை நடுத்தர காலத்திற்கேனும் குறைப்பது அவசியமாகின்றது. நடைமுறைக் கணக்கு சமமின்மையைத் திருத்துகையில் வர்த்தக நிலுவையில் சமநிலையை அடைந்து கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். வரவு செலவுத்திட்ட உரையின்படி, வர்த்தகப் பற்றாக்குறை 1993 இல் 825 மில். சிறப்பு எடுப்பளவு உரிமைகளாக இருந்தது. இது 1994 இல் 1062 மில். சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கு உயர்வடையும் என மதிப்பிடப்பட்டது. இது 1994 இல் சென்மதி நிலுவையின் மொத்த மிகைகளைக் குறைக்கும். 1995 இற்கான வர்த்தக பற்றாக்குறையாக 1070 மில்லியன் சி.எ.உரிமைகள் அமையும்; இது 1994 இல் எதிர்வு கூறப்பட்ட பற்றாக்குறையைக் காட்டிலும் உயர்வானதாகும். சென்மதி நிலுவைக்கான நாணயரீதியான அணுகுமுறையின் கருத்துப்படி வர்த்தகப் பற்றாக்குறையானது உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மிகைக் கேள்வியினால் ஏற்பட்டதாகும். பல்பக்க நிதி நிறுவனங்கள் வர்த்தக சமமின்மையைச் சரிசெய்வதற்கான வழிமுறைகளாக வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையின் அளவைக் குறைப்பதையும், வர்த்தக தாராளமயமாக்கலை விரிவாக்கி, விரைவுபடுத்துவதையும் சிபார்சு செய்துள்ளன. இதில் முதலாவது, உள்நாட்டுக் கேள்வியின் அளவைக் குறையச் செய்யும்; பின்னையது சர்வதேச சந்தையில் நாட்டின் போட்டித் தன்மையினை அதிகரித்து, வளப் பயன்பாட்டின் திறனை உச்சப்படுத்தும். இந்த நியாயங்களை வரவுசெலவுத்திட்ட உரையும் தயக்கமின்றிப் பின்பற்றுகின்றது. இதன்படி பல பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே சில கைத்தொழில் அதிபர்கள் துவிச்சக்கர வண்டி, துணிவகை, ஆடைகள், டயர், ரியூப் என்பன மீதான தீர்வைக்குறைப்பு மீது தமது கருத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வகைப் பொருட்கள் மீதான தீர்வைக் குறைப்பு அவர்களது உள்நாட்டு உற்பத்தி மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமென்பதால் இதனை எதிர்த்தனர். விலைகள் குறைந்து பணவீக்கம் குறைவதனால், அது ஏற்றுமதி உற்பத்திக்கு ஊக்குவிப்பாக அமையும் என்று கூறி அமைச்சர் தீர்வைக் குறைப்பினை நியாயப்படுத்த முற்படுகின்றார். இந்த விவாதத்தில் சில உண்மைகளும் இருக்கவே செய்கின்றன. இருந்தபோதிலும், இரு பகுதியினரதும் நியாயத்திற்குள் சில சிக்கல் நிலைகள் ஏற்பட முடியுமாதலால் வேறுபட்ட பலாபலன்களை ஏற்படுத்தலாம். குறைந்த தீர்வைகள் வெளிநாட்டு நிரம்பல்களை மேனிலைக்குக் கொண்டு செல்லும். அவர்களின் உள்ளூர் முகவர்கள் இறக்குமதிகளின் விலைகளை அதிகரிப்பர். நம்பியார், மெட்டா என்பவர்களின் அவதானிப்பின் படி, இந்தியாவின் அனுபவத்தில், "தீர்வைகள் குறைவாக இருந்தபோது இறக்குமதிப் பொருட்களின் வெளிநாட்டு விலைகள் உயர்வாக இருந்துள்ளன". இது தான் உண்மையாக இருப்பின் இறக்குமதிப் பொருட்களின் விலையும், அளவும் கூடி மொத்த இறக்குமதிச் செலவு அதிகரிக்கும்.

மேலும், பற்றாக்குறை வரவு செலவுத்திட்டத்திற்கும், வெளிநாட்டு சமமின்மைக்கும் இடையிலான தற்செயலான தொடர்பு சர்ச்சைக்குரிய விடயமாகும். உள்நாட்டுக் கேள்வி அதிகரிக்குமாயின், அது இறக்குமதி அதிகரிப்பிற்கு வழிகோலும். இது இறைப் பற்றாக்குறையின் விளைவாக மட்டுமன்றி மக்களின் குறிப்பாக உயர் வருமான மட்டத்தவரின், இறக்குமதிப் பொருட்கள், சேவைகள் மீதான நுகர்வு நாட்டம் காரணமாக செலவு அதிகரிப்பதன் விளைவாகவும் ஏற்பட முடியும். மேலும், இறைப் பற்றாக் குறையின் குறைப்பு, தனியார் செலவு அதிகரிப்பினால் ஈடுசெய்யப்படின், சென்மதி நிலுவைச் சமமின்மை தொடர்ந்து உறுதியாக இருக்கும். வரவு செலவுத்திட்ட பிரேரணையில் உற்பத்தி சாராத தனியார் செலவுகளைக் குறைப்பதற்கான குறிப்பிடத்தக்க கொள்கைகள் எவையும் குறிப்பிடப்படவில்லை.

### வளர்ச்சி, வேலைவாய்ப்பு மீதான நடுத்தர கால வாய்ப்புக்கள்

ஒரு குறைவிருத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றைத் தனிமை நிலையில் வைத்துத் திட்டமிட முடியாது. உலக பொருளாதாரத்தில் முதலாவது உலக மைய நாடுகளின் ஆதிக்கம் நிலவி வருகின்றது என்றும் இவை வேண்டுமென்றே ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் அபிவிருத்திச் செய்முறையைத் தடைசெய்துள்ளன என்றும் 1960 களிலும் 1970 களிலும் ஒரு பிரபல்யமான கருத்து நிலவி வந்தது. எனவே, பொருளாதார அபிவிருத்தி உலக பொருளாதார முறைமையிலிருந்து துண்டித்துக் கொள்வதனை அவசியப்படுத்தியது. அபிவிருத்தி முயற்சியில் அரசாங்கம் முக்கியமான பங்கு வகித்து அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் இணைக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. நடைமுறையில் இவ்விரு செய்முறைகளும் உத்தேசித்த விளைவைத் தரவில்லை. அத்துடன் மேற்கூறிய நடைமுறையைப் பின்பற்றிய பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இன்னமும் வறுமை நிலையிலும் குறைவிருத்தி நிலையிலுமே உள்ளன. பல சந்தர்ப்பங்களில் சில நாடுகளில் நிலைமை மோசமாகியும் உள்ளது. மாறாக, வேறுபட்ட பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றிய நாடுகள் தமது பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கக்கூடியதாக -அதாவது 'NIC' நாடுகளாக எழுச்சியடையக் கூடியதாக - இருந்தது. தற்போதைய உலக பொருளாதார பின்புலத்தில் எந்த ஒரு நாடும் தேசிய பொருளாதாரக் கொள்கைகளை முன்வைக்குமிடத்து இரண்டு முக்கிய கருதுகோள்களைக் கவனத்தில்

கொள்ள வேண்டும் : (i) வளர்முக நாடுகள், சர்வதேச பொருளாதாரத்துடன் பல வழிகளில் தமது பொருளாதாரத்தை ஒருங்கிணைக்க வேண்டும்; மற்றும் (ii) சந்தைப் பொறிமுறை சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

இவ்விரு கருதுகோள்களையும் ஏற்றுக்கொள்வது என்பது உலக பொருளாதார முறைமையின் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டது என்பதன் கருத்தாகாது. எனினும், தேசிய பொருளாதாரக் கொள்கைகள் திட்டமிடப்படும் பொழுது, யதார்த்த ரீதியான பொருளாதாரக் கொள்கைகளும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். வரவு செலவுத்திட்ட உரை, இவ்விரு தத்துவங்களையும் ஒரு கருத்தியல் நிலைக்கு எடுத்துச் செல்கின்றது. பொதுசன முன்னணி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை யதார்த்தமானது அல்ல; ஆனால், அது கருத்தியல் சார்ந்த ஒன்று. இது உறுதிப்படுத்தல் நோக்கங்கள் தொடர்பான பகுதியில் என்னால் ஏற்கனவே ஓரளவு ஆராயப்பட்டுள்ளது. ஆனால், அரசாங்கத்தின் நடுத்தரகால நோக்கங்களான வருமான வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது, இது வெளிப்படையாகத் தெரிய வரும். டோன் புஷ்ஷின் கருத்துப்படி, பொருளாதார வளர்ச்சியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு, சீராக்கம் அவசியமானது; ஆனால், அது மட்டும் போதுமானதல்ல. வரவு செலவுத்திட்ட உரையில், அரசாங்கம் எவ்வாறு மொ.உ.உற்பத்தியில் உயர்ந்த வளர்ச்சி வீதத்தையும், வேலைவாய்ப்பு உருவாக்கத்தையும் அடையப் போகின்றது என்பதைச் சுருக்கமாக எடுத்துக்கூறப்பட்டிருந்தது. மொ.உ.உற்பத்தியில் 24% மாக உள்ள முதலீட்டின் பங்கை அடுத்து வரும் காலங்களில் தற்போதுள்ள சேமிப்பு மட்டம் (14% திலிருந்து) 30% திற்கு அதிகரிக்கப்பட வேண்டும். 1995 இற்கான எதிர்வுகூறல்கள் அட்டவணை 3 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

வேலை வாய்ப்பு, வளர்ச்சி என்பவற்றை அடைவதில் வரவு செலவுத்திட்ட உபாயங்கள் எந்தளவிற்கு உதவமுடியும் என்பதைப் பற்றி நான் இப்போது பரிசீலனை செய்கிறேன். வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் குறைப்பு வட்டி வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தி, அதனூடாக தனியார் முதலீடுகள் தூண்டப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வட்டிவீதம் உள்ளூர் கொள்கை வகுப்போரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதல்ல; பல காரணங்களால் அது எப்போதும் உயர்வாகவே இருந்துள்ளது. பல்பக்க நிதி முகவர்களால், நிதியியல் தாராளக் கொள்கையின் ஒரு அம்சமாக உயர் வட்டி வீதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உயர்வட்டி வீதமானது சேமிப்பை அதிகரிக்கச் செய்து, தரக்குறைவான முதலீடுகளுக்கு ஊக்கத்தைக் குறையச் செய்யும் என வாதிடப்பட்டது. உண்மையில் குறுங்கால வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் பொருட்டு உயர்ந்த மட்டத்தில் வட்டிவீதம் நிலையானதாகத் தீர்மானிக்கப்பட வேண்டும். ஏனைய காரணிகளில் மாற்றமில்லாதிருக்க, வெளிநாட்டுச் செலாவணியில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக உயர்வட்டி வீதம் நிலவலாம். பட்நாயக் (1994) குறிப்பிட்டது போல, இந்நிலைமை அரசாங்கத்துக்கு ஒரு தடுமாற்ற நிலையை எடுத்து வரலாம். அது வட்டி வீதத்தை குறைத்தால் வெளிநாட்டு குறுங்கால மூலதனம் வெளிப்பாய்ச்சல் ஏற்படும். மறுபுறம், அரசாங்கம் வட்டி வீதத்தை உயர்வாக வைத்தால், நாணயப் பெறுமதியேற்றம் ஏற்படும். இது ஏற்றுமதி மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதுடன், வர்த்தக நிலுவை மற்றும் சென்மதி நிலுவை என்பவற்றில் நெருக்கடி நிலைமைக்கு இட்டுச் செல்லும். இது முடிவாக அமையப் போவதில்லை. அரசாங்கம் எதனையுமே தெரிவு செய்யாமல் இருந்தாலும் கூட, இதிலிருந்து தப்புவதற்கான வழி எதுவுமில்லை. பட்நாயக் சுட்டிக் காட்டியது போல, இது சந்தை நட்பு முறையின் கீழ் பங்குச் சந்தையில் ஒரு செழிப்பு நிலையை எடுத்து வரும். எனவே, இவ்வாறான நிலைமைகளின் கீழ் வட்டி வீத அமைப்பில் செல்வாக்கு செலுத்துவதில் அரசாங்கம் வலுவற்றதாக உள்ளது. இச் சந்தர்ப்பத்தில் வட்டிவீத வீழ்ச்சியடைவதற்கு அநேகமாக வாய்ப்பில்லை. உயர்வட்டி வீதம் சிறு முதலீட்டாளர்களின் முதலீட்டுத் தீர்மானத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். அதேபோல தனிப்பட்ட வீடுகளின் நிர்மாணத்தையும் அது பாதிக்கச் செய்யும்.

நாயர் (1993) குறிப்பிட்டது போன்று சர்வதேச நாணய நிதி - உலக வங்கியின் அமைப்பு ரீதியான சீராக்கல் திட்டம் போல 1995ன் வரவு செலவுத்திட்டமும் பொருளாதாரத்தின் நிரம்பல் பக்கததையே பிரதானமாகக் கருதுகின்றது. பொருளாதாரத்தில் உறுதித் தன்மையை ஏற்படுத்துவதற்கு, இறை, நாணயக் கொள்கைகள் ஊடாக, இந்த நிறுவனங்கள் கேள்விப் பக்க முகாமைத்துவத்தை உத்தேசிக்கின்றன. எனினும், கேள்விப்பக்க சீராக்கங்களும், நிரம்பல் பக்க சீராக்கங்களும் சமகாலத்தில் செயற்படுத்தப்படவில்லை. கேள்விப் பக்க சீராக்க வேகம் உயர்வாகவும், நிரம்பல்பக்க சீராக்க வேகம் மந்தமானதாகவும் இருந்துள்ளது.

வரவு செலவுத் திட்ட உபாயத்தில் இந்த முக்கியமான விடயங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன போல் தோன்றுகின்றது. பாரிய மூலதன செய் திட்டங்களில் ஈடுபடுவதில்லை என்ற அரசாங்கத்தின் தீர்மானம் நிரம்பல் பக்க சீராக்கத்தினை மேலும் கடினமான தாக்கும். அரசாங்கத்தின் குறைக்கப்பட்ட கேள்வி, தனியார் துறையின் வெளியீட்டின் மீது மேலும் குறைப்பினை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் 1970 களின் பிற்பகுதியிலும் 1980 களின் முற்பகுதியிலும் தனியார்துறை முதலீடுகளில் பொதுத்துறை முதலீடுகள் ஒரு குவிப்பினை ஏற்படுத்தின என்பதை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு கூற முடிகிறது. இதுவே தென்கொரியா, தாய்வான் என்பவற்றின் அனுபவமு மாகும். தனியார் துறையின் உறுதித் தன்மை என்பது பொருளாதார நடவடிக்கைகளின் செயற்பாடாகும். தனியார் துறையில் ஒரு சோம்பல் தன்மை காணப்படுமாயின், பொருளாதார ரீதியாகச் செயற் பாடற்ற

அரசாங்கத்தினால் இதனை தோற்கடிக்க முடியாது "கிழக்காசிய அபிவிருத்தியில் அரசாங்கத்தின் பங்கு" என்ற தலைப்பில் ரொபர்ட் வேட் (1990) என்பவரால் எழுதப்பட்ட புத்தகத்தில், இந்நாடுகளில் அரசாங்கம் எவ்வாறு பாரிய தலைமைத்துவத்தை இயக்கி வந்துள்ளது என்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார்துறை வழிப்பட்ட அபிவிருத்தி என்ற குறிக்கோளை அரசாங்கம் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தபோதும், தனியார்துறையின் நம்பிக்கையை வெல்லுமளவிற்கு இன்னமும் அது தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளவில்லை. பாரம்பரிய உள்கட்டமைப்பு அபிவிருத்தி நோக்கிலிருந்து விலகப் போவதாக வரவுசெலவுத்திட்ட உரையில் சுட்டிக்காட்டப்பட்டமை இந்தப் பின்னணியில் முக்கியமானதாக உள்ளது. வெளிநாட்டு, உள்நாட்டுத் தனியார் முதலீடுகள் போதாமல் இருப்பது உள்கட்டமைப்பு வசதிகளின் குறைவிற்குக் காரணம் என அடிக்கடி கூறப்படுகின்றது. இப்பகுதிகளில் தனியார் முதலீட்டை ஊக்கப்படுத்த அரசாங்கம் முன்வந்துள்ளது. இவ்வகை முதலீடுகள் பாரியதாகவும், செலவு கூடியதாகவும் அமைவதாலும் இவற்றின் பலாபலன்கள் நீண்டகால இயல்பு மிக்கவையாக இருப்பதனாலும், யதார்த்தத்தில் தனியார் துறை குறிப்பாகத் தற்போதுள்ள சூழலில் இதில் முதலிடுவதற்குத் துணிவார்களா?

இந்த போக்குகள் அனைத்தும் 1995 இன் வளர்ச்சி இலக்கினை அடைந்து கொள்வதைக் கடினமானதாக்க முடியும். வேலைவாய்ப்பு நிலைமை கவலைக்கிடமானதாக உள்ளது. வரவு செலவுத்திட்டம் இதுபற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

"பொதுத்துறையில் வேலைவாய்ப்பு உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டதால், இத்துறையில் வேலைவாய்ப்பிற்கான சாத்தியங்கள் இல்லை. இத்துறையில், (குறைந்த சம்பளத்தில் என்றாலும் கூட) பெருமளவான ஊழியர்கள் இருப்பதால், அரசாங்கம் தனது நடைமுறைச் செலவில் 1/4 பங்கினை சம்பளங்கள் மீது செலவு செய்வது பெரும் சுமையாக உள்ளது. பொதுத்துறை போலல்லாது, தனியார்துறை சிறந்த தூண்டுதல்களின் கீழ், உயர்முதலீடுகள் ஊடாக வேகமான அபிவிருத்தியை ஏற்படுத்தி, உயர்ந்தளவு வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும். அத்துடன் சமுர்த்தி திட்டத்தின் கீழ் அரசாங்கம் சுயதொழில் வாய்ப்புக்களுக்கும் ஊக்கமளிக்க முடியும்".

ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல 1995ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் பிரதான நோக்கம் பணவீக்கத்தைக் குறைத்தலாகும். வேலைவாய்ப்பு உருவாக்கமும் அவசியமானதாகும்; ஆனால், அதனை பணவீக்கத்திற்கெதிரான உபாயங்களுக்கு ஊடாக ஏற்படுத்துவது அவசியம் என உணரப்பட்டுள்ளது. இதுவே அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் உயிர் நாடியாக உள்ளது. இது இரு அம்சங்களைக் கொண்டுள்ளது: முதலாவது, வரவு செலவுத்திட்ட உபாயம் உத்தேசித்துள்ளது போன்று செயற்படுத்தி வந்தாலும் கூட, இருக்கின்ற ஊழியர் திறனுக்கும், தேவைப்படும் ஊழியத் திறனுக்கும் இடையிலான இடைவெளிப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய வகையிலான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இது கலைத்துறை, மனிதப் பண்பியற்றுறை என்பவற்றை நோக்கி பெருமளவுக்கு நெறிப்படுத்தப்பட்டுள்ள எமது கல்வி முறையை பொதுத்துறையின் தேவையின் நோக்கில் வழியப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. அரசாங்கம் இத்தேவையை உணர்ந்துள்ளது. ஆனால், மீள்பயிற்சி, கல்வித்தர முன்னேற்றம், புதிய திறன்கள் அபிவிருத்தி என்பவற்றுக்கான அத்தியாவசிய நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. பணவீக்கம் சீராக்கப்பட்டபோது, கல்வி, உயர் கல்வி மீதான மதிப்பிடப் பட்ட செலவினம் பெரும்பாலும் மாறாமல் நிலையாகவே இருந்துள்ளது. ஏனைய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளும் போதாமலே உள்ளன.

இரண்டாவதாக, வரவு செலவுத் திட்ட உபாயங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது, அது போதுமான அளவு வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஏற்படுத்துமா ? இதுகூட ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகும். வேலையின்மை, கீழுழைப்பு நிலை என்பன தொடர்ந்து இருக்கும் போது கடந்த காலம் போலவே, தற்கால அனுபவமும், இவற்றைத் தீர்ப்பதற்கு சில நிதானமான கொள்கைகள் முன்வைக்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. ஏனெனில் வளர்ச்சி தானாகவே வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதில்லை. வெவ்வேறு துறைகளின் வெளியீடு தொடர்பாக வேலை வாய்ப்பு நெகிழ்ச்சித் தன்மை வேறுபடலாம். கைத்தொழில் துறைக்கான வேலைவாய்ப்பு நெகிழ்ச்சி, விவசாயம், சேவைகள் துறையின் வேலைவாய்ப்பு நெகிழ்ச்சியை விட மிகக் குறைவானது என அடெல்மான் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

புதிய அரசாங்கம் இலங்கைப் பொருளாதாத்தில் முக்கியமான விடயங்கள் பற்றித் தனது வரவு செலவுத்திட்ட உரையில் விளக்கமளிப்பதற்குத் தவறிவிட்டது என்றே நான் கருதுகின்றேன். இந்த விடயங்களை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு அவற்றை எதிர்கொள்வதற்குப் பதிலாக தற்போதைய சந்தர்ப்பத்தில் "வேறெதுவும் செய்ய இயலாது" என்ற ஒரு சோர்வு மனப்பான்மையை அது கொண்டுள்ளது போல தெரிகிறது. அரசாங்கம் கிழக்காசிய நாடுகளின் உண்மையான அனுபவங்களை அறிந்துகொள்வதன் மூலம், தனது பொருளாதார உபாயத்தினை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். அத்துடன், ஜனநாயகம், சமூக நீதி என்பவற்றுடன் கூடிய பொருளாதார அபிவிருத்தி என்ற அதனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். பிளைண்டரும், பிளாஸ்க் (1986) உம் குறிப்பிட்டது போல, வறியவர்கள் பணவீக்க நிலையில் கஷ்டப்படுவதைக் காட்டிலும், வேலையின்மை நிலைமையின் கீழ் கூடுதலாகக் கஷ்டப்படுவர். பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி பற்றிய அடம் சிமித்தின் கருத்துப்படி அபிவிருத்திச் செய்முறையை வளர்ச்சியும் வேலைவாய்ப்பும் மிகையாகத் தீர்மானிக்கின்றன. எனவே, வளர்ச்சியையும், வேலைவாய்பையும் பாதுகாத்துக் கொள்வதற்கு பணவீக்கத்திற்கு எதிரான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக, வேலைவாய்ப்பு உருவாக்கம் தொடர்பாக உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டும். இவ்வாறான செயற்றிட்டங்களில் நடைமுறை உபாயங்களின் சில கூறுகள் ஒரு புதிய அர்த்தத்தினைப் பெறும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

# அரசாங்கத்தின் பணவீக்கத் தடுப்பு உபாயம் குறித்த ஒரு மதிப்பீடு

கலாநிதி எச். நிக்கலஸ்

1. அறிமுகம்

பொதுசன முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் பேரண்டப் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி குறிக்கோள்கள் தொடர்பாக பரந்தளவில் விபரங்களைக் கொண்டுள்ளது எனப் பல விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தெரிவிக்கப்பட்ட பேரண்டப் பொருளாதார, அபிவிருத்தி குறிக்கோள்களின் அடிப்படையில் வரவு செலவுத்திட்ட யோசனைகளை மதிப்பிடுவது என்பது வழக்கமான நடைமுறையினைக் காட்டிலும் இலகுவானதாகும். இத்தகைய கொள்கை நோக்குகளில் ஒன்று பணவீக்கததைக் கட்டுப் படுத்துவதாகும்.

பணவீக்கம், பொதுவான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் என்பன தொடர்பாக நாணயவாதிகள் கொண்டிருந்த கருத்தையே இலங்கை அரசாங்கம் பின்பற்றப் போவதாக வரவு செலவுத்திட்ட உரையில் தெரிவிக்கப் பட்டது. நாணயவாதம் என்பது பழமை பேணும் அரசியல் செயற்பாடுகளுடன் கூடிய ஒரு பொருளாதார கருத்தாகும். பணவீக்கம் எப்போதும், எவ்விடத்திலும் நாணயம் சார் நிகழ்வாக இருந்துள்ளது என்பதே நாணயவாதிகளின் கருத்தாகும். பணவீக்கத்திற்கு பண நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு ஒரு காரணமாகக் கூறப்பட்டது. பிற்காலங்களில், இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் வங்கிக் கடன்கள் மூலமான இறை மிகைகள் இதற்குக் காரணமாகக் கூறப்படு கின்றது.

". . . 1989 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட வருடங்களில், பற்றாக் குறை நிதியீட்டத்திற்கான பிரதான வழியாக, முன்னைய அரசாங்கம் வங்கிக் கடனையே நாடியது. இவ்வகையான நிதியீட்டம், உடனடியாக சுற்றோட்டத்தில் உள்ள பணத்தின் அளவினை அதிகரிக்கச் செய்து (இது உயர்வலுப் பணம் என அழைக்கப்படுகிறது) நாட்டின் பணவீக்கத்திற்குக் கணிசமான அளவு பங்களிப்பைச் செய்துள்ளது. இச்செய்முறையே கடந்த 17 வருட காலமும் நடந்தேறியுள்ளது. இது விரிந்த பண நிரம்பலை 20% தால் உயர்த்தி (1994 இல்) உயர் பணவீக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மத்திய வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கான அடுத்த தெரிவாக நாணய வெளியீடு விளங்குகின்றது. இது உள்நாட்டுப் பண நிரம்பலை அதிகரிக்கச் செய்து, தாங்கமுடியா தளவுக்கு பணவீக்கத்தை ஏற்ப டுத்தும்" (வ.செ. திட்ட உரை).

இக்கட்டுரை பணவீக்கம் தொடர்பாக அரசாங்கம் கொண்டுள்ள கருத்தின் கோட்பாட்டு ரீதியான அடிப்படைகளையும், இலங்கையின் அனுபவங்களையும் ஆராய்கின்றது. இந்த ஆராய்ச்சியின் பெறுபேறுகள், பணவீக்கததைக் குறைத்தல் என்ற அரசாங்கத்தின் அணுகுமுறை ஏற்றுக் கொள்ளக்கூடிய பலனை அளிக்குமா என்பதை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப் படுகின்றன.

இக்கட்டுரையின் அடிப்படை முடிவுகள் வருமாறு:

- அரசாங்கம் பின்பற்றும் நாணயவாதிகளின் கோட்பாட்டு அடிப்படைகள் சர்ச்சைகளைக் கிளப்பக் கூடியவையாகும். அத்துடன், அண்மைக்காலத்தில் அவை பலத்த விமர்சனங் களையும் சந்தித்துள்ளன.
- இலங்கையின் நிலையில் இக்கருத்துக்களுக்கு ஆதாரமான அனுபவபூர்வமான தரவுகள் இல்லை.
- பணவீக்கத்தைத் தடுப்பதற்கென அரசாங்கத்தால் பிரேரிக்கப்பட்ட நாணயக் கொள்கைகள் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் அதேவேளையில், பணவீக்கத்தை மேலும் தீவிரப்படுத்துவதாகவும் அமையும்.

பணவீக்கத்துடன் கூடிய வரவு செலவுத்திட்டத்தினைப் பற்றி அரசாங்கம் சிந்திக்கும் போது குறைந்தளவு பணவீக்கம் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான ஒரு நிபந்தனை என்ற நம்பிக்கையை முதலில் கொண்டிருக்க வேண்டும். இந்த ஆய்வில் இப்பிரச்சினை எடுக்கப்படா விடினும், பொருளியலாளர்கள் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டிய தேவை உள்ளது

2. பணவீக்கம் மீதான நாணயவாத சிந்தனையின் முக்கிய கூறுகள்

### 2.1. பொது அம்சங்கள்

பணவீக்கம் தொடர்பான நாணயவாதிகளின் சிந்தனையின் அம்சங்கள் பின்வருமாறு :

❑ அடிப்படையில் பணவீக்கம் ஒரு நாணயம் சார் தோற்றப்பாடாகும்; வெளியீட்டு வளர்ச்சியையும் விஞ்சியதாக பண இருப்பின் வளர்ச்சி அதிகமாக ஏற்படுவதனால் அது விலை மட்டத்தில் பொதுவான அதிகரிப்பை ஏற்படுத்தும். பண நிரம்பல் மாற்றத்தினால் குறுங்காலத்தில் பொருளாதாரங்களில் (வெளியீடு, முதலீடு, வேலையாய்ப்பு என்பவற்றில்) பாதிப்பு ஏற்பட முடியும். இது பணவீக்கத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும். நீண்டகாலத்தில் மெய்ரீதியான, பணரீதியான நாணய மாறிகள் ஒன்றின் மீது ஒன்று தாக்கத்தினை ஏற்படுத்த மாட்டா.

❑ வெளியீட்டு வளர்ச்சி நிலையானது என எடுகோள் கொள்ளின், மொத்த பண வருமானம்; மொத்த விலை மட்டம் என்பவற்றின் மாற்றத்திற்கும் கூட்டு பண இருப்பில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையில் உறுதியாக தொடர்பு இருக்க வேண்டும். அத்துடன், இது முற்கூட்டியே தீர்மானிக்கப்படக்கூடியதாகவும் இருக்கும். நாணயவாதிகள் தமது வாதத்தை விளக்குவதற்கு, பணக்காரியக் கோட்பாட்டை பின்வரும் வடிவில் மீண்டும் எடுத்தாளுகின்றனர்:

$MV = PY$

இங்கு M = பண இருப்பு

V = பணச் சுற்றோட்ட வேகம்

P = மொத்த விலை மட்டம்

Y = மெய் வெளியீடு

பொதுவாக 'V' ஐ நிலையானது எனக் கொண்டு, M ற்கும், PY ற்கும் இடையில் ஒரு எதிர்வு கூறக்கூடிய தொடர்பு இருப்பதாக விளக்கப்படுகின்றது.

❑ பண இருப்பு மாற்றத்திற்கும், அதனுடன் தொடர்புடைய பண விலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கும் இடையிலான தொடர்பு கால பின்னிடைவுடன் தொடர்புடையது. 'பண மாயை' என்பது இருப்பதனாலேயே வெளியீடு மீது உடனடித் தாக்கம் ஏற்படுகின்றது. எவ்வாறெனினும், நீண்ட காலத்தில் பண இருப்பு மாற்றத்தின் முழுத் தாக்கமும், வெளியீடு மற்றும் ஏனைய மெய்மாறிகளுடன் இணைந்ததாக ஏற்படும் விலைமட்ட அதிகரிப்பினால் உள்ளிழுக்கப்பட்டுவிடும். அத்துடன், இவற்றினால் ஏற்பட்ட விளைவுகள் மீண்டும் பழைய நிலைக்குச் (உறுதி நிலை) சென்றுவிடும். 1970 களில், கைத்தொழில் நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள் இவ்வாறான உறுதி நிலையை அடைய 12 தொடக்கம் 18 மாதம் வரை எடுத்ததாக சுட்டிக்காட்டுகின்றன.

❑ நிலையான நாணய மாற்று வீதத்தின் கீழ், குறுங்காலத்தில் பண இருப்பில் ஏற்படும் மாற்றமானது, வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் வெளிப்பாய்ச்சலை அதிகரிக்கச் செய்யும். மேலும், குறுங்காலப் பணவீக்கம், வெளிநாட்டுப் பொருட்கள் சேவைகள், சொத்துக்கள் மீதான கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பினால் ஈடுசெய்யப்படும்.

❑ உயர்வலுப் பணத்தில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக பண இருப்பில் மாற்றம் ஏற்படலாம். இவ்விரண்டிற்குமிடையிலான தொடர்பு கணிசமான அளவு உறுதியாக இருப்பதுடன், முற்கூறக்கூடியதாகவும், கட்டுப்படுத்தப்படக்கூடியதாகவும் இருக்க வேண்டும். மத்திய வங்கியின் பொறுப்புக்களுக்கு மேலாக வேறு சொத்துக்கள் எதையும் ஒதுக்காகக் கொள்ளும் போது, மேற்கூறியவற்றுக்கிடையில் ஒரு உறுதியின்மை ஏற்படும் என பிரீட்மன் கூறுகிறார்.

❑ வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சலாலும், அரசாங்கம் வங்கி முறைமைகளிலிருந்து கடன் பெறுவதாலும் உயர்வலுப் பணத்தில் மாற்றம் ஏற்படுகின்றது.

❑ உயர்வலுப் பணத்தின் அளவு அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுகிறது. முக்கியமாக இது பகிரங்கச் சந்தை நடவடிக்கையினால் தீர்மானிக்கப்படுகிறது. மிகையான உயர்வலுப் பணம் (திரவத்தன்மை) இருக்குமாயின் அரசாங்கம் தனது கடன்களை விற்பனை செய்வதன் மூலம் இம்மிகையை நீக்கிக் கொள்ள முடியும். பிரீட்மன் போன்ற நாணயவாதிகளது கருத்துப்படி, நாணய அதிகாரிகள், பகிரங்கச் சந்தை நடவடிக்கையின் பலனாக வட்டி வீதத்தைக் கருதக்கூடாது. அவர்கள் உயர்வலுப் பண அளவிலேயே கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

மேற்கூறிய நாணயவாதிகளின் விளக்கத்தின் அடிப்படையில் இலங்கையின் பணவீக்கத்திற்கு ஒரு முக்கியமான விளக்கம் கொடுக்கப்படல் வேண்டும். நாணயவாதிகளைப் பொறுத்தமட்டில் (சிறப்பாக இலங்கை அரசாங்கத்திற்காக) ஒரு வரவு செலவுத்திட்டம் சுயமாக பணவீக்கத் தன்மை உடையது அல்ல. உயர்வலுப் பணத்தில் மிகை விரிவாக்கம் ஒன்று நிலவுமாயின், அதனால் மட்டுமே பணவீக்கம் ஏற்படும். ஆனால், முன்னைய ஆட்சிக்கால மிகை இறைகள் சுற்றோட்டத்தில் உள்ள பணத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்ததனால், அது பணவீக்க உயர்விற்குக் காரணமாக அமைந்தது. இதன் மறு கருத்து என்னவெனில், வங்கித்துறையிலிருந்து கடனைப் பெற்று (நாணய வெளியீடு) நிதியீட்டம் செய்யப்படாத வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் எவ்வளவு உயர்வாக இருப்பினும்

அவை பணவீக்கத்திற்குக் காரணமாக அமையமாட்டா. எனினும், இவை "குவியல் வெளியேற்றம்" (முதலீட்டு வெளியேற்றம்) போன்ற பாதகமான விளைவுகளுக்குக் காரணமாகலாம்.

**2.2. அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் தொடர்பான கருத்துக்கள்.**


அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பின்னணியில் பணவீக்கத்தைக் கவனத்தில் கொள்ளும போது நாணயவாதிகள் பின்வரும் மேலதிக காரணிகளையும் முன் வைக்கின்றனர்:

- ❑ அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் வெளியீட்டில் நெகிழ்வுத்தன்மை குறைவாக இருப்பதால், குறுங்காலத்தில் பண இருப்பில் ஏற்படும் மாற்றம் விலை, வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் என்பவற்றில் உடனடி மாற்றத்தை ஏற்படுத்தும். பண இருப்பு மாற்றத்துடன் தொடர்பான விலை மாற்றக் காலம் ஏறக்குறைய ஒரு வருட கால பின்னிடைவைக் கொண்டதாக அமையும். விலைகள் மிக இறுக்கமாக இணைந்துள்ள இடங்களில், அரசாங்க தலையீடு இருப்பதாலும், பண இருப்பில் விரிவாக்கம் இருப்பதாலும் முறைசார் சந்தையில் பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும் அதே நேரம் கள்ளச் சந்தையில் விலை உயர்வடையும்.


- ❑ நிதிச் சந்தையின் குறைவிருத்தித் தன்மை, பண அடித்தளம் மீதான அரசாங்க கட்டுப்பாட்டை கடினமானதாக்கும். உதாரணமாக குறுகிய முதிர்ச்சிக் காலமுடைய அரசாங்க கடன்கள் பிணைச் சந்தையில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதன் கருத்து யாதெனில், பொதுத்துறையின் கடன் தேவையின் அளவில் குறிப்பிடக்கூடிய அதிகரிப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில், நாணய அதிகாரிகள் உள்நாட்டு வங்கிகள் மூலமான கடன் பெறுவதறகு சிறு அளவிற்கே அனுமதி வழங்குவார்கள் என்பதாகும். அத்துடன், வெளிநாட்டுச் செலாவணிகளின் உட்பாய்ச்சல்களைக் கட்டுப்படுத்துவது என்பதும் நாணய அதிகாரிகளைப் பொறுத்த வரையில் கஷ்டமானதாகும். எனவே, இலங்கையின் நிலையில் – குறிப்பாக குழந்தைப் பருவ பிணைச்சந்தை உள்ள இடத்தில் – நாணய அதிகாரிகள் வட்டிவீதத்தை உயர்த்தாது, பண அடித்தளத்தைக் கட்டுப் படுத்துவது கடினமானதாகும்.

- ❑ ஏனைய மாற்று நிதிச் சொத்துக்களும் சார்பளவில் குறைவாக உள்ளன. அதாவது, செல்வத்தைக் கொண்டிருப்பவர்களுக்கான பதிலீடாக பணமும், மற்றும் பௌதீக சொத்துக்களுமே உள்ளன. இது கொடுக்கல் வாங்கல் நோக்கிற்காக பணம் வைத்திருக்கப் படுகின்றது என்ற நாணயவாதிகளின் மறைமுகமான கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறது. எனவே, இதன்படி பண இருப்பு என்பது புழக்கத்தில் உள்ள தான் குத்தி நாணயங்களும்

**வரைபடம் 1**




**வரைபடம் 2**



கேள்வி வைப்புக்களும் என வரைவிலக்கணப்படுத்த முடியும்.

- உதவி வழங்கும் நாடுகளாலும் பல்பக்க முகவர்களாலும் தொடர்ந்தும் ஆதரிக்கப்பட்டு வரும் சென்மதி நிலுவையானது, கொடுப்பனவுச் சமமின்மைகள், நீண்ட காலத்திற்கு நியாயமான அளவில் உள்நாட்டுப் பண வீக்கத்தைச் சமப்படுத்த முடியும் என்பதை உணர்த்துகின்றது.

## 3. நாணயவாத சிந்தனை குறித்த விமர்சனங்கள்

### 3.1. பண நிரம்பலின் வரைவிலக்கணம்

நாணயவாதிகள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை பணத்திற்குத் தெளிவான அடிப்படையில் வரைவிலக்கணம் கொடுப்பதாகும். கட்டுப்படுத்தும் நோக்கங்களுக்காக பண இருப்பிற்கான வரைவிலக்கணத்தை அவர்கள் தெளிவாக வரையறுத்துள்ளனர்.

பணம் கணக்கீட்டு அலகாகவும் கொடுப்பனவு ஊடகமாகவும் திரட்டி வைக்கப்பட்டிருக்கும் பெறுமதியாகவும் செயற்பட்டு வருகின்றது என்பதனை ஏற்றுக் கொள்ளும் நாணயவாதிகள் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதி செய்து கொடுக்கும் ஊடகம் என்ற முறையிலேயே அதற்கு உயர் முக்கியத்துவத்தை வழங்குகிறார்கள். ஏனைய சொத்துக்களைப் போலவே பணமும் ஒரு சொத்தாக கருதப் படுகிறது. இது நிதிச் சொத்தாகவோ மெய் சொத்தாகவோ அமையலாம். பணத்தைப் பணமாக வைத்திருப்பது ஆதாயத்தை தருவதில்லை. மாறாக அதன் கொள்வனவு சக்திக்காகவே அது வைக்கப்பட்டுள்ளது. இன்னொரு வகையிற் கூறின், பணம் கட்டாயமாக வட்டி உழைக்காததாக இருக்க வேண்டும். இக்காரணத்தினாலேயே பல நாணயவாதிகள், பண இருப்பிற்கான வரைவிலக்கணமாக 'குறுகிய பணம் அல்லது 'M1' ஐ கருதுகின்றனர். குறுகிய பணம், கேள்வி வைப்புக்களும், புழக்கத்தில் உள்ள தாள், குத்தி நாணயங்களும் என வரைவிலக்கப்படுகின்றது.

பணம் கொடுப்பனவு ஊடகமாக தாள், குத்தி நாணயங்களிலும், கேள்வி வைப்புக்களிலும் மேற்கொள்ளப்படுகிறது. இது சேமிப்பு தவணை வைப்புக்களை உள்ளடக்கிய கிட்டிய பணமாகவும் பதிலீடு செய்யப்படலாம். இதற்கும் மேலாக பல கேள்வி வைப்புக்கள் வட்டியை உழைக்கும் தன்மை உடையவை. அத்துடன், தனிப்பட்டவர்கள், சேமிப்புக் கணக்கு மீது காசோலை எழுதிக் கொடுப்பனவை மேற்கொள்ள முடியும்; அல்லது சேமிப்பு நிலையான கணக்குகளுக்கு எதிராக மேலதிகப் பற்றினைப் பெறமுடியும். எனவே, பண இருப்பு என்பதற்கான வரைவிலக்கணம் தற்போதைய ஆய்வுகளின் படி, தாள்களும், குத்திகளும் என்பதிலிருந்து 'M2' ற்கு மேலாகவும் வேறுபடலாம் (M2 என்பது தாள் குத்தி நாணயங்களும், கேள்வி வைப்புக்களும்,வர்த்தக வங்கிகளுடனான சேமிப்பு, நிலையான வைப்புக்களுமாகும்).

பிரிட்டிஷ் பொருளியலாளரான கல்டோர் என்பவர் மேற்கூறிய பிரச்சினைகளை ஆராய்ந்து பின்வரும் முடிவிற்கு வருகின்றார்:

> ". . . பண நிரம்பலின் ஒரு பகுதியாக வட்டி உழைக்கும் நிதிச் சொத்துக்களை ஏற்றுக்கொண்டால் . . . . பணம், பணமல்லா நிதிச் சொத்துக் களுக்கிடையே தெளிவான வரையறையைக் கூறமுடியாது போகலாம். மேலும் பண நிரம்ப லுக்கான பரந்த வரைவிலக்கணமானது ஒரு நியாயமற்ற விளக்கமாக இருக்க முடியும். ஏனெனில், பண நிரம்பலுக்குள் உள்ளடக்கப்படாத, ஆனால் இவற்றுக்குக் கிட்டிய பதிலீடு களாக உள்ள திரவச்சொத்துக் களின் அடிப்படையில் இவ் வரைவிலக்கணம் அமைகின்றது"

பணம், பண இருப்பு என்பவற்றுக்கான கோட்பாட்டு ரீதியான வரைவிலக்கணப் பிரச்சினை அரசாங்க கொள்கை மட்டத்தில் பிரதி பலிக்கப்படடு வந்துள்ளது. மத்திய வங்கியும், நாணய அதிகாரிகளும் அடிக்கடி தமது பண இருப்பின் நடைமுற வரைவிலக்கணத்தை மாற்றுவது அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. இதற்கு உதாரணமாக 1980 களில் பொருளாதாரக் கொள்கை வகுத்தலில் நாணயவாதிகளின் ஆதிக்கம் உயர்வாக இருந்த காலத்தில், இங்கிலாந்து நாணய அதிகாரிகள் செயற்பட்ட விதத்தைக் குறிப்பிடலாம்.

### 3.2. பண இருப்பின் கட்டுப்பாடு

நாணய அதிகாரிகள் பண இருப்புக்கான செயற்பாட்டு வரைவிலக்கணத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டதற்குக் காரணம் பணஇருப்பு மாற்ற இலக்கினை அவர்கள் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாமையேயாகும். இவ்வகைப் பிரச்சினையை சார்ள்ஸ் குட்கார்ட் என்பவரின் 'குட்கார்ட் விதி' பின்வருமாறு விளக்குகின்றது:

> "எந்த ஒரு புள்ளிவிவர ரீதியான ஒழுங்கு முறையின் மீதும் கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக நிர்ப்பந்தம் மேற்கொள்ளப்படும் பொழுது அது வீழ்ச்சிப் போக்கைக்காட்டும்."

இந்தப் பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணம் அரசியல் விருப்பின்மையே என நாணயவாதிகள் கருதுகின்றனர். ஒரு புறம், அரசாங்கங்கள், அரசியல் நோக்கங்களுக்காக இறைக் கொள்கைகளின் விவேகத் தன்மையினைப் புறக் கணித்துள்ளன. மறுபுறம், இதனை ஈடுசெய்வதற்கான நாணய நடைமுறைகளையும் மேற்கொள்ளத் தவறிவிட்டன. நாணய விதிகளின் கருத்துக்களை விமர்சனம் செய்கின்ற பல பொருளியலாளர்கள், சந்தைப் பொருளாதாரம் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை என்ற கருத்தை முன் வைக்கின்றனர். இதனுடன் தொடர்பாக சில குறிப்புக்களை இங்கு கூறமுடியும்.

இறுதிக் கடனீவோன் என்ற வகையில் மத்திய வங்கி இதனைச் செய்யும் கடப்பாடு உடையது. மேலும், வங்கி முறையிலிருந்து உருவாகும் காசு ஒதுக்கங்களுக்கான கேள்வியையும் இதுவே சமாளிக்க வேண்டியுள்ளது.

- வங்கிகளுக்கிடையிலான அழைப்புச் சந்தையிலிருந்து தேவையான ஒதுக்கத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு வங்கிகளுக்கு உண்டு. திரவத் தன்மையில் பற்றாக்குறை ஏற்படுமாயின் அழைப்புக்கடன் சந்தையின் சுற்றோட்ட வேகம் மாற முடியும்; அல்லது இச்சந்தை வங்கித்துறைக்கு வெளியே இருந்து நிதிகளை உள்ளிழுத்துக்கொள்ள முடியும்.

- வட்டிவீதத்தை உறுதிப்படுத்துவதற்கு நாணய அதிகாரிகள் கட்டப்பாடு உடையவர்கள். வட்டிவீத உயர்வினை எந்தளவிற்கு அனுமதிக்க முடியும் என்பதற்கு நாணய அதிகாரிகளுக்கு ஒரு எல்லை உண்டு.


உண்மையில் நாணயக் கொள்கையானது, நிதி முறைமைக்கான நிதிகளின் செலவு மீது தாக்கதை ஏற்படுத்தும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்; பொறுப்புக்களின் அளவு தொடர்பாக இலக்குகளை நிர்ணயிப்பதில் அது கவனம் செலுத்த வேண்டியதில்லை. சந்தை முறையில் செலவையும் தொகையையும் ஒருவர் தீர்மானிக்க முடியாது என்பது நன்கறியப்பட்ட விடயமாகும். நிதிகளின் செலவைத் தீர்மானிக்கையில், நாணய இலக்குகள் குறைந்த பங்கினைப் பெறவேண்டும்.

3.3. பண இருப்பு – விலை மட்டங்களுக்கிடையிலான தொடர்பு


1980 களின் பல ஆய்வுகள், பண இருப்பு மாற்றத்திற்கும் பெயரளவு வருமான மாற்றத்திற்குமிடையிலான தொடர்பில் உறுதித்தன்மை உள்ளது என்ற எடுகோளை உடைத்துள்ளன.

இந்த முறிவிற்கு நாணயவாதிகளால் கொடுக்கப்பட்ட விளக்கம் மாறுபட்டதாகும். பெரும்பாலும் அடிக்கடி கூறப்படும் காரணங்களாவன : நிதியியல் ரீதியான புதிய கண்டுபிடிப்புக்கள் பணத்திற்கான வரைவிலக்கணத்தை மாற்றுவதற்கு

வரைபடம் 3




வரைபடம் 4




வழிகோலியமை, செலவுப் பழக்க வழக்கத்தில் ஏற்பட்ட மாற்றம், நாணய ரீதியான அதிர்ச்சிகள், ஸ்திரமற்ற பணவீக்கம், வட்டிவீதம் என்பனவாகும். விளக்கங்கள் எவ்வாறு இருப்பினும், நீண்டகாலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் பண இருப்பு-பண வருமானத் தொடர்பில் முறிவு ஏற்பட்டுள்ளது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், நீண்டகாலத் தொடர்பும் கூட பண இருப்பு மாற்றத்திலிருந்து பண வருமான மாற்றம் வரையான காரணகாரியத் தொடர்பும் நிருபிக்கப் படவில்லை.

4. இலங்கையின் அனுபவம்

4.1. கட்டுப்பாட்டு மாறிகள்

இலங்கையின் மொத்த விலைமட்டங்களில் ஏற்படும் மாற்றங்களின் போக்கையும் அதன் முக்கியத்துவத்தையும், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண், மொத்த விற்பனை விலைச்சுட்டெண், மொத்த உள்நாட்டு உற்பத்தி விலைச்சுருக்கி (மத்திய வங்கியினதும், குடித்தொகை புள்ளிவிபரத் திணைக்களத்தினதும் வெளியீடுகள்) என்பவற்றின் மூலம் மதிப்பிட முடியும். ஒவ்வொரு சுட்டிகளினதும் தகுதியும், தகுதியின்மையும்


பல கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளது. இதனால் அவற்றை இக்கட்டுரையிலும் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. நாணயவாதிகளின் கருத்துக்களை நிரூபிப்பதற்கு வேண்டிய விலைமட்ட மாற்றங்களின் கோட்பாட்டளவில் பொருத்தமான பதிலியாக மொ.உ.உற்பத்திச் சுருக்கியை ஏற்றுக்கொள்ளலாம். இதனை ஏற்றுக்கொள்வதற்கான ஒரு காரணமாக, ஏனைய சுட்டிகளுடன் ஒப்பிடுமிடத்து இது பரந்த சுட்டியாக உள்ளமையைக் கூறலாம். அதாவது, நிறையளிக்கப்பட்ட மொத்தப் பெறுமதி கூட்டப்பட்ட, உள்நாட்டு அனைத்து பொருட்கள், சேவைகளையும் உள்ளடக்கியுள்ளது. மாறாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உணவுப்பொருட்கள் மீது கூடுதலாக நிறையளிக்கப்பட்டு, சில வரையறுக்கப்பட்ட நுகர்வுப் பண்டங்களை அடிப்படையாகக் கொண்டே கணிப்பிடப்படுகிறது. மேலும், நிர்வாக ரீதியான தடைகள் காரணமாக, ஒரு தொகுதிப் பொருட்கள் மட்டுமே சுட்டிக் கணிப்பீட்டிற்கு உட்படுகின்றன.

பண இருப்பு-விலை மட்ட மாற்றங்களுக்கிடையிலான தொடர்பு பற்றி ஆராய்ந்த பல கட்டுரைகள், கொ.நு.விலைச் சுட்டெண்களையே அதனுடைய குறைபாடுகள் பற்றி எவ்வித அக்கறையும் செலுத்தாது பயன்படுததியுள்ளன. இதனால் இவ்வாய்வுகளின் பெறுபேறுகள் போலியான முடிவைத் தருவதாக அமையக்கூடும். இது தொடர்பாக, வெளிப்படையாகத் தெரிய வருவது என்னவெனில், இந்த ஆய்வுகள், குறிப்பாக 1970-77 காலப் பகுதியில் பண இருப்பு மாற்றத்திற்கும் கொ.நு.வி.சுட்டெண் மாற்றத்திற்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு என்ற முடிவுக்கு வந்த ஆய்வுகள், இக்காலத்தில் கொ.நு.வி. சுட்டெண்ணின் கட்டுப்பாடான தன்மையின் கீழ் விலை மட்டத்திலிருந்து பண இருப்பிற்குக் காரணகாரியத் தொடர்பு ஏற்பட்டிருக்க முடியும் என்பதை உணராத வகையிலேயே தமது ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.


பண இருப்பு

இலங்கையின் பணவீக்கத்தில்

வரைபடம் 5




வரைபடம் 6





நாணயவாதிகளின் கருத்தைப் பரிசோதிப்பதற்குப் பொருத்தமான பண இருப்பு மாறி ஒடுங்கிய பணமாகும். ஒடுங்கிய பணம் தான், குத்தி நாணயங்களையும் கேள்வி வைப்பையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் இவை கொடுக்கல் வாங்கல் நோக்கத்திற்காகவே வைத்திருக்கப் படுகின்றன. ஆனால், சேமிப்பு, தவணைவைப்புக்கள் என்பன வருமானத்தைத் தரும் சொத்துக்கள் ஆதலால் இவை வெறுமனே வைத்திருக்கப்படுவதில்லை. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில், சாதாரண தனிப்பட்டவர்களுக்கு வட்டி உழைப்பதற்குக் குறைந்தளவு முதலீட்டு வாய்ப்புக்களே உள்ளன. எனினும், இலங்கை மத்திய வங்கியின் மரபுடன் ஒத்ததாக வரவு செலவுத் திட்ட உரையில் பொருத்தமான நாணயக் கட்டுப்பாட்டு மாறியாக விரிந்த பண நிரம்பல் கருதப்பட்டுள்ளது.

## 4.2. ஆதாரங்கள்

நாணயவாதிகளின் கோட்பாட்டைப் பரிசீலிபபதற்கு "வேகப் பரிசோதனை" என்ற முறை அடிக்கடி கையாளப்படுகின்றது. நாண்ய

வாதிகளின் கருத்துப்படி, பண இருப்பு மாற்றத்திற்கும், மொ.உ.உற்பத்திக்கு மிடையில் ஒரு உறுதியான தொடர்பு இருப்பின, பண வருமானச் சுற்றோட்ட வேகமும் உறுதியாக இருக்கும் எனினும், வரைபடம் 2 இல் விரிந்த பண சுற்றோட்ட வேகம் ஸ்திரமற்றது என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும், சுற்றோட்ட வேகம் பண இருப்பினால் அடிக்கடி ஈடுசெய்யப் படுகிறது. பண வருமானம், விலை என்பவற்றின் மீது பண இருப்பு மாற்றத்தின் தாக்கம் பற்றி எதிர்வு கூறுவது கடினமானது. தாமதமான பண இருப்பு மாற்றம், நாணய அதிர்ச்சிகளை ஏற்படுத்தி, நடைமுறை வருமானங்களை நிரந்தர வருமானமாக மாற்றுகிறது.


வரைபடம் 7




இறக்குமதிச் செலவு

நாணயவாதிகளின் நோக்கில், பண இருப்பு மாற்றத்திற்கும், பண வருமான மாற்றத்திற்கும் (விலையும் கூட) இடையில் தொடர்பு குறைவாக இருப்பதற்கான காரணம், வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களை (இறக்குமதிச் செலவு)க் கவனத்தில் கொள்ளாமையால் ஏற்பட்டதாகவும் இருக்க முடியும். வரைபடம் 4 இறக்குமதிச் செலவினையும், பண இருப்பு மாற்றத்தினையும் தொடர்புபடுத்து கின்றது. இதில் இவ்விரு மாறிகளுக்கு மிடையில் தொடர்பு இருப்பதை அறிய முடியாமல் போகலாம். அவ்வாறே, மிகையான அல்லது எச்சமாக உள்ள பண இருப்பு மாற்றம், பெயரளவு மொ.உ.உற்பத்தியையும் விடக் கூடுதலாக இருக்கும் பட்சத்தில் அது இறக்குமதிச் செலவினுள் ஊடுருவியிருக்க முடியும். வரைபடம் 5 இவ்விரண்டிற்குமிடையிலான மாற்றத்தை விளக்குகிறது. இது மிகைப் பண இருப்பின கணிசமான பகுதியாக இறக்குமதிச் செலவினை விளக்கு கின்றது. நாணயவாதிகளின் கருத்தினைப் பலப்படுத்தும் வகையில் இது உள்ளது.

வரைபடம் 8




எனினும், மூன்றாவது மாறியாக இறக்குமதி விலைகளை அறிமுகம் செய்தல், காரணகாரியத் தொடர்பின் கருத்தின், நியாயத் தன்மையில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. வரைபடம் 6 லிருந்து, இறக்குமதிச் செலவில் ஏற்படும் மாற்றம் இறக்குமதி விலைகளின் மாற்றத்துடன் நெருங்கிய தொடர்புடையது என்பதை அறிய முடிகிறது. இறக்குமதி விலைகள் புறநிலையாகக் கொடுக்கப்பட்டதாகக் கருதப்பட முடியும். ஆதலால், நாணயவாதிகளால் கூறப்பட்டது போல காரணகாரியத் தொடர்பு எதிர்ப்பக்கமாகச் செயற்பட முடியும். உண்மையில், பண இருப்பு மாற்றமானது, இறக்குமதிச் செலவு, உள்நாட்டு விலைமட்ட மாற்றம் என்பவற்றினால் மாற்றமடைகின்றது. இன்னொரு வகையில் கூறின், பண இருப்பு மாற்றம், அகநிலையாகக் காணப்படுவதுடன், பணவீக்கத்தை ஏற்படுத்தும் காரணியாகவும் உள்ளது.

உயர் வலுப் பணம்


உயர்வலுப் பணத்திற்கும், பண இருப்பிற்கும் இடையிலான தொடர்பை நிரூபிப்பதற்கு, முதலில் இவ்விரு கூறுகளுக்குமிடையில் ஒரு உறுதியான தொடர்பு இருப்பது அவசியமானது. உயர்வலுப் பணத்திற்கான மரபார்ந்த வரைவிலக்கணத்தை (பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயமும், வங்கித்துறையின் காசு ஒதுக்கமும்) பாவித்த, இரு மாறிகளினதும் சராசரி

வளர்ச்சி வீதத்திலிருந்து, இவற்றுக்கிடையே ஒரு நீண்ட காலத் தொடர்பு இருப்பதை அறியமுடிகிறது. எனினும், உயர்வலுப் பணத்தை பண இருப்பு மாற்றத்தின் விகிதாசாரமாக கணித்து (பணப்பெருக்கி), அதில் ஏற்படும் மாற்றத்தை வரைபடத்தில் குறித்த போது, அது இரு மாறிகளுக்கு மிடையில் உறுதியான தொடர்பு இருப்பதையும், அது எதிர்வு கூறக் கூடியது என்பதையும் காட்டுகின்றது.

மேலும், உயர்வலுப் பணத்திற்கும் விரிந்த பணத்திற்கும் இடையிலான மாற்றத்தை ஆராயின், (வரைபடம் 9) அதுவும் இவற்றுக்கிடையில் தொடர்பு இருப்பதை எடுத்துக் காட்டுவதுடன், இத்தொடர்பானது விரிந்த பணத்திலிருந்து உயர்வலுப் பணத்தை நோக்கிச் செல்லும் மாற்றமாகவும் காணப்படுகின்றது. உதாரணமாக, 1982-87 காலப் பகுதி நடத்தைகளைக் கூறலாம். இக்காலத்தில் 'M2 ' முக்கிய மாறியாகச் செயற்பட்டுள்ளது. இவ்வாறு எதிர்மாறான தொடர்பு இருப்பதற்கான காரணம் இலங்கையில் நாணய அதிகாரிகள் அர்த்தமுள்ள வகையில் பண அடித்தள வளர்ச்சியைக் கட்டுப்படுத்தத் தவறியமையே ஆகும். இதற்கான காரணங்களாவன:

- முதலில், பெருமளவான அந்நியச் செலாவணியின் உட்பாய்ச்சலானது, பல னளிக்காத வகையில், வட்டி வீதத்தை அதிகளவிற்கு உயர்த்தும். மத்திய வங்கியின் ஆதாரங்களின்படி 1990 ற்குப் பின்னர் இப்பிரச்சினை இலங்கையில கூர்மை யடைந்தது. காரணம் இக்காலத்தில் தொடர்ச்சியான சென்மதிநிலுவை மிகை இருந்து வந்துள்ளது.
- இரண்டாவதாக, ஏனைய வளர்முக நாடுகளைப் போலவே இலங்கையிலும் பாரிய முறைசாரா பணச்சந்தை ஒன்று ஒதுக்குப் பணப்பாய்ச்சலில் ஈடுபடுகின்றது. இச்சந்தையின் பருமன் தற்போது சுருங்கியிருப்பினும் அதன் முக்கியத்துவம் மாறாமலே உள்ளது.

வரைபடம் 9




- மூன்றாவதாக, பற்றாக்குறை வரவு செலுவத்திட்டமும் அதிகாரிகள் வங்கிக்கடனை நாடுவதற்குக் காரணமாக அமைந்தது. (இது வட்டிவீத உயர்வைத் தடுக்கும்). 1989 லிருந்து குறிப்பாக சர்வதேச நாணய நிதி உலக வங்கி என்பவற்றுடன் அமைப்பு ரீதியான சீராக்கல் தொடர்பான ஓர் உடன்பாட்டிற்கு வந்ததன் பின்னர் அதிகாரிகள் வங்கித் துறையை நாடுவதைக் குறைத்துக் கொண்டனர். எவ்வாறெனினும், தொடர்ந்து செல்லும் பற்றாக்குறை நிதியீட்டமானது, ஏனைய பண ஒதுக்கு உட்பாய்ச்சல் மீது செயற்பட்டிருக்க முடிகின்றது. நாணய அதிகாரிகளும் கூட ஒதுக்குத் தேவையை மாற்றுவதில் நாட்டம் கொண்டிருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இது சில கஷ்டங்களை ஏற்படுத்துவதாகவும் இலகுவான செய்முறைக்கு அப்பாற்பட்டதாகவும் காணப்பட்டது.
- இறுதியாக, மிக முக்கியமானது என்னவெனில், பண அடித்தள சுற்றோட்டத்தின் வேகம் (விரிந்த பணம்) குறுங்காலம் பூராவும் ஸ்திரமற்றதாக இருந்துள்ளமையாகும். (பார்க்க வரைபடம் 9). இது நாணய அதிகாரிகளின் கட்டுப்பாட்டு முயற்சியால் நிவர்த்தி செய்யப்படலாம்.

இந்த இறுதி விடயத்தில், அதிகாரிகளால் திரவத்தன்மை மீது செல்வாக்குச் செலுத்தலாம். ஆனால், இது பண அடித்தள அளவின் மீதான இலக்கினூடாக நடைமுறைப் படுத்தப்பட முடியாதது. மாறாக நிதியின் (முதலீட்டில்) செலவில் வட்டி வீதத்தில் மாற்றத்தினை ஏற்படுத்துவதனூடாக அடைந்து கொள்ளப்பட முடியும்.

5. பணவீக்கக் குறைப்பிற்கான 1995 இன் வரவுசெலவுத் திட்ட யோசனைகள்

அரசாங்கத்தின் பணவீக்கத்திற்கெதிரான உபாயங்களிற் கான நியாயங்கள்:

1. விரிந்த பணம் மீது அரசாங்கம் கட்டுப்பாட்டைக் கொண்டுவர முடிந்தாலும் கூட, பொது விலை மட்டம் மீது கட்டுப் பாட்டை மேற்கொள்வது கடின மாகும். விலைமட்டம் பிரதானமாக செலவுத் தூண்டற் காரணியின் செயற்பாடாகம். நிதிமுறைமையின் ஐந்தொகை

( 29 ஆம் பக்கம் பார்க்க)

# வரவு செலவுத்திட்டமும் இலங்கையின் ஆடைக் கைத்தொழிலும்

ஏ.வை.எஸ். ஞானம்
*(தலைவர், இலங்கை ஆடைத் தயாரிப்பாளர்கள் சங்கம்)*

ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் போன்ற கைத்தொழில்மயமாகியுள்ள நாடுகளிலும், அதே போல புடவை உற்பத்தி தொடர்பான நீண்ட கால பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் புடவைக் கைத்தொழில் களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகின்றது. ஆனால், இலங்கையை பொறுத்தமட்டில் இக்கைத்தொழில் துறை பல இடையூறுகளை சந்தித்து வருவதுடன், எளிதில் ஊறுபடத் தக்கதாகவும் இருந்து வருகின்றது. கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் புடவைக் கைத்தொழிலுக்கு பல சலுகைகள் அளிக்கப்பட்டன:

- 1994 பெப்ரவரி தொடக்கம் 3 வருட காலத்துக்கு பொறித் தொகுதி, இயந்திரம் மற்றும் உதிரிப் பாகங்கள் என்ப வற்றுக்கு ஏற்றுமதித் தீர்வையி லிருந்தும் மொத்த வியாபார புரள்வு வரியிலிருந்தும் விலக் களிக்கப்பட்டது.
- உலக விலைகள் வீழ்ச்சியடையும் வரையில் பருத்தி நூற்புரி மீதான தீர்வை அகற்றப்பட்ட துடன், ஒவ்வொரு மூன்று மாதத்துக்கும் ஒரு முறை நிலைமை மீளாய்வு செய்யப்பட வேண்டி யிருந்தது.
- மொத்த வியாபாரப் புரள்வு வரி 10% த்திலிருந்து 8% ஆகக் குறைக்கப்பட்டது.

எனவே, இந்த அடிப்படையில், புடவை உற்பத்திக் கைத்தொழில் நாட்டின் முழு உள்நாட்டுத் தேவையையும் நிறைவு செய்யக் கூடிய ஒரு நிலையில் இருந்து வந்தது. சந்தைத் தேவை 220 மில்லியன் மெட்ரிக் தொன்களாக இருந்ததுடன், உற்பத்தி 227 மில்லியன் மெட்ரிக் தொன்களாக இருந்தது.

வரவு செலவுத்திட்டம் புடவைகள் தொடர்பான தீர்வையை 1993 இன் 50% த்திலிருந்து 35% ஆக குறைத்துள்ளது. முக்கிய மூலப் பொருளான நூற்புரி மீதான தீர்வை 10% க்கு மட்டுமே குறைக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த விலைக் குறைப்பு உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு எந்த வகையிலும் உதவவில்லை. ஏனெனில், நூற்புரி விலை ஏற்கனவே 72 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. எனவே, மலிவான இறக்குமதி துணிக ளுடன் அவர்களால் போட்டியிட முடியவில்லை. இறக்குமதி துணிகள் மீதான தீர்வை குறைக்கப்படுவதனை உள்நாட்டு உற்பத்தியாளர்கள் கொள்கை அளவில் எதிர்க்கவில்லை. ஆனால், தாம் பொருத்தமான விதத்தில் அபிவிருத்தி அடைந்து, இறக்குமதி செய்யப்படும் துணிகளுடன் சமமான நியதிகளுடன் போட்டியிடக் கூடிய ஆற்றலைப் பெற்றுக் கொள்ளும் வரையில் தமக்கு ஒரு நியாயமான கால அவகாசம் -சுமார் மூன்று வருடங்கள் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

தமக்குப் போதியளவில் பாது காப்பு வழி முறைகள் வழங்கப்படா விட்டால் உள்நாட்டுப் புடவைக் கைதொழில் நீண்ட காலத்துக்கு உயிர்வாழ முடியாதென உள்நாட்டு உற்பத்தியாளர்கள் அஞ்சுகின்றனர். ஒரு சிலர் ஏற்கனவே செய்துள்ளது போல, புடவை உற்பத்தித்தொழிலை கைவிட்டுவிட்டு அதற்குப் பதிலாக வியாபாரத்துறையில் நுழைய வேண்டி நேரிடலாம் . என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

புடவைக் கடத்தல் உள்நாட்டுக் கைத்தொழில் மீது அநேகமாக ஒரு மரண அடியை எடுத்து வந்துள்ள தென்றே கூறவேண்டும். நாட்டுக்குள் வரும் விமானப் பயணிகள் புடவை வகைகளை தாம் விரும்பிய விதத்தில் எடுத்து வருகின்றார்கள். புடவைக்கடத்தல் காரணமாக அரசாங்கம் ஆண்டொன்றுக்கு சுமார் 500 கோடி ரூபாவை இழந்து வருகின்றது என நம்பப்படுகிறது. மற்றொரு பிரச்சினை, இதுவரை காலமும் பிரத்தியேகமாக ஏற்றுமதிக்கென்றே ஒதுக்கப்பட்டிருந்த இலங்கை முதலீட்டுச் சபை புடவை உற்பத்திகளின் ஒரு பாகம் உள்நாட்டுச் சந்தைக்கு விடுவிக்கப்படுவ தாகும். இமுச செய்திட்டங்கள் பல சலுகைகளையும் தீர்வை விலக்கு களையும் அனுபவித்து வருகின்றன. தமது உற்பத்திப் பொருட்களை உள்நாட்டுச் சந்தைக்கு விடுவிக்கக் கூடாதென்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே இந்தச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. எனினும், இந்த வரவு செலவுத்திட்டம் இமுச ஆடை உற்பதிகளின் 10 சதவீதம் உள்நாட்டில் விற்பனை செய்யப் படுவதற்கு அனுமதி யளிக்கின்றது. இப்பொருட்கள் மீது இறக்குமதித்

தீர்வைகள், மொத்த வியாபாரப் புரள்வு வரி மற்றும் பாதுகாப்பு அறவீடு என்பன செலுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் இந்த அனுமதி வழங்கப்படுகின்றது. இது கோட்பாட்டு ரீதியில் மிகச்சிறந்த நடவடிக்கையென்றே கூறவேண்டும். ஆனால், இமுச உற்பத்திப் பொருட்கள் அனைத்தின் மீதும் தாக்கமான ஒரு கண்காணிப்பினை மேற் கொள்வதற்கு பொருத்தமான ஒரு பொறிமுறை உள்ளதா என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

முன்னர், 1994 பெப்ரவரி தொடக்கம் மூன்று வருடங்களுக்கு இயந்திரம், உதிரிப்பாகங்கள் மற்றும துணை உறுப்புக்கள் என்பன தொடர்பாக அளிக்கப்பட்டிருந்த வரி விலக்குகளை இந்த வரவு செலவுத் திட்டம் விலக்கிக்கொண்டுள்ளது. இப்பொழுது எல்லா புடவை இயந்திரங்கள் தொடர்பாகவும் 10 சதவீத தீர்வையொன்று அறவிடப்பட்டு வருகின்றது. எனினும், இயந்திரங்களின் குறிப்பிட்ட சில பாகங்கள் மூலப்பொருட்களாக வகைப்படுத்தப்பட்டிருப்பதுடன், பல்வேறு தீர்வைகளுக்கும் மொத்த வியாபார புரள்வு வரிகளுக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றன.

எனினும், ஆடை இறக்குமதிகள் மீதும் ஏற்றுமதிகள் மீதும் கட்டுப்பாட்டினை செயற்படுத்தக் கூடிய சுப்பறபடுத்தலுக்கு முன்னரான பொருள் பரீட்சிப்பு திட்டத்தை புடவை உற்பத்திக் கைத்தொழில் வரவேற்கிறது என்பதனை இங்கு வலியுறுத்த வேண்டியுள்ளது. இந்தத் திட்டம் மலிவான விலைகளில் தரக்குறைவான பொருட்கள் எடுத்து வரப்பட்டு குவிக்கப்படுவதையும் தடுக்கின்றது.

சில ஊக்குவிப்புக்கள், அவை வழங்கப்படும் பட்சத்தில் பெருமளவுக்கு அனுகூலங்களை எடுத்து வரும். உதாரணமாக, பின்வரும் ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டால், தனியார் துறை (அந்நியச் செலாவணி கடன்களில்) மூலதன உபகரணங்களில் பெருமளவுக்கு முதலீடுகளை மேற் கொள்ளும்:

(அ) அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல் நட்டங்கள் வருமான வரி நோக்கங்களுக்காக கழிக்கப்படுதல்.

(ஆ) செலாவணி விகிதம் தொடர்பான அபாய ஏதுக்களை குறைப்பதற்கான வழிமுறைகள்.

புடவைக் கைத்தொழில் இப்பொழுது எதிர்நோக்கியிருக்கும் இடையூறுகளையும், சிரமங்களையும் நீக்குவதில் அரசாங்கம் தலையிட்டால், நாட்டின் வேலைவாய்ப்பு உருவாக்கத்துக்கும் செல்வத்துக்கும் இக்கைத் தொழில் ஒரு கணிசமான பங்களிப்பினை வழங்க முடியும்.

( 27 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் பொறுப்புக்கள் பக்கம் தற்போது அதிகரித்து வந்துள்ளது. அத்துடன், முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டதையும் விட தற்போது மந்தமாகவே செயற்படுகின்றதையும் உணரக்கூடியதாக உள்ளது. இதே நேரம் சொத்துக்கள் பக்கம் குறிப்பாக கடன் விரிவாக்கம் வேகமாகச் செயற்பட்டு வருகின்றது. எனினும், கடன் விரிவாக்கம் தொடர்பாக, இலங்கையில் அண்மைக் காலத்தில் செலவுத் தூண்டல் வீக்கம் ஏற்பட்டு வந்துள்ளமை முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதாகும்.

2. பண ஒதுக்கினைக் கட்டுப்படுத்துவதனூடாக M2 வைக் கட்டுப்படுத்த முடியாது என்பதற்குக் காரணம் உள்ளது. M2 க்கும், உயர் வலுப்பணத்திற்குமிடையிலான விகிதாசாரம் ஸ்திரமற்றதாக இருப்பதாக இலங்கையின் ஆதாரங்கள் காட்டுகின்றன. இது எதிர்வு கூறலுக்கும் கொள்கை அமுலாக்கல் நோக்கங்களுக்கும் பயனற்றதொன்றாகும்.

3. பகிரங்கச் சந்தை நடவடிக்கை ஊடாக M2 ஐக் கட்டுப்படுத்தும் முயற்சியும் கூட, இறுதியில் M2 ஐ அதிகரித்துள்ளது. வட்டி வருமானம் என்பவற்றினால் இலகுவில் ஊறுபடக்கூடிய சேமிப்பு, தவணை வைப்புக்களை உள்ளடக்கியதே M2 ஆகும். ஒதுக்குப் பணத்தினைக் குறைப்பதற்கான பகிரங்கச் சந்தை நடவடிக்கையும் கூட வட்டி வீதத்தை உயர்த்தி, சேமிப்பு தவணை வைப்புக்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துகின்றது. 1993 இல் இலங்கையில் M2 வைக்கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் தீவிரமாக முயன்ற வேளையில், உண்மையில் நடந்தது மேற்கூறிய நிகழ்வே.

4. உள்நாட்டுக் கடன் தேவைகளை அதிகரிப்பதன் மூலம், வங்கி முறைக்கு 750 கோடி ரூபாவை திருப்பிச் செலுத்தும் யோசனை பண ஒதுக்கு வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. அதேநேரம் இது பணச்சந்தையில் வட்டிவீதம் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். இது செலவு-தூண்டற் பணவீக்கத்திற்கு வழிவகுத்து முதலீடு, வளர்ச்சி என்பவற்றில் மந்த நிலையை ஏற்படுத்தும்.

சுருங்கக் கூறின், அரசாங்கத்தின் பணவீக்கத்திற்கெதிரான கொள்கைகள், விரிந்த பண இருப்பின அளவைக் கட்டுப்படுத்துவது மீது தங்கியுள்ளது. ஏதாவது ஒன்று நடைபெறுமாயின், செலவு தூண்டற் பணவீக்கம் ஏற்பட்டு பொருளாதார வளர்ச்சி மந்த நிலையை அடையும். இதேநேரம் தீர்வைகள் குறைப்பு, ரூபாவின் மிகை மதிப்பீடு, அடிப்படைப் பொருட்கள் மீதான மானியங்கள் என்பன பணவீக்கம் மந்தகதியில் செல்வதற்கு உதவும். இலங்கை அரசாங்கமும் தன்வசம் ஈர்த்துக்கொண்ட நாணயவாதிகளது கோட்பாடுகள், நடைமுறையில் செயற்படவில்லை. அதாவது, தீர்வைக் குறைப்பும், பண்ட மானியங்களும் பணவீக்க அழுக்கத்தை நிதானப்படுத்துவதற்கு உதவவில்லை. நாணயப் பெறுமதி இறக்கமும் பணவீக்கத்தைத் தூண்டக்கூடாது. நாணயவாதிகள் சார்பில் கூறுவதாயின், பணவீக்கத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கு அவசியமானதும், போதுமானதுமான நிபந்தனை பண இருப்பைக் கட்டுப்படுத்தல் ஆகும்.

# வரவு செலவுத்திட்டமும் தனியார் முதலீடும்

கலாநிதி ஹர்ஷ டி சில்வா
*(அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம்)*

அறிமுகம்

அரசாங்க வரவு செலவுத் திட்டங்களில் மாயாஜாலம் எதுவுமில்லை. ஆச்சரியப்படத்தக்க வகையில் அவற்றினால் எதனையும் செய்ய முடியாது. தனியார் முதலீட்டில் திடீர் துரித அதிகரிப்புக்கள் ஏற்பட வேண்டும் என எதிர்பார்ப்பதும் விவேகமான செயலல்ல. இக்கட்டுரையில் தனியார் துறை முதலீட்டை மேம்படுத்துவதில் 1995 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் ஆற்றல் ஆராயப்படுகின்றது. மேலும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையில் ஏற்பட்டுள்ள பின்னடைவினை மீண்டும் ஊக்குவிப்பதன் மூலமாகவும், குறைந்தளவு பற்றாக்குறை வரவு செலவுத்திட்டம் ஊடாக, நியாயமான வட்டி வீதத்தில் முதலீட்டாளர்களுக்கு நிதிகளைக் கிடைக்கச் செய்வதன் மூலமாகவும் இதுவரை முதலீட்டுக்கு எட்டாத பகுதிகளில் முதலீட்டுக்கான சாத்தியங்களை ஏற்படுத்துவதன் மூலமாகவும் எவ்வாறு தனியார் முதலீட்டை உருவாக்க முடியும் என்பது பற்றியும் இக்கட்டுரையில் ஆராயப் படுகின்றது.

முதலில் பரந்த பேரண்டப் பொருளாதார கொள்கைத் திட்டத்திற்குள் வரவு செலவுத்திட்டம் எவ்வாறு பொருத்தப்பட்டுள்ளது என்பது பற்றி ஆராய்வோம். ஒரு அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் அல்லது இறைக் கொள்கை என்பது நாணயக் கொள்கை, செலாவணி வீதக் கொள்கை என்பவற்றை உள்ளடக்கியுள்ள பேரண்டப் பொருளாதாரக் கொள்கையின் ஓர் பகுதியாகவே உள்ளது. பண நிரம்பல், செலாவணி வீதங்கள் என்பன மத்திய வங்கியினால் நடைமுறைப் படுத்தப்படுவது போலவே, இறைக்கொள்கையும் அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்நிலையில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கம், தனது செலவினங்களையும் வரிக் கொள்கைகளையும் மிகக் கவனமாக எடுத்துக் காட்டி, வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதன் ஊடாக நாட்டின் பேரண்டப் பொருளாதாரக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்த முடியும். அனைத்து அரசாங்கங்களும் கொள்கையளவில் தமது பிரஜைகளின் நலன்கள் முன்னரையும் விட உயர்வாக இருக்க வேண்டும் என்பதற்காக, இயலுமான வரையில் குறைந்த வரிச் சுமையை விதித்து, அதிகளவு செலவினங்களை மேற்கொள்ள விரும்பிய போதும் கூட, நடைமுறையில், செலவினங்களதும், வரியறவிடலினதும் மாதிரிகள், தற்போதுள்ள பொருளாதாரச் சூழலினாலும், அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தின் முன்னுரிமைக் கொள்கைகளாலும் இந்நோக்கிலிருந்து விலகிச் செல்கின்றன.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால அனைத்து அரசாங்கங்களதும் தன்மை நோக்கம் ஒரே மாதிரியானதாகவே இருந்துள்ளது. முக்கியமாக நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார அபிவிருத்திப் பாதை மீது இலங்கையை எடுததுச் செல்வதாகவே அது அமைந்தது. இன்னொரு வகையிற் கூறின், வறுமையில் வாழுகின்ற மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகின்ற நிலைமையில் நீண்ட காலத்தில் மக்களின் மெய்வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்ற கொள்கையே முதன்மைப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இக்கொள்கையை அடைவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொறிமுறைகள் வேறுபட்டவையாக இருந்தன. 1977 ற்கு முன்னைய ஆட்சிக் காலப்பகுதி, அதன் அபிவிருத்தி நோக்கினை அடைவதற்கான மூலவள ஒதுக்கீட்டு முறையை நெறிப்படுத்துவதிலும், திட்டமிடுவதிலும் அரசாங்கத்தின் பங்கினையே கூடுதலாக வற்புறுத்தி வந்தது. இந்த பரீட்சார்த்தத்தின் பெறுபேறுகள் திருப்திகரமற்றதாக அமைந்ததனால், 1977 ற்குப்பிற்பட்ட காலப் பகுதி, இக்கொள்கையிலிருந்து வேறுபட்டதாக - அதாவது, பொருளாதார செயற்பாடுகளின் பெரும் பகுதியில் தலையிடாகக் கொள்கையை பின்பற்றுவதாக- அமைந்தது.

தற்போது நாங்கள் பொதுசன முன்னணி அரசாங்கத்தை எடுத்துக் கொள்வோம். இந்த அரசாங்கத்தின் முதன்மை நோக்கத்தை செயல்திறன் -சமத்துவம் என விளக்க முடியும். அதாவது வருமானம், செல்வம் என்பவற்றின் பகிர்வில் நியாயத் தன்மையுடன் கூடிய விதத்தில் வெளியீட்டில் அதிகரிப்பினை எடுத்து வருவதே இந்த நோக்கமாகும். நீதித் தன்மையுடன் கூடிய வளர்ச்சி எனவும் இதனை வர்ணிக்க முடியும். இந்த நியாயமான விளக்கத்தின் பின்னணியில் முன்னைய அரசாங்கத்தினதும், தற்போதைய அரசாங்கத்தினதும்

நோக்கங்களை வேறுபடுத்திக் காட்ட முனைவது சிரமமானதாகும். எனினும், இந்த அரசாங்கம், இந்நோக்கினை அடைந்து கொள்வதற்குக் கையாளப்போகும் உபாயங்கள் முன்னைய ஆட்சிக் கால உபாயங்களிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். இது பெரும்பாலும் "சந்தை சர்வ வல்லமை பொருந்தியது" என்பதிலிருந்து விலகி "மிகச்சிறந்ததை நோக்கி சந்தையை நெறிப்படுத்துதல்" என்ற செயற்பாட்டினை உள்ளடக்கியதாக இருக்கும். மேலும், இக்கொள்கையானது நவபழம் பொருளியல்வாதிகளிலிருந்து விலகியதாக பெருமளவுக்கு அமைப்பு ரீதியான அல்லது உள்ளார்ந்த அமைப்பு மாறிகளுடன் இணைந்து கொண்டதாகவும் இருக்கும். சுருங்கக் கூறின் புதிய அரசாங்கத்தின் உபாயமானது கொள்கைகளின் கலப்பு என்பது புலனாகின்றது. இது, எப்போதும் சந்தையை நோக்கிய அடிப்படைகளை உள்ளடக்கியிருக்கும்; ஆனால், ஒரளவு அரசாங்கத் தலையீடும் காணப்படும். அதாவது, ஒருபுறம் குறிப்பிடக்கூடியளவு திட்டமிடலும், நெறிப்படுத்தலும் வேண்டப்படும் அதேநேரம் மறுபுறம் முயற்சியாளருக்குச் சுதந்திரமுள்ள ஒரு செயற்பாடும் வேண்டும் என்பதை இவ்வுபாயங்கள் கொண்டுள்ளன.

### முதலீட்டு மாதிரிகளும் அவற்றின் தேவைகளும்

தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை வகுப்போரும் ஆலோசகர்களும் எத்தகைய பொருளாதாரச் சிந்தனைகளைப் பின்பற்றுபவர்களாக இருந்த போதிலும் இதன் தாத்பரியம் எதிர்காலத்தில் நீதித்தன்மையுடனான வளர்ச்சி என்ற நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு, தற்போதைய முதலீட்டு மட்டத்தில் ஒரு திடீர் அதிகரிப்பினை ஏற்படுத்த வேண்டிய தேவை இலங்கைக்கு உண்டு என்பதை உணர்ந்து கொள்வதே ஆகும். அட்டவணை 1 இல் விளக்கப்பட்டுள்ளது போல 1977 இல் அரசாங்க மாற்றத்தைத் தொடர்ந்து (பாரிய செய்திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும் வகையில்) முதலீட்டில் உடனடியாக ஒரு அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும் பின்னர் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தியடைந்ததும், முதலீடு நிலையாகவே இருந்துள்ளது. 1977–1994 காலப்பிரிவில் மொ.உ. உற்பத்தியின் விகிதாரமாக மொத்த முதலீடுகள், சராசரியாக 25% மாக இருந்துள்ளன. இது 1971–1977 க்குமிடையில் 16% மாக இருந்துள்ளது.

அட்டவணை 1
மொ.உ.உ. வின் சதவீதமாக முதலீடுகள்

| வருடம் | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதலீடு | 14.4 | 20.0 | 25.8 | 33.7 | 26.9 | 31.1 | 28.9 | 25.8 | 23.8 |
| **வருடம்** | **1986** | **1987** | **1988** | **1989** | **1990** | **1991** | **1992** | **1993** | **1994** |
| முதலீடு | 23.7 | 23.3 | 22.8 | 21.7 | 22.2 | 22.9 | 24.3 | 25.8 | 24.9 |

மூலம்: மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகளிலிருந்து தொகுக்கப்பட்டது.

அட்டவணை 2
மூலதனச் செலவு ஒதுக்கு - மொ.உ.உ. வின் சதவீதமாக

| | 1978 | 1982 | 1986 | 1990 | 1992 |
|---|---|---|---|---|---|
| பொதுமக்கள் சேவை | 0.6 | 1.1 | 0.7 | 1.1 | 0.7 |
| சமூக சேவை | 1.4 | 1.6 | 1.4 | 0.9 | 1.5 |
| பொருளாதார சேவை | 9.8 | 13.6 | 12.0 | 5.8 | 5.3 |
| ஏனையவை | 0.7 | 1.7 | 0.3 | 0.4 | 0.3 |
| மொத்தச் செலவினம் | 12.5 | 16.3 | 14.4 | 8.2 | 7.8 |

மூலம் : "1977 க்கு பிறகு கொள்கையும் செயற்பாடுகளும்", கலாநிதி பீ.பீ.ஜயசந்திர

அட்டவணை 3
மூலதனச் செலவு மாதிரிகள்
(ரூ. 100 கோடி)

| அமைச்சு | 1990 | | 1991 | | 1992 | | 1993 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | குறை / மிகை | மொத்தம் | குறை / மிகை | மொத்தம் | குறை / மிகை | மொத்தம் | குறை / மிகை |
| சக்தி, வலு | 6.4 | -21.1 | 5.1 | -20.7 | 4.3 | -45.5 | 5.9 | -71.1 |
| போ.வ. நெடுஞ்சாலை | 4.9 | -12.9 | 7.6 | -29.0 | 6.1 | -18.4 | 8.7 | -29.6 |
| தபால், தொலைதொ. | 1.1 | -47.0 | 1.5 | -48.5 | 3.3 | -91.4 | 2.3 | -67.6 |
| கல்வி, உயர் கல்வி | 0.8 | -36.9 | 1.0 | -68.3 | 2.2 | -11.3 | 2.9 | -20.4 |
| சுகாதாரம், மகளிர் | 1.3 | -20.2 | 2.2 | -53.5 | 1.9 | -15.4 | 2.2 | -67.6 |

மொத்தம் : மொத்த ஒதுக்கீடுகள்
குறை / மிகை : மிகை / குறை செலவு சதவீதம்
மூலம் : மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகளிலிருந்து தொகுக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் இலங்கைப் பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை இனங்கண்டு கொண்டதன் பின்னர் உயர்ந்தளவு முதலீடுகளுக்கூடாக வேகமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான உபாயத்தினை எடுத்து விளக்கியது. வரவு செலவுத் திட்ட உரையில் இது பின்வருமாறு கூறப்பட்டுள்ளது : "2000 ஆம் ஆண்டளவில் வேலையில்லாப் பிரச்சினையை நீக்குவதற்காக வருடத்திற்கு 8% பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானது. இதற்காக நாங்கள் எங்கள் முதலீட்டு மட்டத்தை மிக உயர்வாக வைத்திருக்க வேண்டும். எமது பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு என்பன தொடர்பான குறிக்கோள்களை முன்னெடுத்து செல்வதற்காக முதலீட்டை அடுத்த வரும் வருடங்களில் 30% ஆக வைத்திருக்க வேண்டியுள்ளது".

நாட்டின் வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 10% பொருளாதார வளர்ச்சி அவசியமானது எனக் கருதப்படுகிறது. தற்போது அதிகரித்துள்ள மூலதனத் திறன் மட்டத்துடன் முதலீட்டு மட்டமும் மொ.உ.உற்பத்தியில் 40% ஆக அமைவதே சிறந்தது என இதனுடன் தொடர்புடைய ஒரு ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது (என் சந்தரத்ன, தே.அவ., 1995).

இந்த வகையில் அவசியமான முதலீட்டு மட்டம் இனங்காணப்பட்டுள்ளது. உண்மையில் இது வரவு செலவுத்திட்டத்துக்கு ஊடாகத் திரட்டப்படக்கூடியதாக உள்ளதா அல்லது, சந்தைப் பொருளாதார மாணவர்களிற்கான கல்விமான்களின் திறமையைக் காட்டும் ஒரு பயிற்சியா என்பது இங்குள்ள முக்கியமான கேள்வியாகும். இந்த முதலீட்டு மட்டத்தினை அடைந்து கொள்வதற்கான வரவு செலவுத்திட்டத்தின் செயற்றிறன். அது பின்வரும் பகுதிகளில் எந்தளவிற்கு வெற்றிகரமாகச் செயற்படும் என்பதிலேயே தங்கியுள்ளது. முதலாவதாக, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட துறைகளில் நேரடியாக பொது முதலீட்டை ஏற்படுத்தலாம்; அல்லது மறைமுகமாக தனியார் முதலீட்டை உருவாக்கலாம். இரண்டாவதாக, ஒட்டு மொத்த வ.செ.திட்ட பற்றாக்குறையையும் கடன் நிலுவையையும் குறைத்து வட்டி வீதங்களைக் குறைத்து தனியார் முதலீட்டுக்கான மூலவளங்களை அதிகரிக்க வேண்டும். மூன்றாவதாக, பொருளாதாரம் மீதான முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

முதலீட்டுச் சாத்தியங்கள்

முதலில் 1995 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முதலீட்டுச் சாத்தியங்கள் பற்றி ஆராய்வோம். இங்கு முன்னைய பகுதியில் குறிப்பிட்ட முதலாவது விடயத்தை எடுப்பின் - அதாவது, அரசாங்கத்தின் நேரடி முதலீடுகளை நோக்கின் - இது பொருட்கள், சேவைகள் என்பவற்றின் உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முயற்சிகளில் அரசாங்கத்தின் நேரடி முதலீடுகளை குறிக்கின்றது. இவற்றில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வகை உற்பத்திகள் இயலாதனவாக உள்ளனவோ அவற்றையும் அல்லது போட்டி அதிகமாக உள்ள தொழில் முயற்சிகளையும் தனியார் துறைக்கு விட்டுவிடுவது சிறந்தது. இந்நடைமுறைகளை தனியார்மயமாக்கல், மக்கள்மயமாக்கல், பொது முயற்சிகளின் சீர்திருத்தம் எனப் பல பெயர்களில் அழைக்கலாம். ஆனால், இது ஒரு செயல் சார்ந்த விடயம் மட்டுமே. மேலும், பொதுத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு ஊடான இந்த பரிமாற்றச் செய்முறை தேவையற்ற வகையில் காலம் தாழ்த்துவதாக இருக்கக்கூடாது.

மேற்கூறிய தொழில்முயற்சி தொடர்பான சீர்திருத்தம், அரசாங்கம் கட்டாயம் பங்கேற்க வேண்டிய சமூக பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பினை வழங்கும். அட்டவணை 2 இல் இது தெளிவாகக் காட்டப்படுகின்றது. பிரதானமாக பொருளாதார சேவைகளில், பாரிய பொது வேலைத்திட்டங்களுடன் கூடிய 1982ஆம் ஆண்டின் உச்ச நிலைக்குப் பின்னர், மூலதனச் செலவினங்கள் திடீரென குறைவடைந்து சென்றுள்ளன. பொருளாதார சேவைகள் மீதான மூலதனச் செலவினம், மொ.உ. உற்பத்தியின் விகிதாசாரமாக 50% திற்கும் மேலாகக் குறைவடைந்து பொருளாதார வளர்ச்சியைப் பாதித்துள்ளது. இதேநேரம் பல போட்டி நாடுகள் தமது பொருளாதாரங்களில் மேலும் வளர்ச்சியைத் தூண்டுவதற்காக இந்த சேவைகளை விரிவுபடுத்தியுள்ளன.

இந்த பின்னணியில் சில தேர்ந்தெடுக்கப்பட்ட உள்கட்டமைப்பு வேலைகளில் உத்தேசித்த முதலீட்டை மேற்கொள்வதில் அரசாங்கம் ஆற்றலற்றிருப்பதனை அட்டவணை 3 எடுத்துக் காட்டுகின்றது. சில துறைகளில் மட்டுமல்ல அரசாங்கத்தின் ஒட்டு மொத்த இயலாமை பற்றி குறைபாடுகள் எழுந்த வண்ணம் உள்ளன. உதாரணமாக, 1994 இல் தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சின் மூலதனச் செலவினங்களுக்காக அனுமதியளிக்கப்பட்ட மதிப்பீடு 4000 மில்லியன் ரூபாவாகும். நடைமுறைத் தொலைபேசிக் கேள்வியைச் சமாளிப்பதற்கு மட்டும் 10,000 மில்லியன் ரூபா முதலீடு தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம், பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளில் முதலீட்டுப் பற்றாக்குறை என்ற உண்மை நிலையை உணர்ந்து, முதல் தடவையாக தொலைத் தொடர்பு, சக்தி, வலு, துறைமுகம், புகையிரதப் போக்குவரத்து போன்ற துறைகளில் தனியார் துறையுடன் ஓர் உபாய ரீதியான உடன்பாட்டை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும், சமூக பொது வசதிகள் என்ற அடிப்படையில், சுகாதாரம், கல்வி போன்றவற்றில் முதலீட்டை அதிகரிப்பதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் வரவு செலவுத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

முழுமையாக நோக்கின், இதுவரை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்ததும், அரசாங்கத்தினால் தனியுரிமை பாராட்டக் கூடியதாக இருந்ததுமான துறைகளில் தனியார் துறைக்கு முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குவதில் 1995ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் வெற்றிகண்டுள்ளது. மேலும், கூட்டு நிறுவனங்கள் மீதான வரிக்குறைப்பு சில துறைகளில் முதலீட்டைத் தூண்டுவதற்கு வாய்ப்பளிக்கும். எனினும், வேகமாக வளர்ச்சியடைந்து வரும் ஆசிய நாடுகளைக் காட்டிலும், இலங்கையின் வரியறவிடல் உயர்வாக இருப்பதனால் இது மேலதிக முதலீட்டு உருவாக்கத்திற்கு பாதகமாகவே இருக்க முடியும்.

குறைந்தளவு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள்

பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் நேரடியாக தனியார் முதலீடுகளை வெளியேற்றுவது மட்டுமன்றி, மறைமுகமாக பணவீக்கத்தின் பலாபலன்களால், குறுங்கால முதலீடுகள் தவிர்ந்த ஏனையவற்றின் முதலீட்டிலும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

1977 ற்குப் பின்னைய வரவு செலவுத்திட்டங்கள் குறிப்பாக உயர்ந்தளவு பற்றாக்குறைகளைக் கொண்டிருந்தன. முதல் ஐந்து வருட காலத்திற்கும் இவை சராசரியாக மொ.உ.உற்பத்தியில் 17% மாக இருந்தன. 1980 இல் மட்டும் பற்றாக்குறையின் அளவு 23% மாக மிக மோசமான நிலையில் இருந்தது. அப்போது குறுங்கால பணவீக்கத் தாக்கங்கள் இருந்த போதும், அரசாங்கம் இக்காலத்தில் நடைமுறைக் கணக்கில் மிகையையும், உயர் மூலதனச் செலவையும் கொண்டிருந்தது. இம்முறையானது நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற ஒரு நடைமுறை என அப்போது வாதிடப்பட்டது. இதற்குப் பின்னர், 1980 களின் பிற்பகுதி வரை பற்றாக்குறை கணிசமான அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டது. அக்காலத்திலிருந்து, மூலதனச் செலவுகள் கடுமையாகக் குறைக்கப்பட்டு வந்தபோதும் அரசாங்கம் பற்றாக்குறையின் அளவைத் தொடர்ச்சியாகக் குறைப்பதில் தீவிர அக்கறை செலுத்தி வந்துள்ளது. எவ்வாறெனினும், தொடர்ச்சியான இப்பற்றாக்குறைகள் பொதுப் படுகடனில் அதிகரிப்பை ஏற்படுத்து வதறகுக் காரணமாக இருந்துள்ளன. 1977 இல் மொ.தே. உற்பத்தியில் 50% மாக இருந்த பொதுப் படுகடனின் அளவு 1993 இல் 100% மாக உயர்வடைந்து, மிக மோசமான கடன் சேவைப் பிரச்சினையை தற்போது உருவாக்கியுள்ளது.

1995 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் மேற்கூறிய பிரச்சினைகளை உணர்ந்து நடைமுறைக் கணக்கில் மிகையைக் கொண்டிருக்கும் அதேநேரம், குறைந்தளவு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை கொண்டதாகவும் பிரேரிக்கப்பட்டது. குறைந்தளவான பற்றாக்குறைகள் உள்நாட்டுக் கடனின் அளவைக் கட்டுப்படுத்தும்; அத்துடன் உயர்வாகவும், ஸ்திரமற்றதாகவும் உள்ள திறைசேரி உண்டியல்களின் கழிவு வீதங்களை படிப்படியாக ஒரு உறுதியான கட்டுப்பாடான நிலைக்குக் கொண்டு வரவும் உதவும். பொதுவாக வட்டி வீதம் வீழ்ச்சியடையும் போது, புதிய துறைகளில் முதலீடு விரிவடையும். மேலும், இது புதிய மூலதனச் சந்தை நிதிக் கருவிகளூடாக, நிதி திரட்டுவதில் உள்ள ஆபத்தினையும் நீக்கும். இறுதியாக, உத்தேசிக்கப்பட்ட குறைந்தளவு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, முதலீட்டிற்கான ஊக்குவிப்பாக அமையும் என்பது உறுதியானது.

## முதலீட்டாளர் நம்பிக்கை

வரவு செலவுத்திட்ட ஆற்றல், முதலீட்டாளர் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதிலும் தங்கியுள்ளது எனலாம். 1995ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம், எதிர்காலம் பற்றிய போதிய நம்பிக்கையை முதலீட்டாளருக்குக் கொடுத்துள்ளதா ? அவ்வாறாயின் அவர்கள் இப்பொழுது முதலீட்டை மேற்கொள்வார்களா ? முதலீட்டுத் தீர்மானங்கள் இலாப எதிர்பார்ப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன என்ற நிலையில்மக்கள் அதே நோக்கமுடைய வரிக்கொள்கை, வட்டிவீதம், சந்தைக் கேள்வி (இவையும் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முக்கிய காரணிகளாக உள்ளன) என்பவற்றையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் முதலீட்டாளருக்கு உத்தரவிடுவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை என்பதை அது உணர வேண்டும்; முதலீட்டிற்கு உசிதமான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பதே அரசாங்கத்தின் வேலையாகும்.

இந்நிலையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலைய நடவடிக்கைகள் முக்கியமானதாகும். எவ்வாறெனினும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை அனைத்து பங்கு விலைச் சுட்டெண் முதலீட்டுச் சாத்தியத்திற்கான ஒரு குறிகாட்டியாகக் கொள்ளப்படலாம். இச்சுட்டெண், நேரடி முதலீடுகளில் சிறப்பாக வெளிநாடுகளிலிருந்து வருகின்ற முதலீடுகளில் ஒரு கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்துகின்ற முதலீட்டாளர் நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றது. தற்போது அமெரிக்க வட்டி வீதம் குறைந்தளவு உயர் வட்டி வீதத்தை அடைந்துள்ளது என்ற நம்பிக்கையில் ஆசிய பிராந்தியத்தை நோக்கித் திரும்புகின்ற முதலீட்டாளர்களை மையமாகக்கொண்டு பங்குச் சந்தைகள் செயற்படுகின்றபோதும், கொழும்பு பங்குச் சந்தை இன்னமும் இவ்விடயத்தில் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வரவில்லை.

வியாபார நம்பிக்கைகளை அளவிடுவதற்கு இலங்கையில் தொடர்ச்சியான அபிப்பிராய வாக்கெடுப்பு போன்ற முறைகள் இல்லாததினால் அரசாங்க வரவு செலவுத்திட்டமே இவற்றை மதிப்பிடுவதற்கான கருவியாக கருதப்படுகின்றது. 1995 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட செயற்பாட்டில் தனியார் மயமாக்கல் என்ற அம்சத்தினை காலம் தாழ்த்தாது புகுத்துவது இப்போது அவசியமாகும்.

முடிவாக 1995ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் விவரித்த மாதிரி அடிப்படைப் பிரச்சினைகளும், முதலீட்டுடன் தொடர்புடைய விடயங்களும் முதலீட்டு மட்டத்தை அதிகரித்தல், குறைந்தளவான பற்றாக்குறை, குறைந்தளவு வட்டி வீதம் என்பவற்றுக்காக முன்வைக்கப்பட்ட பிரேரணைகளும் ஒருங்கிணைந்து செயற்படின் வரவு செலவுத்திட்டம் வெற்றியடையும் என எதிர்பார்க்கப்படலாம். எனினும், அரசாங்கம் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள வேகமே இதன் வெற்றியைத் தீர்மானிக்கும்.

( 11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செலவினங்களுக்கும், சூழல் மாசடைதலுக்கும் காரணமாக அமையும் இடங்களிலும், சுகாதார நோக்கிலும், சமூக நோக்கிலும் அரச தலையீடு வேண்டப்படுகின்றது. இவ்வகையான அரச தலையீடும், அரச ஆதரவும் இங்கும் தேவைப்படுவதற்குக் காரணம் கிழக்கு. தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், பல மேற்கைரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டுள்ள நீதித் தன்மையுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியின் விளைவாகும்.

சுருங்கக் கூறின், வரவு செலவுத்திட்டம் எதனை எடுத்துக் கூறினாலும் சரி, எடுத்துக்கூறாவிட்டாலும் சரி, சமூக நீதித் தன்மையுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல் எனும் பாரிய பொறுப்பிலிருந்து விலகிவிட முடியாது. இங்கு வளர்ச்சி என்பது பொருட்களுடன் தொடர்புடையது மட்டுமல்ல; மக்களுடனும் தொடர்புடையதாகும். சந்தைத் தோழமை அணுகுமுறை பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதில் ஆபத்தினை எதிர்நோக்குகின்றது.

# சர்வதேச வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு

## இலங்கையின் மீதான தாக்கங்கள்

என். துரைஸ்வாமி
சஜி மெண்டிஸ்
(முகாமை பட்டப் பின்படிப்பு நிறுவனம்,
ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

இலங்கையின் கொள்கை வகுப்போர் 1977 தொடக்கம் வெளிநோக்கிய வர்த்தக கொள்கையொன்றை வலியுறுத்தி வந்துள்ளனர். 1977 இல் 10 கோடி அ.டொலர் அளவில் இருந்த தயாரிப்புப் பொருட்களின் ஏற்றுமதிகள் 1992 அளவில் 150 கோடி அ.டொலர்களாக அதிகரித்திருந்தன. மேலும், இத்தகைய ஏற்றுமதிகளின் வருடாந்த வளர்ச்சி கடந்த 17 வருடங்களில் அதிகரித்து வந்துள்ளது. புடவைக் கைததொழில், மொத்த ஏற்றுமதிகளில் சுமார் 50 சதவீதத்துக்கு பங்களிப்புச் செய்து வருவதுடன், அது இப்பொழுது பாரம்பரிய ஏற்றுமதிகளான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் என்பவற்றின் இடத்தைப் பிடித்துள்ளது.

எனினும், இலங்கை தொடர்ச்சியான, அதிகரித்து வரும் வர்த்தகப் பற்றாக்குறைகளை எதிர்கொண்டு வருகின்றது. கடந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் வர்த்தகப் பற்றாக்குறை மெய் அளவுகளில் 45% ஆல் (150 கோடி அ.டொலராக) கணிசமான அளவில் விரிவடைந்து சென்றுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளின் சந்தைகளில் நிலவிவந்த கோட்டா கட்டுப்பாடுகள் காரணமாக 1994 இன் முதலரைப் பகுதியில் ஆடை ஏற்றுமதிகள் வேகம் குறைந்திருந்தன. கடந்த வருடத்தில் தேயிலை விலைகள் உலக அளவில் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதிகள் அதிகரித்த போதிலும் இறக்குமதிகள் அதிலும் பார்க்க வேகமாக அதிகரித்துச் சென்றன.

இலங்கை ஏற்றுமதிகளின் பெறுமதி 1994 இல் 300 கோடி அ.டொலர்களாக இருந்தது. இது தாய்லாந்தில் 4350 கோடி அ.டொலர்களாகவும், ஹொங்கொங்கில் 14,100 அ.டொலர்களாகவும் இருந்தது. மோசமான முகாமைத் திறன்களும் சந்தைத் திறன்கள் போதியளவில் இல்லாதிருப்பதும் இதற்கான காரணங்களாகும். பணவீக்கம் 12% ஆக இருந்ததனால் வெளிநாட்டுச் செலாவணி மிகைப் பெறுமதி உடையதாக விளங்கியது. இது சர்வதேசச் சந்தையில் எமது ஏற்றுமதிக்குப் பாதகமாக அமைந்தது. தொடர்ந்து வந்த பற்றாக்குறை வரவு செலவுத்திட்டங்கள் வட்டி விதத்தை உயர்த்தி, செயற்படு மூலதனத்தின் செலவை அதிகரித்தன. முதலீட்டாளர்கள் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சிகளிலும் பார்க்க நிர்மாணம், போக்குவரத்து, இறக்குமதி வர்த்தகம் என்பவற்றையே பெரிதும் விரும்பினார்கள்.

நாட்டின் தயாரிப்புத் துறை ஏற்றுமதிகள், குறைந்தளவு பெறுமதி சேர்க்கப்பட்ட (தேறிய ஏற்றுமதிப் பெறுமதி குறைவாக உள்ள) ஆடைகளில் பெருமளவுக்கு வரையறுக்கப் பட்டிருந்தன. ஆடை தயாரிப்பாளர்களின் உற்பத்தித் தொகையைக் கூட்டுவதற்கு ஏற்றதாக ஏற்றுமதிக் கோட்டாக்கள் போதுமானதாக அமையவில்லை. இலங்கை இலத்திரனியல் பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் போன்ற தொழில்நுட்பம் சார் ஏற்றுமதிப் பொருட்களை பெருமளவாகக் கொண்டிருக்கவில்லை. இந்த உயர்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்கள் 1992 இன் இலங்கையின் தயாரிக்கப்பட்ட பொருள் ஏற்றுமதியில் 5.6% தையே கொண்டிருந்தன. இவ்வருடத்தில் தாய்லாந்தின் தயாரிப்புப் பொருள் ஏற்றுமதியில் இது 43.2% மாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. 'OECD' நாடுகளின் கோட்டா ஒதுக்கீடு காரணமாகவும், குறைந்த கூலி காரணமாகவும் இலங்கையின் ஆடைத் தொழிலில் முதலிடுவதற்கு பல கிழக்காசிய நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன. எனவே, இலங்கை ஆடை ஏற்றுமதியில் ஒரு தலைசிறந்த நாடாக இருக்க வேண்டும். ஐக்கிய அமெரிக்காவில் இலங்கையின் கோட்டாவை அதிகரிப்பதற்கான பேச்சுவார்த்தையில் அரசாங்கம் வெற்றி கண்டுள்ளது. எனினும் வெளிநாடடுச்சந்தைகளின் பின்னடைவு, மிகை இயலளவு, குறைந்த உற்பத்தித் திறன், தொழிலாளர் கிளர்ச்சி, ரூபாவின் மிகைப் பெறுமதி என்பன ஆடை ஏற்றுமதிகளைப் பாதித்துள்ளன. இலத்திரனியல் பொருட்கள் துறை கிழக்காசியாவில் ஒரு முக்கிய வளர்ச்சித் துறையாகக் கருதப் படுகின்றது. உலகிலேயே கம்ப்யூட்டர் டிஸ்கெட்டை ஏற்றுமதி செய்யும் முதன்மை நாடாக சிங்கப்பூர் விளங்குகின்றது. அதன் தயாரிப்புததுறையை விரிவாக்குவதற்கு பல்தேசிய முதலீட்டாளர்கள் உதவியுள்ளனர்.

### பிராந்திய வர்த்தக ஒத்துழைப்பு

ஏற்றுமதிப் பன்முகப் படுத்தலுக்கு முன்னுரிமைகளுடன் கூடிய வர்த்தகமே பொருத்தமானது. 1993 இல் மெரிக்கா, கனடா, மெக்சிக்கோ என்பன வட அமெரிக்க சுதந்திர வர்த்தக-நப்டா- உடன் படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

இம்மூன்று நாடுகளும் திரட்டிய வர்த்தகத் தொகை 130,000 கோடி அமெரிக்க டொலர் ஆகும். அதே போல இவை 620,000 கோடி அமெரிக்க டொலரை மொ.உ. உற்பத்தியாகக் கொண்டுள்ளன. 1980-1992 காலப் பகுதியில், இந்நாடுகளின் சர்வதேச வர்த்தகம் வருடம் ஒன்றுக்கு சராசரியாக 5.2% ஆல் அதிகரித்துள்ளது. இம் மூன்று நாடுகளுக்கு மிடையிலான பிராந்திய வர்த்தகம், அடுத்த ஐந்து ஆண்டு காலத்தில் வருடமொன்றுக்கு 20% ஆல் அதிகரிக்கும் என நப்டா ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். மெக்சிக்கோ அமெரிக்காவுடன் இணைப்பைக் கொண்டுள்ளதால் அதன் மீதான நம்பிக்கை ஏற்பட்டு, அதன்மூலம் ஐரோப்பிய, கிழக்காசிய நாடுகளின் முதலீடுகள் அந்நாட்டில் அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. அமெரிக்க நிதி, காப்புறுதி, தரகு, தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு மெக்சிக்கோ ஒரு சந்தையை வழங்குகின்றது. பிராந்தியங்களுக்கிடையிலான வர்த்தக அதிகரிப்பிற்கு தீர்வைகள், கோட்டாக்கள் போன்ற வர்த்தக தடைகளின் நீக்கம் பெருமளவுக்கு உதவுகின்றது.

இதே போலவே இலங்கையும் தனது ஏற்றுமதியினை தெற்கு தென் கிழக்காசிய நாடுகளுடன் ஒருங்கிணைத்து அதன்மூலம் ஏற்றுமதி அனுகூலங்களை பெற விழைய வேண்டும். இந்நிலையில் இந்தோ-பசுபிக் பிராந்தியங்களின் (ஏஷியன், சார்க் பிராந்தியங்கள்) அமைவிட அனுகூலத்தை முழு அளவில் பெற்றுக் கொள்வதற்கு இந்நாடுகள் முன்வர வேண்டும். அரசியல் இணைப்பும், பொருளாதார வளர்ச்சியும் நீண்ட காலத்தில் இந்நாடுகளுக்கிடையிலே நப்டா மாதிரியிலான கூட்டுக்களை உருவாக்குவதற்கு வழிவகுக்கும்.

இவ்வருடம் முடிவு செய்யப்பட உள்ள தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையை இலங்கை அத்தாட்சிப்படுத்தியுள்ளது. தென்னாசிய பிராந்தியத்துக்கிடையிலான வர்த்தகப் பாய்ச்சல், பிராந்தியத்தின் மொத்த ஏற்றுமதியில், 3% மாகவும். இறக்குமதியில் 2% மாகவும் மட்டுமே இருந்து வருகின்றன. முடிவுகளை எடுப்பவர்கள் தென்னாசியாவை தனியொரு முதலீட்டு வலயம் என்ற முறையில் சந்தைப்படுத்த வேண்டியது அவசியமாகும். பின்னர் இதற்குள் தென் மலேசியா, சிங்கப்பூர், மேற்குஇந்தோனேசியா ஆகிய முக்கோணப் பகுதியையும் இதனுடன் உள்ளடக்கிக் கொள்ள முடியும். பிராந்திய வர்த்தக நிதியீட்டத்திற்குப் பொருத்தமான கொடுப்பனவு ஏற்பாட்டு முறையொன்றின் உருவாக்கத்தினை தென் ஆசியா வேண்டி நிற்கின்றது. கூட்டு விமானச் சரக்கு போக்குவரத்து மற்றும் கப்பல் சரக்கு போக்குவரத்து இணைப்பும் வர்த்தக ஒத்துழைப்பிற்கு உதவி செய்யும்.

இந்திய சந்தை திறந்துவிடப்பட்டமை இலங்கைக்குப் பாரிய நன்மைகளை அளிக்கும். இருபக்க வர்த்தக உடன்படிக்கை காரணமாக, இந்தியா, மலேசியாவிலிருந்து இறப்பரைக் கொள்வனவு செய்கின்றது. குறைந்த போக்குவரத்துச் செலவு காரணமாக, இலங்கை மலேசியாவையும் விடக் குறைந்த விலையில் இறப்பரை நிரம்பல் செய்ய முடியும். இந்திய மோட்டார் இயந்திரக் கைத்தொழிலில் ஜேர்மனியினதும், ஜப்பானினதும் முதலீடு இந்திய இறப்பர் இறக்குமதி அளவை அதிகரிக்கச் செய்யும். 1995 இல் எதிர்பார்க்கப்பட்ட இறப்பர் விலை அதிகரிப்பு, இயற்கை இறப்பரில் ஒரு சிறுசெழிப்பு நிலையை ஏற்படுத்தியுள்ளது. உலக தேயிலை உற்பத்தியில் கணிசமான பகுதியினை இந்தியாவும், இலங்கையும் உற்பத்தி செய்வதால், தேயிலை விலை மீது இவ்விரு நாடுகளும் செல்வாக்குச் செலுத்த முடியும். பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிக்கப்பட்ட தேயிலை மீது கூடிய அழுத்தம் கொடுக்கவேண்டிய தேவை கொள்கை வகுப்போருக்கு ஏற்பட்டுள்ளது. தேயிலைத் தோட்டங்களின் தனியார்மயப் படுத்தப்பட்ட முகாமைத்துவம் தேயிலை உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு வழி வகுக்கும். பின்னர் இது 1995 இல் ஒரு தேயிலைச் செழிப்பு நிலையை உருவாக்கும்.

### சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள்

இலங்கையின் வர்த்தகக் கொள்கைகள் ஆராயப்பட்டு, உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் உலக வர்த்தக ஸ்தாபனம் இலங்கை மீது நிச்சயமாக ஒரு நல்ல அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கும் 'WTO' வின் ஸ்தாபிதத்துடன் இதுவரை நிலவிய வர்த்தக தடைகள் நீக்கப்பட்டு அல்லது குறைக்கப்பட்டு, எமது ஏற்றுமதியாளர்களுக்கு நல்லதொரு சந்தை வாய்ப்பு ஏற்படத்தப்பட்டுள்ளது. இந்த ஸ்தாபிதத்துடன் சம்பந்தப்பட்ட பலபக்க வர்த்தக உடன்படிக்கை அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஆடை ஏற்றுமதிக் கோட்டாக்களை கட்டம் கட்டமாக குறைத்து, அறிவுசார் சொத்துரிமையைப் பாதுகாத்து உற்பத்தி உரிமையினை அறிமுகம் செய்து, விவசாய மானியங்களையும், கைத்தொழில் தீர்வைகளையும் குறைப்பதற்கு வகை செய்யும். இந்த மாற்றங்கள் உலக வர்த்தகத்தை வருடம் ஒன்றிற்கு 25,000 கோடி அமெரிக்க டொலரால் உயர்த்தும் என 'WTO' உறுதியளித்துள்ளது.

ஜப்பான், சீனா தவிர்ந்த ஏனைய ஆசிய நாடுகள் 500 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வாய்ப்புக்களை மட்டுமே பெற்றுக் கொள்ளும் அதே வேளையில், ஐரோப்பிய யூனியன் 8000 கோடி டொலர் பெறுமதியான நன்மையைப் பெறும். சீனா 4000 கோடி டொலர் பெறுமதியான நன்மையை அடைந்து கொள்ளும். ஏனைய ஆசிய நாடுகளின் கொள்கை வகுப்போரும் வர்த்தக அமைச்சர்களும் தமது சர்வதேச வர்த்தக வளர்ச்சிக்கு 'WTO' வய்ப்புக்களை அளிக்கும் என எதிர் பார்க்கின்றன. எவ்வாறெனினும், அதிகரிக்கவுள்ள 500 கோடி டொலரும் (சீனா, ஜப்பான் நீங்கலாக) 100 கோடி சனத்தொகைக்கு அல்லது ஆசியாவின் அரைவாசிச் சனத்தொகைக்குப் பங்கீடு செய்யப்பட வேண்டும் என்பதையும் அவதானிக்க வேண்டும். எனவே, இவ்வாறான ஒரு நிலையில் இலங்கை மீதான இதன் தாக்கம் மிகக் குறைவானதாகவே இருக்க முடியும். இப்பொழுது 10 மிகப் பெரிய சந்தைகள் எழுச்சி கண்டு வருகின்றன. 2010 ஆம் ஆண்டளவில் இவற்றின் வருடாந்த இறக்குமதி ஏறக்குறைய 100,000 கோடி டொலராக அமையும்.

( 37 ஆம் பக்கம் பார்க்க)

# சந்தை நட்பு கொள்கைகள் : ஒரு மதிப்பீடு

லால் ஜயவர்தன

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

இது வெளிநாட்டு முதலீடுகளை கண் மூடித்தனமாக தாராளமயமாக்கும் வாஷிங்டன் கருத்தொற்றுமையிலிருந்து மாறுபட்ட ஓர் அணுகுமுறையாகும். இன்றைய சாவதேச சூழ்நிலையில், 'NIG' நாடுகளாக உருவாவதற்கு விரும்பும் வளர்முக நாடுகளுக்கு உள்ள ஒரே ஒரு பிரயோக ரீதியான தெரிவு வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்பதாக இருந்து வர முடியும். நேரடி வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பதுடன் இணைந்து, தெரிவு செய்யப்பட்ட சில துறைகளில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கூடாக தனியார் வெளிநாட்டு நிதியைக் கவர்ந்திழுக்க வேண்டிய அவசியத்தை கிழக்காசிய அனுபவம் எடுத்துக் காட்டுகிறது.

*(4) விலை தாராளமயமாக்கலும் மானியங்களும்*

கிழக்காசிய தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளில் வி[illegible] சந்தைச் சக்திகளைப் [illegible]பவித்து வந்த அதே வேளையில், சமூகக் குறிக்கோள்களுடன் அனுசரித்துச் செல்லக்கூடிய விதத்தில் பிரதான விலைகள் சீராக்கம் செய்யப்பட்டன. அதாவது, உயர் அளவிலான சேமிப்புக்களையும் முதலீடுகளையும் ஊக்குவிப்பதற்கும், மானியப்படுத்தப்பட்ட வட்டி விகிதங்கள் போன்ற வழிமுறைகளுக் கூடாக ஏற்றுமதிகளுக்கு ஊக்குவிப்புக் களை வழங்குவதற்கும் உணவில் சுய தேவை பூர்த்தியைப் எடுத்துவரு வதற்கும் என இது மேற்கொள்ளப் பட்டது.

கிழக்காசிய அனுபவத்தின் குறிப்பிடத்தக்க ஒரு சிறம்பம்சம் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்த சமூக முன்னுரிமைகளுக்கு ஆதரவாக அது சந்தைச் சக்திகளை பயன்படுத்தி வந்ததாகும். சந்தைச் சக்திகளிடம் முழு அளவில் சரணடைந்து விடு வதிலும் பார்க்க இது வேறுபட்டதாகும். ஜப்பானும் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட கிழக்காசிய நாடுகளும் பாரிய அளவிலான சமூக நட்டங்கள் எவையுமின்றி துரித வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் சாதித்துக் கொண்டுள்ளன என்பது இந்த அணுகுமுறையின் அனுகூல மாகும். எனவே, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சீர்திருத்த நிகழ்வுப் போக்குக்கு வெகுஜன ஆதரவை திரட்டிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. முன்னர் குறிப்பிடப்பட்ட ஜப்பானிய முகவர் நிறுவனத்தின் அறிக்கை இந்த விடயம் தொடர்பான ஜப்பானின் கண்ணோட்டத்தை பின்வருமாறு சுருக்கித் தருகின்றது:

> "செயல் திறன் மற்றும் நியாயத்தன்மை என்பன பொருளா தாரக் கொள்கையில் முன் னெடுத்துச் செல்லப்பட வேண்டிய முக்கிய குறிக்கோள்களாக இருந்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் இவை இரண்டுக்குமிடையில் ஒரு பிளவு காணப்படுகிறது. 1980 களில், பொருளாதாரக் கோட்பாடும் பொருளாதாரக் கொள்கையும் செயல்திறனை சாதித்துக்கொள்ளும் வழியில் மிகவும் தீவிரமாக நெறிப்படுத்தப் பட்டிருந்தன. இந்த அடிப் படையில், இது தனிச் சிறப்புமிக்க ஒரு காலப்பகுதியாக இருந்தது. ஆனால், இக்காலகட்டம் முடிவுக்கு வரவேண்டியிருந்தது. ஒட்டு மொத்த சமூகத்தினதும் சேம நலனை விருத்தி செய்யும் பொருட்டு, செயல்திறனுக்கும் நியாயத்தன்மைக்குமிடையில் நல்ல சமநிலையில் இருந்து வரக்கூடிய ஒரு கொள்கையே இன்றைய தேவை யாகும். அமைப்பு ரீதியான சீராக்கல் குறித்த உலக வங்கியின் அணுகுமுறை இந்தப்போக்குகளைப் பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் மாற்றமடைய வேண்டும்."

*'WIDER' - உலக வங்கி கருத்தரங்கு*

வளர்முக நாடுகளில் சந்தை நட்புக் கொள்கைகளை இயந்திரத் தனமான முறையில் பின்பற்று வதானது, கிழக்காசிய அணுகு முறையிலிருந்து அந்நாடுகள் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்களை இல்லாமல் செய்து விடும் என்பதே உலக வங்கியுடனான கூட்டு கருத்திங்கில் 'WIDER' அமைப்பு வலியுறுத்திய கருத்தாகும். உலக வங்கியின் முன்னாள் தலைவரும் ஜப்பானிய உதவி முகவரகத்தின் உப தலைவருமான திரு. ஷிராடோரி இந்த விவாதத்தில் ஒரு முக்கிய பங்களிப்பினை வழங்கினார். சந்தை தோல்வியடையக்கூடிய துறைகளில் அரசாங்கத் தலையீட்டை மேற் கொள்வதனை உலகவங்கியின் ஆராய்ச்சித் திணைக்களம் ஏற்றுக் கொண்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். எனினும், ஜப்பானிய அனுபவம் அரசாங்கம் ஓரளவு சக்தி வாய்ந்த பங்கினை வகிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். அரசாங்கத்தின் பங்கு பின் வருவனவற்றையும் உள்ளடக்க வேண்டும் என்பதனை ஜப்பானிய அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது:

- தனியார் பொருளாதார முகவர்களுக்கு வழிகாட்டுதல் களாக இருக்கக் கூடிய நடுத்தரகால குறிக்கோள்களை உருவாக்கிக் கொள்ளல்.
- பொருத்தமான பொருளாதார கொள்கை முகாமை.
- கல்வி, பயிற்சி என்பவற்றுக் கூடாக மனித மூலவளங்களை

அபிவிருத்தி செய்வதும், விஞ்ஞானத்தையும் தொழில் நுடபத்தையும் மேம்படுத்துவதும்.

❑ தேசிய சேமிப்புக்களை ஊக்குவித்து, அவற்றை உற்பத்திசார் முதலீடுகளுக்கு நெறிப்படுத்தக்கூடிய நிதி அமைப்பொன்றை ஸ்தாபித்தல்.

முடிவுரை

வெற்றிகரமான அபிவிருத்தியை எடுத்து வருவதற்கான வழி என்ன என்பது குறித்து இப்பொழுது சர்வதேச அளவில் விவாதங்கள் இடம் பெற்று வருகின்றன. 'WIDER' உலக வங்கி அனுசரணையுடனான கருத்தரங்கு இந்த விவாதத்தின் ஓர் அங்கமாக இருந்தது. உலக வங்கியின் நிறைவேற்றுக் குழுவில் ஜப்பான் முன்வைத்த கருத்துக்களின் விளைவாக, வங்கிக்குள் இப்பொழுது இந்த விடயம் குறித்து பாரிய ஆராய்ச்சித் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதே வேளையில், இலங்கையில் வாழும் நாம் “சந்தை-நட்பு” கொள்கைகளை மதிப்பீடு செய்வது எப்படி ? மூன்று தசாப்த காலமாக நிலவி வந்த கட்டுப்பாடுகளுடன் கூடிய கொள்கைகளின் விளைவாக ஒன்று குவித்திருந்த முக்கிய விலைத் திரிபுகளை நீக்கி, துரித வளர்ச்சியை எடுத்து வருவதற்கு இக்கொள்கைத் தொகுதி சக்திவாய்ந்த ஒரு நிபந்தனையாக இருந்து வருகின்றது என்பதனை இலங்கையின் அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. ஆனால், நாம் இங்கு ஒரு விடயத்தை மறந்துவிடக் கூடாது. இலங்கை கட்டுப்பாடுகள் நிலவி வந்த கால கட்டத்தில் வளமார்ந்த மனித மூலதன செல்வமொன்றைக் கட்டியெழுப்பியிருந்தது. இந்த வளம் இல்லாதிருந்தால் 1977 இன் பின்னர் ஏற்பட்ட துரித வளர்ச்சியையும் ஏற்றுமதி விரிவாக்கத்தையும் சாதிப்பது அநேகமாக சாத்தியமற்றிருக்கும்.

குறிப்பாக, 1960 தொடக்கம் 1979 வரையான காலகட்டத்தில் இலங்கையின் சமூக சேவைகள் தொடர்பான செலவினம் மொ.உ.உற்பத்தியின் 9% - 12% வீச்சுக்களில் இருந்து வந்துள்ளது. அதேவேளையில், இக்காலப் பிரிவின் போது இலங்கையின் இராணுவச் செலவும் பெருமளவுக்கு தாழ்ந்த மட்டத்தில் இருந்து வந்தது. இது மானிட அபிவிருத்திக்கு அவசியமான முதலீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கைக்கு வாய்ப்பினை அளித்திருந்தது. 1960-1979 காலப் பிரிவில் இலங்கையின் இராணுவச் செலவு மொ.உ.உற்பத்தியின் 1%ஐ விஞ்சியதாக அநேகமாக இருந்து வரவில்லை. இதே காலப்பிரிவில் பெரும்பாலான வளர்முக நாடுகள் தமது மொ.உ.உற்பத்தியில் சுமார் 5 சதவீதத்தினை (அதாவது, இலங்கையின் தற்போதைய அளவை) ஆயுதங்களுக்காக செலவிட்டு வந்துள்ளன. மேலும், தொடர்ந்து இரு தசாப்த காலமாக இலங்கை சுமார் 13% - 16% வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கொண்டுள்ளது. உயர் அளவிலான மானிட அபிவிருத்தியும் உயர் அளவிலான வேலையில்லாத் திண்டாட்டமும் இலங்கைக்கேயுரிய தனித்துவ அம்சங்களாக இருந்து வந்துள்ளன போல் தெரிகிறது. இது நிறைவேற்ற முடியாத அபிலாஷைகளையும், காலத்துக்குக் காலம் தோன்றும் வன்முறை எழுச்சிகளையும் உருவாக்கியுள்ளது. இவை, மறுபுறம் சமூகச் செலவினங்களில் வெட்டுக்களை எடுத்து வருகின்றன. அண்மைக் காலத்தில் இலங்கையின் சமூகச் செலவினம் 6% - 7% வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், அதன் விளைவாக மானிட அபிவிருத்தித் துறையில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது.

எனவே, சந்தை-நட்புக் கொள்கைத்தொகுதி குறைந்த பட்ச மட்டங்களிலான சமூகப் பாதுகாப்பினை எந்த வகையிலும் புறக்கணித்து விட முடியாது என்ற விடயத்துக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும். இதற்கு ஐ.நா. போன்ற உலக அமைப்புக்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும். மேலும் எமது வளர்ச்சி வீதுங்களை மேம்படுத்துவதன் மூலம் தொழில் வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வதற்கான வழிவகைகளையும் நாம் கண்டறிய வேண்டியுள்ளது. உலக பொருளாதார பின்னடைவு இடம் பெற்றுவரும் இன்றைய கால கட்டத்தில், சந்தைகளை விரிவாக்கிக் கொள்வதற்கு நாங்கள் பிராந்திய ஒத்துழைப்பையும் நாட வேண்டியுள்ளது. பரஸ்பர முன்னுரிமைத் திட்ட மொன்றுக்கூடாக இலங்கை-இந்திய பொருளாதார ஒத்துழைப்பை துரிதப் படுத்துவதன் மூலம் சார்க் அமைப்புக்குள் இதனை மேற்கொள்ள முடியும்.

மேலும், மூன்றாம் நிலைக் கல்வித் துறையில் எமது கல்விக் கொள்கைகளை பலப்படுத்துவதன் மூலமும், வட்டிவீத மானியங்களையும் உள்ளடக்கிய தெரிவு செய்யப்பட்ட உத்திகளை பின்பற்றுவதன் மூலமும், சிறிய மற்றும் நடுத்தர துறைகளில் சுய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலமும் கிழக்காசிய மாதிரி குறித்த எமது சொந்த வடிவத்தினை உருவாக்கிக் கொள்வதற்கும் நாம் முயற்சிக்க வேண்டும். ஜப்பானும் ஏனைய 'NIC' நாடுகளும் முன்னோடிகளாக நின்று துவக்கி வைத்த அரசாங்கத்துக்கும் தனியார் துறைக்குமிடையிலான ஆலோசனை கலப்பு முறையை உருவாக்கிக் கொள்வதற்கான ஒரு கட்டமைப்பும் எமக்கு அவசியமாகும். அனைத்துக்கும் மேலாக வடக்கில் இடம் பெற்று வரும் யுத்தத்தையும் பாரிய அளவிலான நிதி வளங்களின் விரயத்தையும் நாம் நிறுத்த வேண்டியுள்ளது. இந்த யுத்தம் ஒரு பொருளாதார விரயமாக மட்டும் இருக்கவில்லை. அது எண்ணற்ற மனித உயிர்களையும் அழித்து வருகின்றது. இறுதியில், வன்முறையை பூஜிக்கும் காட்டுமிராண்டிச் சமூகமொன்றை அது இங்கு விட்டுச் செல்ல முடியும்.

( 35 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதில் அரைவாசியைச் சீனாவே மேற்கொள்ளும். தற்போது ஜப்பான் நடைமுறைக் கணக்கு மிகையாக 13,000 கோடி டொலரைக் கொண்டுள்ளது. ஜனாதிபதி கிளின்டனின் பொருளாதாரக் குழுவின் தலைவர் கலாநிதி ரைசனின் கருத்துப்படி, ஜப்பானின் இந்த அபரிமித மிகைக்கு, அதன் இறக்குமதித் தடைக் கொள்கையே காரணமாகும். 'WTO', 'APEC' என்பவற்றின் கீழ் உலகளாவிய தாராளமயமாக்கல் நடைமுறையில் இருந்தபோதும், இன்னமும் பெரும்பாலான ஜப்பானிய சந்தைகள், வெளிநாட்டுப் போட்டியாளர்களுக்காக மூடப்பட்டே உள்ளன.

(மிகுதி அடுத்த இதழில்)

தலைமை அஞ்சல் அலுவலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு பெற்றுள்ளது. பதிவு எண் : QD/30/News/95


# பொருளியல் நோக்கு

பொருளியல் நோக்கு, கடந்த இருபது வருட காலமாக, சமகால அபிவிருத்தி மற்றும் சர்வதேச சமூக, அரசியல், பொருளாதார விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கான ஒரு களத்தினை அளித்து வந்துள்ளது. அது அண்மையில், சிறப்பு அக்கறைக்குரிய பல தலைப்புக்களை உளளடக்கிய விசேஷ அறிக்கைகளை வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

❖ இலங்கையில் வெளிநாட்டு முதலீடு
❖ சுற்றுலாத்துறையும் பொருளாதாரமும்
❖ இலங்கையில் பங்குச் சந்தை
❖ குடித்தொகையும் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியும்

பொருளியல் நோக்கு பிரதிகளை நாடெங்கிலும் உள்ள புத்தக நிலையங்களிலும் மக்கள் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

பிரதி விலை : ரூ. 10/- ஆண்டு சந்தா : ரூ.120/-
ஆண்டு சந்தா (வெளிநாடு),

தென்னாசியா - US$ 24
தென்கிழக்காசியா /ஆபிரிக்கா - US$ 24
ஜப்பான் - US$ 24
உலகின் ஏனைய பாகங்கள - US$ 33-

காசோலைகள் / காசுக்கட்டளைகள் "People's Bank Economic Review" என்ற பெயருக்கு வரையப்பட்டு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:

ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சிப்பிரிவு,
மக்கள் வங்கி, தலைமையலுவலகம், கொழும்பு 2.
தொலைபேசி : 327082, 436940.

பொருளியல் நோக்கு - மக்கள் வங்கியின்
ஒரு சமூகப் பணித்திட்டம்


உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம் பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

Printed at the Sumathi Book Printing (Pvt) Ltd, Colombo 14, Sri Lanka.